விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 03 செவ்வாய்க்கிழமை (17.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 088

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# அனைத்துக் கட்சி கூட்டத்தில் நேற்றுக் காரசாரமான விவாதம்

## தேர்தல் முறை மாற்றம் குறித்து

(கொழும்பு)

தேர்தல் முறை மாற்றம் தொடர்பான அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டம் நேற்று திங்கட்கிழமை காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது காரசாரமாக விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி.சில்வா உட்பட அனைத்து கட்சிகளினதும் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

24ஆம் பக்கம் பார்க்க

## ஏப்ரலில் பெறுபேறு

(கொழும்பு)

கடந்த ஆண்டு டிசம்பரில் நடந்த ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் வெளியாகும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மழை வெள்ளத்தால் விடைத் தாள்களை திருத்தும் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டது. எனினும் கடந்த வருடம் போன்று இம்முறையும் ஏப்ரல் முதல் வாரத்தில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம் இன்று

(கொழும்பு)

காணாமல் போனவர்களை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கை இன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

அதன்படி ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகளைக் கொண்டதாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த மாதம் இவ்வறிக்கை ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட இருந்த போதும் அது பிற்போடப்பட்டது. தற்போது அறிக்கை தயாரிக்கும் பணிகள் முழுமையாக

24ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவின் பாதுகாப்பை குறைக்கக்கோரும் சந்திரிகா

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவின் பாதுகாப்பை குறைக்குமாறு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கோரியுள்ளார்.

வெளிநாடு சென்றிருந்த சந்திரிகா நாடு திரும்பியவுடன் நாட்டின் நிலைமைகள் குறித்து ஆராய்ந்துள்ளார். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை பற்றி விசாரித்துள்ளார்.

மகிந்தவை பிரதமராக்கும் நோக்கில் நடைபெறும் கூட்டத்தொடர் குறித்து அதிருப்தியை வெளியிட்

24ஆம் பக்கம் பார்க்க



தமிழின அழிப்புக்கு நீதி கேட்டு ஜெனிவா ஐ.நா முன்பாக உலகத் தமிழர்கள் அணிதிரண்டு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமிழின அழிப்புக்கு அனைத்து வகையிலும் நீதி வேண்டும் என வலியுறுத்தி ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா முன்றலில் பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் தமிழ் மக்கள் உரிமை முழக்கத்துடன் ஒன்று கூடியுள்ளனர். இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொடும்பாவியை கட்டி இழுத்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டியதுடன் தமிழீழம் வேண்டும் என்ற கோஷத்தையும் எழுப்பினர்.

## காணாமல் போன எனது மகன் இணையத்தில் வெளியானார்!

### தாயார் நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

ஏழு வருடங்களுக்கு முன் இனந் தெரியாத நபர்களால் அழைத்து செல்லப்பட்டு காணாமற் போயிருந்த தனது மகனின் புகைப்படம் இணையத்தளத்தில் வெளியானது என தெரிவித்து தாயொருவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மன்னார் பள்ளிமுனையை சேர்ந்த தாய் ஒருவர் தனது மகனை மீட்டுத்தருமாறு சட்டத்தரணி ஊடாக மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

2008 அன்று மன்னார் பள்ளிமுனையை சேர்ந்த அன்ரன் சனிஸ்ரன் பிகிராடோ (வயது 24) என்

24ஆம் பக்கம் பார்க்க

## மண்ணெண்ணெய் அருந்திய குழந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் அருந்திய ஒன்றரை வயதுப்பாலகி சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

வல்வெட்டித்துறை தல்லிவத்தை பகுதியைச் சேர்ந்த விஜிதரன் கனிஷ்டா என்ற ஒன்றரை வயதுப் பாலகியே இவ்வாறு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 6

24ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் மனிதப் புதைகுழியை தோண்ட நீதிமன்றம் உத்தரவு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் காணப்பட்டிருந்த மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் நேற்று திங்களன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்ட பிரதேசத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் 80க்கும் அதிகமான மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டதன் பின்னர் அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டு, கண்டெடுக்கப்பட்டிருந்த மனித எலும்புக் கூடுகள் தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

இதனையடுத்து, இந்தப் பிரதேசத்தில் அகழ்வு வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று காணாமல் போனவர்கள் சார்பி

24ஆம் பக்கம் பார்க்க

## விருப்பு வாக்குத் தேர்தல் முறைமை நிறைவேற்று அதிகாரத்துக்கு ஒப்பானது

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியின் அதீதமான அதிகாரங்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள மக்களின் எதிர்ப்புக்கு இணையாக விருப்பு வாக்கு தேர்தல் முறை இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

விருப்பு வாக்கு தேர்தல் முறை மாற்றப்பட வேண்டும் என்பதே தனது தனிப்பட்ட விருப்பம் எனவும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல் முறையில் மாற்றங்

24ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் நுண்கலை பீட மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

தாமதிக்கப்படாத முறையான கல்விச் செயற்பாடுகள் வழங்கப்பட கோரி யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்று காலை 10.00 மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப்பீடம் முன்பாக நடைபெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த மாணவர்கள், தாமதிக்காத கல்வி முறைமை வேண்டும். முறையான பாடத்திட்ட ஒழுங்குகள் வேண்டும், 2 ஆம் ஆண்டிற்கான கல்விச் செயற்பாடுகள் ஏன் நடைபெறவில்லை?

பல் கலைக்கழக நிர்வாகம் மாணவர்களது நலனை கருத்திற் கொள்ள வேண்டும், முறையான பரீட்சை முறைமை வேண்டும், அரையாண்டுக்கான விரிவுரைகள் ஏன் இன்னமும் ஆரம்பிக்கப் படவில்லை?

செய்முறை பரீட்சைகள் தாமதிக்காமல் ஆரம்பிக்கப்படல் வேண்டும், மாணவர்களுக்காக நிர்வாகமா? நிர்வாகத்திற்காக மாணவர்களா? என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளினை ஏந்தியிருந்தனர்.

காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிய குறித்த ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது. (எ-4)

# தமிழக மீனவர்கள் குழு இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்பதற்காக 79 பேரை கொண்ட தமிழக மீனவர்கள் குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளது.

இந்த குழு நேற்றுமுன்தினம் இலஙகைக்கு வந்துள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புதுக்கோட்டை, கோட்டைப் பட்டினம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்ததுடன், அவர்களது படகுகளையும் பறிமுதல் செய்திருந்தனர்.

இந்த நிலையில், ஜனாதிபதியின் உத்தரவிற்கமைய குறித்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி மீனவர்களின் வாழ்வாதாரமாக கருதப்படும் படகுகளை அவர்களிடம் மீள ஒப்படைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்தமையையடுத்து தமிழக மீனவர்களின் படகுகளை திருப்பியனுப்புமாறு உத்தரவிட்டார்.

இதன்படி கோட்டைபட்டினத்தை சேர்ந்த 15 விசை படகுகளில் 12 படகுகளும், ஜெகதாபட்டினத்தை சேர்ந்த 9 விசைபடகுகளில் 7 படகுகளும், மேலும் இரு நாட்டுபடகுகளும் ஒப்படைக்கப்படவுள்ளன.

இதேவேளை காரைக்கால் மீனவர்களின் படகுகளை மீட்பதற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என அந்நாட்டு மீன்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-11)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வலிகாமம் வடக்கு பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் 14 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சு.சிவபாதரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலக கணக்காளர் ப.கஜேந்திரன், நிர்வாக உதவியோகத்தர் திருமதி ஆர்.திருச்செந்திநாதன், யாழ்.மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தலைவர் வி.ஸ்ரீசகதிவேல் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (எ)

# விக்கிக்காக காத்திருந்த மோடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, வீட்டுத்திட்டக் கையளிப்பு நிகழ்விற்காக வடக்கு முதல்வர் வரும்வரை வீதியில் காத்து நின்று, அவரை அழைத்துச் சென்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது. யாழ். கீரிமலையில் இந்திய அரசாங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட இந்திய பிரதமர், நரேந்திர மோடி பால் காய்ச்சி வீடுகளை கையளித் தமை தொடக்கம்பல சுவாரஸ்ய சம்பவங்கள் இடம் பெற்றமை குறிபபிடத்தக்கது. (எ-11)

# ஹெல உறுமயவின் யோசனைகள் ஏற்பு

(கொழும்பு)

19-வது அரசியலமைப்பு திருத்த வரைபுக்காக ஜாதிக ஹெல உறுமய முன்வைத்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர்,

தமது யோசனையை கடந்த அமைசசரவை கூட்டத்தின்போது சமர்ப்பித்ததாக குறிப்பிட்டார். ஏற்கெனவே அரசாங்கத்துக்கு பிரதம மந்திரியே தலைமை தாங்குவார்.

இந்தநிலையில் பிரதமரின் பணிப்பின்பேரிலேயே ஜனாதிபதி இயங்குவார் என்று யோசனை முன்வைக்கப் பட்டிருந்தது.

எனினும் தமது கட்சி அதனை ஆட்சேபித்தது. இந்தநிலையில் தமது யோச னைப்படி அரசாங்கத்தின் தலைவரும் நாட்டின் தலைவரும் ஜனாதிபதி யாகவே இருப்பார்.

எனினும் ஜனாதிபதியை நீக்கும் அதிகாரம் பிரதம மந்திரிக்கு இருக்கும் என்ற யோசனை தம்மால் முன்வைக்கப்பட்டது.

தமது யோசனையின்படி, தமது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தால் ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்ற முடியும்.

இதேவேளை 19-வது அரசியலமைப்பின்படி ஜனாதிபதியின் முழுமையான நிறைவேற்று அதிகாரங்கள் அகற்றப்படாது என்றும் பாட்டலி குறிப்பிட்டார்.

இதற்கிடையில் நிறைவேற்று அதிகாரமுறையை நீக்கினால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற வாதத்தையும் அவர் நிராகரித்தார். (எ-11)

# ஜேர்மன் உதவி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் மீளமைப்பு திட்டங்களுக்கு உதவியளிக்க ஜேர்மன் முன்வந்துள்ளது. ஜேர்மனின் இலங்கை தூதரகம் இதனை தெரிவித்துள்ளது.

ஜேர்மனிய தூதரகத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கடந்த 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம்செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


## Special General Meeting

The alumni faculty of medicine Jaffna is having Special General Meeting on 31st march 2015 Tuesday at 12.00 noon at board room of Faculty of Medicine, University of Jaffna to discuss an urgent matter.

All the members are expected to attend the Special General Meeting.

**Honorable secretary**
**The Alumni, Faculty of Medicine, Jaffna.** (9812)

## வாகன சாரதி உடன் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு மென்ரக வாகன சாரதி ஒருவர் (Light Vehicle) தேவை. மாத வேதனமாக ரூபாய் 30000/- வழங்கப்படும். இலவச தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு : கிஸ்ஸ் எலெக்ரோனிக்ஸ்
11 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**P.No : 021 222 3857** (9811)

## சந்திக்க விரும்புகிறோம்




மேற் படத்திலுள்ள ஸ்ரீ கந்தசாமிப்பிள்ளை ஐயா அவர்கள் பாண்டிச்சேரியில்வாழ்ந்த யாழ்ப்பாணத்து கதிரவேல் சுவாமிகளின் பேரன் ஆவார். இவர் இந்தியாவில் பாண்டிச்சேரியிலும், சிதம்பரத்திலும் வாழ்ந்தவர்.

ஆனால், தற்பொழுது இலங்கைக்கு வந்துள்ளார். இவரிடம் கதிரவேல் சுவாமிகள் சம்பந்தமான விபரங்கள் பெறுவதற்காக, இப் பெரியாரை சந்திக்க விரும்புகிறோம். கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி

(9810) தொடர்பு :- Tel : 0112360065


# பாராளுமன்றைக் கலைக்க இடமளிக்கப் போவதில்லை

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசமைப்பு மற்றும் தேர்தல் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும் என தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, ஏப்ரல் 23 ஆம் திகதிக்கு பின்னர் நாடாளுமன்றத்தை கலைக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

எதிர்கட்சித் தலைவர் நிமல் சிறிபாலா டி சில்வா இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தலைவர்கள், அரசமைப்பு மற்றும் தேர்தல் சீர்திருத்தங்கள் என்பவற்றை ஒன்றாக அறிமுகப் படுத்தப்படவேண்டும் என்ற முடிவையே எடுத்துள்ளனர் என்றும், தேர்தலுக்கு உடனடியாக செல்வதில்லை எனவும் தீர்மானித்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இது குறித்து பேச்சுக்களை தாம் மேற்கொண்டுள்ளனர் எனக்குறிப்பிட்டுள்ள எதிர்க் கட்சித் தலைவர், ஜனாதிபதி தமது கோரிககைகளுக்கு இணங்குவார் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

குறிப்பிட்ட இரு கோரிக்கைகளும பல தசாப்தங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்றபோதிலும் எந்த அரசாங்கத்தாலும் இவற்றை நடைமுறைப்படுத்த முடியவில்லை எனவும், தற்போது அனைத்து கட்சிகளும் இணங்கியுள்ளதால் இதுவே இறுதி வாய்ப்பு என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# மதுபான நிலையங்களின் அனுமதியை ரத்து செய்யத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 349 மதுபான விற்பனை நிலையங்களுக்கான அனுமதி பத்திரங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

மதுவரி திணைக்களத்தின் ஒழுங்குகளை மீறியமைக்காகவே இந்த ரத்து அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் மூடப்படும் மதுபான விற்பனை நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் புனித தலங்களுக்கு அருகில் அமைந்திருந்தவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய இடங்களில் முன்னரைக் காட்டிலும் தற்போது மதுபான நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவிற்கு அமைய நாளை முதல் இந்த மதுபானக் கடைகள் மூடப்படவுள்ளன.

பாடசாலைகள், விஹாரைகள், மத வழிபாட்டுத் தலங்களுக்கு அருகாமையில் இயங்கி வரும் மதுபான கடைகளே இவ்வாறு மூடப்படவுள்ளன.

பாடசாலைகள், விஹாரைகள், மத வழிபாட்டுத் தலங்களுக்கு 500 மீற்றருக்குள் அமைந்துள்ள் மதுபான கடைகள் மூடப்படவுள்ளன.

இவ்வாறு இயங்கி வரும் கடைகளை மூடி விடுமாறு ஜனாதிபதி, ஹலால் திணைக்கள ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு விசாரணை இலங்கைக்கு அபகீர்த்தி

## சந்திரிகா கூறுகிறார்

**(கொழும்பு)**

**இலங்கையில் 26 வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தில் இழைக்கப்பட்டதாக கூறப்படும் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துமாறு கோரிநிற்பதை இலங்கையில் வாழ்கின்ற சகலரும் எதிர்க்கின்றனர். அந்த கோரிக்கை இலங்கைக்கு அபகீர்த்தியானதாகும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**



லண்டனிலிருந்து வெளிவரும் ஐ.பி. டைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நா அமைப்பின் ஊடாக சர்வதேச விசாரணையை கோருவது இலங்கைக்கு ஏற்படுத்துகின்ற அபகீர்த்தியாகும். இலங்கையினால் மேற்கொள்ளப்படும் தேசிய விசாரணைக்கு சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்குவதே சிறந்ததாகும்.

அதேபோல, தேசிய விசாரணை முழு நாட்டுக்கும் தேவையில்லை. அது எமது நாட்டுக்கு செய்கின்ற அபகீர்த்தியாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)



**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(சி-342)

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
**021 222 8117, 0779008776**

**விற்பனைக்கு**
கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள 3 மாடிக்கட்டடம் விற்பனைக்கு உண்டு.
**தொடர்புகளுக்கு:-**
**077 873 6561**


## சோபித தேரரை பிரதமராக்க முயற்சி



ஏப்ரல் மாத இறுதிக்குள் பாராளுமன்றத்தை கலைக்குமாறு வலியுறுத்தி ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திலிருந்து விலகும் பட்சத்தில், பாராளுமன்றத்தை கலைக்காமல் பொது தேர்தலொன்றை நடத்தும் வரை தற்காலிக அரசாங்கத்தின் கீழ் அரசின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், பொறுப்பான அரசாங்கத்தின் பிரதமர் பதவியை வணக்கத்துக்குரிய மாதுலுவாவே சோபித தேரருக்கு வழங்க சுதந்திர கட்சியின் பிரபல நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இது தொடர்பாக சிங்கள ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர் ஒருவர், ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை விட்டு விலகி விட்டால் கூட்டணியின் தேசிய பட்டிய்லுக்கு மாதுலுவாவே சோபித தேரர் பெயரிடப்படும் என தெரிவித்துள்ளார்.

அவரின் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மற்றும் அத்துரலிய ரத்ன தேரரின் பிவித்துரு ஹெடக் தேசிய இயக்கம் ஆகியவற்றின் பொது வேட்பாளர்களின் ஜனாதிபதி தேர்தலுக்காக நாட்டை முன்னிலைப்படுத்துவதற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்களை ஒழித்தல் மற்றும் புதிய தேர்தல் முறைமையை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட 19ஆவது அரசியலமைப்பை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய பின்னர் பொது தேர்தல் ஒன்றை நடத்துவதாக முன்னாள் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்த யோசனைக்கு மாதுலுவாவே சோபித தேரர் ஏற்று கொள்ளாவிட்டால், பாராளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரரை பிரதமராக்குவதற்கான திட்டங்கள் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## மகளிர்தின நிகழ்வு

இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேவை நாடும் மகளிர் அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள ரிசிரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)


**அறிவித்தல்**

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம்:-06,ஆதன இலக்கம்: 30, முருகமூர்த்தி வீதி

வட்டாரம் 06 முருகமூர்த்தி வீதி ஆதன இலக்கம் 30 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய் கோவில்பற்று, சுதுமலை இறை 'துன்னலியன்' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 கொண்ட இவ்வாதனமானது சுதுமலை தெற்கு சாவற்கட்டைச் சேர்ந்த கந்தையா பெண் பாக்கியம் ஆகிய இவர்களால் வெளிப்படுத்தல் உறுதி மூலம் சந்தரலிங்கம் பெண் கண்மணி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் செல்வி. ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் நிறைவேறிய 4185 ஆம் இலக்க 22.01.2010 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். 'துன்னலியன்' நிலப்பரப்பு 01 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் சந்தரலிங்கம் பெண் கண்மணி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை ெப்யர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன். (9797)

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்


## இராசி பலன்

17.03.2015
பங்குனி 03, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
துவாதசி முன்னிரவு 11.09 மணிவரை
திருவோணம் மாலை 5.21 மணிவரை
இராகுகாலம் 3.19-4.49 மணிவரை
சுபநேரம் 10.49-12.19 மணிவரை

வளவன்

**மேடம்:** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்பெறுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** சுபகாரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பயணங்களால் பலனுண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்:** குறைவாகப் பேசினாலும் குறை கூறிப் பேசாமல் இருப்பது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை, தொழில் வளர்ச்சியில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம், போசன சுகக் குறைவான நாள்.

**கடகம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, முன்னேற்றம் கருதிய பயணமொன்று இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், சுவாரஸ்யமான நாள்.

**கன்னி:** இல்லத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, எதிர்பார்த்த தன வரவுகள் வந்து சேரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**துலாம்:** வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்:** விருந்தினர் வருகையுண்டு, இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, வருமானம் உயர்வடையும் நாள், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**மகரம்:** திடீர்ப் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பால் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**கும்பம்:** சுப விரயங்கள் கூடும் நாள் குடும்பப் பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, சஞ்சலங்கள் கூடும் நாள்.

**மீனம்:** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## பயத்தை எதிர்கொள்ளல்

...**நா**ம் எல்லா உறவுகளிலும் பாதுகாப்பை எதிர்பார்க்கிறோம். நாம் வசதியாக நிலைபெறுவதற்கு பாதுகாப்பு தேவைப்படுகிறது. இது உண்மையிலேயே நாம் மகிழ்ச்சியாக அனுபவிக்கும் ஒருவிதமான சிறை வாசம். மக்கள் சுதந்திரத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்; ஆனால், நான் சொல்கிறேன், அவர்கள் அதைக் கண்டு மிகவும் அஞ்சுகிறார்கள்; அவர்கள் சிறைப்படுத்தலையே மிகவும் விரும்புகிறார்கள். சிறையில் இருக்கும் வசதியான பாதுகாப்பு அமைப்பால் அவர்கள் சுதந்திரமாக இருப்பதாக நினைக்கிறார்கள்.

ஒரு சின்னக் கதை...

ஒரு சிறுமி ஒருநாள் அவள் தந்தையிடம் கேட்டாள், அப்பா! உத்தரவாதம் என்ற சொல்லின் பொருள் என்ன? தந்தை பதில் சொன்னார், அதன் பொருள் ஏதோ ஒன்றை நன்றாகச் செய்திருக்கிறார்கள். அது வெகுகாலம் நீடித்து இருக்கும். அன்று இரவு தூங்கச் செல்லும் முன் சிறுமி தந்தையை அழைத்து நல்ல இரவு உத்தரவாதமான அப்பா! என்றாள்.

நாம் அனைவரும் நமது வாழ்வில் தொடர்ந்து பாதுகாப்பைத் தேடுகிறோம். ஆனால், நாம் சுதந்திரத்தைத் தேடுவதாகச் சொல்கிறோம். நாம் உண்மையிலேயே சுதந்திரத்தைத் தேடுவோமாயின், ஏன் பாதுகாப்பைத் தேடுகிறோம்? ஏன் அச்சம்? உங்களிடம் பயம் இருக்கும் வரை நீங்கள் பாதுகாப்பைத் தேடுவீர்கள். அதுவரை சுதந்திரத்தை விரும்புவதாகச் சொல்லிக் கொண்டு நீங்களே உங்களை ஏமாற்றிக் கொண்டு திருப்தியடைந்து கொண்டிருக்கலாம்.

உங்களை வாழ்வின் முழு பாதுகாப்



பின்மை மீது வீசி எறிபவர் எவரோ, அவரே குரு ஆவார். அவரால் மட்டுமே உங்களுக்கு முழுச் சுதந்திரத்தை அளிக்க முடியும். அதனால்தான் அவருடன் நீங்கள் பாதுகாப்பற்று, அச்சத்தை உணர்கிறீர்கள். சுதந்திரம் அச்சத்தை உருவாக்குகிறது.

உங்களுடைய மற்ற உறவுகளில் நீங்கள் ஒருபோதும் முழுமையாக பாதுகாப்பற்று உணர்வதில்லை. ஏனெனில், எப்பொழுதுமே அங்கு கொஞ்சம் பேராசை, பயம் மற்றும் கோபம் ஆகியவற்றின் இழுபறி இருப்பதால் உறவுகளின் பழக்கமான வடிவமைப்பில் நீங்கள் நன்றாக நிலைபெற்று விடுகிறீர்கள். ஆனால், ஒரு குருவுடன் நீங்கள் முழுவதும் சுதந்திரமாக இருக்கிறீர்கள். அதனால் உங்களுக்கு பயமேற்படுகிறது.

ஒரு சின்ன கதை...

ஒரு மனிதன் 20 வருடங்கள் சிறையில் இருந்தான். அவன் விடுதலை

**ஆன்மீகம் 163**

பெறும் நாளில் மிகவும் கவலையாகவும் இறுக்கமாகவும் காட்சியளித்தான். சிறையில் இருக்கும் அவனது நண்பன் கேட்டான் உனக்கு என்ன ஆயிற்று? நீ ஏன் இவ்வளவு கவலையுடன் இருக்கிறாய்?. அவன் பதிலளித்தான், எனக்கு பயமாக இருக்கிறது. வெளியில் சென்று நான் என்ன செய்வேன்?

சிறை அவனிடம் அவ்வளவு திடமான ஒரு பாதுகாப்பு வடிவ அமைப்பை உருவாக்கிவிட்டது. அதனால் அவன் வெளியில் சென்ற பிறகு அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை! இதுவே ஒரே விதமான வடிவ அமைப்புகளிலும் பாதுகாப்பிலும் சிக்கிக் கொள்வதன் ஆபத்து.

ஒரு குருவானவர் நீங்கள் தேடும் பாதுகாப்பை ஒருபோதும் கொடுக்கமாட்டார். அவர் நீங்கள் தேடும் வடிவ அமைப்பை ஒருபோதும் கொடுக்கமாட்டார். நீங்கள் தேடும் பாதுகாப்பு கிடைக்காத போது, நீங்கள் உங்களுக்கு உள்ளேயே ஆழமாக மையம் கொண்டு வளர்வீர்கள். இழப்பிற்கு எதுவுமில்லை என்று தெரியுமாதலால் அச்சமின்றி வளர்வீர்கள். மேலும் இழப்பதற்கு எதுவுமில்லை என்பது தெரியும் பொழுது உங்களிடம் அச்சம் இருக்காது. (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



# அதிசய உலகம்

### உலகின் முதல் மனிதனின் உடல் பாகம் கண்டுபிடிப்பு!

உலகின் முதல் மனிதர்களில் ஒருவனது உடல் பாகம் எத்தியோப்பியாவில் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்கா நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியாவின் Afar நகர பகுதிகளில் சமீபத்தில் ஆராய்ச்சியாளர்கள் தீவிர ஆய்வில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இங்கு 'ஹோமோ சோபியன்ஸ்' என்ற இனத்தை சேர்ந்த மனித உடல் பாகங்கள் சமீப காலமாக அதிகமாக கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக Ledi-Geraru என்ற பகுதியில் சுமார் 48 லட்சம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஒரு மனிதனின் 'தாடை எலும்பை' (Jawbone) Chalachew Seyoum என்ற எத்தியோப்பிய மாணவன் கண்டுபிடித்துள்ளான்.



இதனை ஆய்வு செய்த அமெரிக்காவின் Navada பல்கலைகழக ஆராய்ச்சியாளர் கூறுகையில், கடந்த 1974 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட சுமார் 60 லட்சம் ஆண்டுகள் பழமையான குரங்கை போன்ற மனித தலைப்பகுதிக்கும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள தாடை எலும்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. எனவே இது மனித பரிணாம வளர்ச்சியின் மிக முக்கிய மாற்றங்கள் ஆகும் என தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து Arizona பல்கலைகழக இயக்குனரான William Kimbel கூறுகையில், இந்த தாடை எலும்பு பாதி குரங்கினத்தையும் பாதி மனித இனத்தையும் பிரதிபலிப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த புதிய கண்டுபிடிப்பு மனித இன பரிணாமங்கள் குறித்த ஆராய்ச்சியில் உள்ள சில மர்மங்களை நீக்க உதவும் என பிரித்தானிய பல்கலைகழக ஆராய்ச்சியாளர் Fred Spoor கூறியுள்ளார்.



# சமைப்போம் சுவைப்போம்

## காய்கறி இட்லி



**தே.பொருட்கள்:**

இட்லிகள்- 8

பெரிய வெங்காயம்- 2

தக்காளி- 1

குடமிளகாய்- 1

காரட்- 1

வேக வைத்த பட்டாணி- 1 கப்

பூண்டு- 2 பல்லு

உப்பு- தேவையான அளவு

சாம்பார் பொடி- 1 1/2 டீஸ்பூன்

**தாளிக்க:** நல்லெண்ணெய்- 2 டீஸ்பூன், கடுகு- 1 டீஸ்பூன்

வெள்ளை உளுத்தம்பருப்பு- 2 டீஸ்பூன், கறிவேப்பிலை- சிறிது

**செய்முறை:**

இட்லிகளைத் தயார் செய்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் தாளிக்க வேண்டியவற்றைத் தாளித்துக் கொண்டு வெங்காயத்தைப் பொன்னிறமாக வதக்கவும். இதனுடன் பூண்டையும் துருவிப் போட்டு அல்லது பொடியாகத் திருத்திப் போட்டு வதக்கவும். குடமிளகாயையும் பொடிதாக நறுக்கிக் கொண்டு, மற்ற காய்கறிகளையும் சேர்த்து உப்பு, சாம்பர்பொடி (சாம்பார் பொடிக்குப் பதில் காரப்பொடியும் போடலாம், சிறிதாகப் போட வேண்டும்) போட்டு வதக்கவும். காய்கள் வெந்தவுடன் சிவப்பு நிறக் கேசரி கலரைச் சிறிதளவு தூவி கலக்கவும். கொத்தமல்லியைத் தூவி இட்லிகளைச் சிறு துண்டுகளாக்கிக் கொண்டு காய்கறிக் கலவையுடன் சேர்த்து நன்றாக வதக்கவும். இப்போது சுவையான சூடான வித்தியாசமான காய்கறி இட்லி தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி ஆழியவளை கிராமத்தில் 20 வீடுகளுக்கு மின்சாரம் இல்லை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு ஆழியவளை கிராமத்தில் 20 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியேற்றம் இடம்பெற்ற பகுதிகளுக்கு இலவச மின்னிணைப்பு வழங்கப்படும் திட்டத்தில் மின்னிணைப்பைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தி மின்சார சபையிடம் வழங்கப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியுள்ள போதும் இதுவரை இலவச மின்னிணைப்பு வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

அத்துடன் மின்சார சபை அதிகாரிகளும் இதுவிடயத்தில் அக்கறையின்றி இருப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுசம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மின்சாரம் இதுவரை கிடைக்காத வீட்டு உரிமையாளர்களுக்கு மின்னிணைப்பை வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-3-64)




# பொறுமையாகவும் நம்பிக்கையுடனும் பணிசெய்ய வேண்டிய காலகட்டம் இது

## மாவை.எம்.பி. சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**நமது அர்ப்பணிப்புக்கள் வீண் போகக் கூடாது. நாம் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் பணி செய்ய வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். அது மக்களின் கைகளில்தான் இருக்கின்றது. இந்த நாட்டில் ஒரு அராஜக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்ததன் மூலம் எமது மக்கள் தலைமையுடன் இணைந்து மிக நேர்த்தியாக தீர்மானிப்பவர்களாக மாறியிருக்கிறார்கள் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**



தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வடமராட்சி கிழக்கிற்கான பணிமனையான நெய்தலகம் நேற்று முன்தினம் தாளையடியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கட்சியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் சூரியகாந் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழரசு கட்சியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராஜா மற்றும் பாராளு மன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், பாராளு மன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட், வடமாகாணசபை உறுப்பினர் சயந்தன் ஆகியோர் கலந்துகொண்டதுடன் பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள், வடமராட்சி கிழக்கு மக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.




மாவை. சேனாதிராஜா மேலும் உரையாற்றுகையில்,

வடமராட்சி கிழக்கில் எமது மக்களின் நலன்கருதி ஒரு கட்சிக் காரியாலயத்தை திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இனி இந்த பணிமனையின் ஊடாக மக்கள் தங்கள் தேவைகளை கருத்துக்களை எமக்கு தெரிவிக்க சந்தர்ப்பமாக அமைகின்றது.

நெய்தலகம் என்பது எமது பாரம்பரியத்தோடு, ஒழுக்கத்தோடு ஒட்டியதாக அமைகின்றது. சங்ககாலத்தின் நில ஒழுக்கங்களில் ஒன்றாக நெய்தலின் பண்பு நம்மோடு பயணிக்கின்றது.

இந்த மண் நமது உரிமைப் போராட்டத்தில் நிறைந்த அர்ப்பணிப்புக்களை செய்த மண். அந்த அடிப்படையில்தான் இந்த விழாவின் ஆரம்பித்திலேயே அர்ப்பணித்த குடும்பத்தை சேர்ந்த தாய் சுடரேற்றி ஆரம்பித்து வைத்தார். நமது அர்ப்பணிப்புக்கள் வீண் போகக் கூடாது. நாம் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் பணிசெய்ய வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். அது மக்களின் கைகளில்தான் இருக்கின்றது. இந்த நாட்டிலே ஒரு அராஜக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்ததன் மூலம் எமது மக்கள் தலைமையுடன் இணைந்து மிக நேர்த்தியாக தீர்மானிப்பவர்களாக மாறியிருக்கின்றார்கள். அதன் அடைப்படையில் இன்று மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. எமது நிலத்திற்கு இந்திய பிரதமர் வந்து போயிருக்கின்றார். அது ஒரு நல்ல சமிக்ஞை. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கலந்து கொண்ட நிகழ்வுகளில் எமது உணர்வுகள், உரிமைகள் தொடர்பாக புரிந்து கொண்டதன் அடிப்படையில் தன் கருத்துக்களை சாதகமாக வெளியிட்டிருக்கின்றார். தான் சில இடங்களில் மனம்நெகிழ்ந்துபோனதாக கூறியிருக்கின்றார்.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வின் நன்மைகள் இந்தியாவோடு ஒப்பிட்டு ஒரு சேதியை சொல்லி சென்றிருக்கின்றார். இந்த சந்தர்ப்பத்தில் இந்திய பிரதமரின் வருகையின் பின்னரான இராஜதந்திர நகர்வுகள் பற்றி நாம் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

நாமே அவர் வரவுக்கு அதாவது தமிழ் மக்களின் தீர்மானங்கள் தான் அவரின் இலங்கை வரவுக்கு காரணம். குறிப்பாக ஜனாதிபதியை மாற்றியது. நாம் மோடி சம்பந்தனின் தலைமையில் சந்தித்த பொழுது அவர் எம்மிடம் கேட்டார் நீங்கள் இந்தியாவை நம்புகிறீர்களா? என்று நாம் ஆம் என்றோம். அதன்படி எமது மக்களின்உரிமைகள், வாழ்வாதாரம், பொருளாதார தேவைகள் பற்றி வேண்டிக்கொண்டோம். அதற்கு இந்தியப் பிரதமர் நம்பிக்கை ஊட்டும் பதில்களை தந்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மானிப்பாய் மருதடியானின் மஹோற்சவம் 22 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 22 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ளது.

ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 5 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (இ)

## ஹயஸ்-மோ.சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்களுக்கு காயம்!



ஹயஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ் விபத்துச்சம்பவம் நேற்று முற் பகல் 10.30 மணியளவில் கே.கே. எஸ். வீதி இணுவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் ஏழாலை மயிலங்கேணியினைச் சேர்ந்தவர்களும் தெல்லிப்பழையில் தொழில் புரிகின்றவர்களுமாகிய குணா மற்றும் பிரபா ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

வேலையின் நிமிர்த்தம் தெல்லிப்பழையில் இருந்து யாழ்நகர் நோக்கி மோட்டார் சைக்கிளில் பிரஸ்தாப இரு இளைஞர்களும் வந்து கொண்டிருந்த போது யாழ்.நகரிலிருந்து தெல்லிப்பழை நோக்கி சென்று கொண்டிருந்த ஹயஸ் வாகனமுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் குறித்த இருவரும் வந்த மோட்டார் சைக்கிளும் மிகவும் சேதமடைந்ததோடு இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளினை சுன்னாகம் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

## கிளாரினட் இசைக்கச்சேரி யாழ்.பல்கலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை நடத்தும் தென்னிந்தியாவிலிருந்து வருகைதரும் கலைமாமணி எ.கே.சி.நடராஜாவின் கிளாரினட் இசைக்கச்சேரி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பெங்களூர் ரமேஸ்பாபு நாதஸ்வரமும் மன்னார்குடி கலைமாமணி எம்.ஆர்.வாசுதேவன் மற்றும் கோவிலூர் கலைமாமணி ஜி.கே.கல்யாணசுந்தரம் தவிலும் வாசிக்கவுள்ளனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசனுக்கு உதவி புரிந்த உத்தமி!



விக்கிரமாதித்தனுக்குச் சிறிதும் மனம் கோணாமல் வேண்டும் அளவு தாராளமாகச் செலவு செய்யலானாள் மதனமாலா.

தன்னிடம் மோகம் கொண்டு தன் மாளிகைக்கு வந்த நரசிங்கனை முன்போல் வரவேற்று உபசரிக்காமல் அவ்வப்போது ஏதேனும் காரணம் கூறி தட்டிக் கழித்து அவனை அனுப்பிவிட்டாள் மதனமாலா.

அவளுடைய உள்ளம் விக்கிரமாதித்தனிடம் முற்றிலும் லயித்திருந்தது.

மதனமாலாவின் மோகத்தில் மூழ்கியிருந்த விக்கிரமாதித்தன் தன்னோடு வந்தவர்களை பாடலி புத்திரத்திற்குத் திரும்ப அனுப்பிவிட்டான்.

அடுத்து சில நாட்கள் கடந்தன.

விக்கிரமாதித்தன் ஊருக்கு புறப்பட எண்ணியிருப்பதை மதனமாலாவிடம் கூறினான்.

அவள் அவனைப் பிரிய வேண்டிய நிலை வந்ததே என்று நினைத்து வருந்தினாள்.

மறுநாள் காலை விக்கிரமாதித் தன் காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு அருகில் இருந்த கோயிலுக்குச் சென்றான்.

அங்கே குபேரனைப் பிராத்தனை செய்தான் விக்கிரமாதித்தன்.

குபேரன் காட்சி அழித்தார்.

என்றும் அழியாத ஐந்து தங்கப் பதுமைகளை எனக்கு வழங்க வேண்டும் என்று அவற்றில் எந்தப் பாகம் சிதைந்தாலும்கூட தானாகவே அது வளர்ந்துவிட வேண்டும் என்று கோரினான்.

குபேரனும் அவன் கோரிக்கையை நிறைவேற்றிவிட்டு மறைந்தார்.

அப்பொழுதே அவன் முன் ஐந்து தங்கப் பதுமைகள் வந்து நின்று கொண்டிருந்தன.

அவற்றைக் கண்டு இவை மதனமாலாவுக்கு ஏற்ற பரிசு தான் என்று உள்ளம் பூரித்தான் விக்கிரமாதித்தன்.

பதுமைகளை அங்கேயே விட்டுவிட்டு விக்கிரமாதித்தன் தன் நாட்டுக்குப் புறப்பட்டுப் போனான்.

கோயிலுக்கு சென்ற விக்கிரமாதித்தன் வெகு நேரமாகியும் திரும்பி வரவில்லையே என்று எண்ணிய மதனமாலா கோயிலுக்குச் சென்றாள்.

ஆனால் அங்கே அழகான தங்கப் பதுமைகளைக் கண்டாள்.

ஆனால் விக்கிரமாதித்தனை காணவில்லை!

. அன்புக்கு உரியவனே அவரே போய்விட்ட பின் இந்தப் பதுமைகள் எனக்கு எதற்கு? என்று வெறுப்போடு மதனமாலா தன் மாளிகையை அடைந்தாள்.

ஏவலார்களை அனுப்பி காதலனைத் தேடச் சொன்னாள்.

எங்கு தேடியும் விக்கிரமாதித்தனைக் காணாமையால் ஏவலாளர்கள் மௌனமாக வந்தார்கள்.

சோக உருவானாள் மதனமாலா.

தன் காதலன் வருகைக்காக ஆறு மாதம் வரை காத்திருந்து........ அதற்குள் வந்து தன்னைப் பார்க்கவில்லையானால் தன் உயிரை இழந்து விடப் போவதாகவும் உறுதி பூண்டு அன்று முதல் விரதம் இருக்கத் தொடங்கினாள்.

மேலும் முன்பு செய்ததைக் காட்டிலும் அதிகளவில் தான தருமம் செய்யலானாள்.

தன் காதலன் பாடலி புத்திரத்தின் அரசன் விக்கிரமாதித்தன் என்பது மதனமாலாவுக்கு தெரியாது.

மதனமாலா ஒருநாள் யாசித்து வந்த ஒருவனுக்கு அந்தத் தங்கப் பதுமையின் கையை உடைத்து வழங்கினாள்.

மறுநாள் தங்கப் பதுமையின் சிதைந்த கை மீண்டும் வளர்ந்திருப்பதைக் கண்டு வியப்படைந்தாள் மதனமாலா.

எனவே நாள்தோறும் தங்கப் பதுமையின் உறுப்புகளை உடைத்து வருகிறவர்களுக்கெல்லாம் தானம் வழங்கிக் கொண்டிருந்தாள்.

நாட்கள் ஓடின. மதனமாலாவின் தர்மம் நாடு முழுவதும் பரவியது; இதர நகரங்களிலிருந்தும் பலர் வந்தனர்.

தத்தன் என்ற புலவர் மதனமாலாவின் வள்ளன்மையை அறிந்து பாடலிபுத்திரத்திலிருந்து வந்தார்.

காவியங்களையும் நீதி நூல்களையும் மதனமாலா ரசிக்கும்படி விளக்கிக் கூறினார்.

பாடல்களைக் கேட்டுக் கழித்த மதனமாலா தங்கப் பதுமைகளையும் கைகளையும் வேறு சில உயர்வான பொருட்களையும் புலவருக்கு வழங்கிக் கௌரவித்தாள்.

புலவர் அங்கிருந்த வேலையாட்களிடம் மதனமாலாவின் கவலையையும் விரதமிருப்பதன் காரணத்தையும் விசாரித்தார். அவர்கள் எல்லாவற்றையும் விபரமாக புலவரிடம் கூறினார்கள்.

தனக்கு கிடைத்த பரிசுப் பொருட்களை ஒரு ஒட்டகத்தில் ஏற்றிக்கொண்டு புலவர் பாடலிபுத்திரம் சென்றார்.

தனக்கு கிடைத்த தங்கம் முதலான பொருட்களை விக்கிரமாதித்த அரசனிடம் கொடுத்து வைப்பதே பாதுகாப்பு என்று எண்ணினார் புலவர்.

அரண்மனைக்குச் சென்று அரசனைப் பார்த்து தான் பிரதிட்டானத்தில் மதனமாலாவிடம் பெற்ற பரிசுப் பொருட்களையும் தங்கப் பதுமையின் கைகளையும் ஒப்படைத்து தனக்குத் தேவையானபோது பெற்றுக் கொள்வதாகச் சொன்னார் புலவர். மேலும் அரசே! அத்தகைய தரும குணம் கொண்ட தாசி மதனமாலாவைப் போன்றவளை எந்த நாட்டிலும் காண இயலாது.

## 03.2015 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1776 - அமெரிக்கப் புரட்சி: பிரித்தானியப் படைகள் மசாசுசெட்சின் பொஸ்டன் நகரை விட்டு அகன்றன.
- 1805 - நெப்போலியன் தலைவனாக இருந்த இத்தாலியக் குடியரசு, இத்தாலியப் பேரரசு ஆனது. நெப்போலியன் அதன் பேரரசன் ஆனான்.
- 1845 - இறப்பர் பட்டி (rubber band) கண்டுபிடிக்கப் பட்டது.
- 1861 - இத்தாலியப் பேரரசு (1861-1946) அமைக்கப் பட்டது.
- 1919 - றோவ்லட் சட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்வதற்காக மகாத்மா காந்தி சென்னை வந்தார்.
- 1950 - கலிபோர்னியா பல்கலைக்கழகம் ஆய்வாளர்கள் கலிபோர்னியம் என்ற 98 ஆவது தனிமத்தைக் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.
- 1958 - ஐக்கிய அமெரிக்கா வங்கார்ட் 1 செய்மதியை ஏவியது.
- 1959 - டென்சின் கியாட்சோ, 14 ஆவது தலாய்லாமா, திபெத்திலிருந்து வெளியேறி இந்தியா வந்து சேர்ந்தார்.
- 1966 - ஆல்வின் என்ற நீர்மூழ்கிக் கப்பல் காணாமற் போன ஐக்கிய அமெரிக்காவின் ஐதரசன் குண்டை மத்திய தரைக் கடற்பகுதியில் ஸ்பெயினுக்கருகில் கண்டுபிடித்தது.
- 1969 - கோல்டா மெயர் (Golda Meir) இஸ்ரவேலின் முதலாவது பெண் பிரதமரானார்.
- 1970 - மை லாய் படுகொலைகள் தொடர்பான தகவலகளை வெளியிடாமல் மறைத்த குற்றத்துக்காக அமெரிக்க இராணுவம் 14 இராணுவ அதிகாரிகள் மீது குற்றம் சாட்டியது.
- 1996 - இலங்கை அணி ஆஸ்திரேலியாவைத் தோற்கடித்து துடுப்பாட்ட உலகக் கிண்ணத்தை வென்றது.

### பிறப்புக்கள்

- 1881 - வால்ட்டர் ஹெஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1973)
- 1920 - ஷேக் முஜிபுர் ரகுமான், வங்காள தேசத்தின் தந்தை (இ. 1975)

### இறப்புக்கள்

- 1937 - ஒஸ்டின் சாம்பர்லேன், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (பி. 1863)
- 1956 - ஐரீன் ஜோலியோ-கியூரி, வேதியியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1897)
- 1983 - ஹால்டன் ஹார்ட்லைன், நோபல் பரிசு பெற்ற [illegible]

### ஷேக் முஜிபுர் ரகுமான்



ஷேக் முஜிபுர் ரகுமான் 1920 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி பிறந்தார். இவர் கிழக்கு பாகிஸ்தானின் வங்காள மக்களின் தலைவராக இருந்தவர். வங்காள தேசத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

அவாமி லீக் கட்சியின் தலைவராகவும் வங்காள தேசத்தின் முதலாவது ஜனாதிபதியாகவும் பின்னர் இறக்கும் வரையில் அந்நாட்டின் முதலாவது தலைமை அமைச்சராகவும் இருந்தவர். இவரும் இவரது குடும்பத்தினரும் 1975 இல் படுகொலை செய்யப்பட்டனர். இவர் குடும்பத்தில் உயிர்தப்பிய ஷேக் ஹசீனா 1996 - 2001 காலப்பகுதியில் வங்கதேசத்தின் தலைமை அமைச்சராக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

...தன் சகோதரர்களை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக்கொண்டு, கடுமையாக உழைக்கிறார். படிப்படியாக முன்னேறி, சகோதரர்களைவிட உயர்ந்த நிலைக்கு வருகிறார். அவரைப் பொறுத்தவரையில் சகோதரர்கள் விடயத்தில் யாரோ ஒருவர்" போல நடந்து கொண்டு அவர்களை ஒதுக்கிவிடுகிறார்.


ஆனாலும் அப்படியே இருந்து விட முடியாமல், சகோதரர்களுக்கு ஒரு பெரிய பிரச்சினை வருகிறது. அதிலிருந்து தப்பிக்க சகோதரரகள் அண்ணனின் உதவியை நாடுகிறார்கள். தங்கள் துரோகத்தை மன்னித்து, இக்கட்டான இந்த நேரத்தில் உதவவேண்டும் என்று வேண்டுகிறார்கள். ரஜினியின் மனம் மாறுகிறது. சகோதரர்களுக்காக களம் இறங்கி அவர்களின் எதிரிகளை துரத்தியடிக்கிறார். மனம் திருந்திய சகோதரர்கள், ரஜினியை தங்களுடன் சேர்ந்து இருக்கும்படி கேட்டுக்கொள்ள, அதை ஏற்க மறுத்துவிடுகிறார், ரஜனி. தன் வழியில் தன் மனைவி, குடும்பம் என்று வாழ்க்கையில் உயர்ந்து நிற்கிறார்.

இந்தக் கதையை விறுவிறுப்பாக படமாக்கியிருந்தார், ராஜசேகர்.

**பொங்கல் வெளியீடு**

பொதுவாக, பொங்கல் தினத்தன்று வெளியிடப்படும் ரஜினியின் படங்கள் பெரிய வெற்றி பெறும் என்று, விநியோகஸ்தர்கள் கருதினார்கள். எனவே, 14-01-1991 பொங்கலன்று படம் திரையிடப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன், படப்பிடிப்பு வேகமாக நடந்தது. ஆயினும், படம் முடிவடைய கொஞ்சம் தாமதமாகலாம் என்ற நிலை ஏற்பட்டது.

81


ரஜினி- கௌதமி படம் தர்மதுரை

**72 மணி நேரம் படப்பிடிப்பு**

இதை அறிந்த ரஜினிகாந்த், பட அதிபர்களின் வேண்டுகோளை ஏற்று இரவு - பகலாக படப்பிடிப்பில் கலந்து கொண்டார். 72 மணி நேரம் தொடர்ந்து நடித்தார்!

படப்பிடிப்பு நடந்த அதே வேகத்தில், "டப்பிங்", "ரீ ரிக்கார்டிங்" வேலைகள் மூன்றே நாட்களில் நடந்து முடிந்தன. திட்டமிட்டபடி பொங்கலன்று படம் திரையிடப்பட்டது. படம் முழுக்க ரஜினியின் உணர்ச்சிப் பிரவாக நடிப்பை ரசிக்க முடிந்தது. ஜெயிலிலிருந்து வந்த ரஜினி பாடும் **"அண்ணன் என்ன தம்பி என்ன! சொந்தம் என்ன பந்தம் என்ன!"** என்ற பாடல் பிரபலமானது. ரஜினிக்காக கே.ஜே.ஜேசுதாஸ் பாடியிருந்தார்.

படம் 25 வாரங்கள் ஓடி, வெள்ளி விழா கொண்டாடியது. ரஜினிக்கும் எனக்கும் உள்ள நட்பை யாராலும் பிரிக்க முடியாது என்று கமலஹாசன் கூறினார்.

கமலஹாசன் நடித்த **"அபூர்வ ராகங்கள்"** படத்தில் சிறு வேடத்தில் அறிமுகமான ரஜினி, பிற்காலத்தில் சூப்பர் ஸ்டாராக உயர்ந்தார். நடிப்பில் "உலக நாயகன்" என்று போற்றப்படுகிறார், கமலஹாசன்.

**நட்பு**

"அபூர்வராகங்கள்" படத்தில் நடிக்கும்போதே கமலும், ரஜினியும் நண்பர்கள் ஆனார்கள். இருவரும் வெவ்வேறு பாதையில் நடந்து சென்றபோதிலும், அவர்கள் இடையேயான ஆழமான நட்பு இன்றும் தொடருகிறது.

இருவரும் பல படங்களில் நடித்து, பிசியாக இருந்த காலக் கட்டத்தில், இருவருக்குமிடையே நட்புறவு இல்லை என்று ரசிகர்கள் நினைத்தனர். அதை ஒரு பேட்டியில் கமல் மறுத்தார். அவர் அப்போது கூறியதாவது:-

எனக்கும், ரஜினிக்கும் ஆகாது என்றும், ஒருவரை ஒருவர் விழுங்கப் பார்க்கிறோம் என்றும் எங்களது எதிரிகள் சில்ரும், எங்களுக்கும் "கோள்" மூட்டிவிடப் பார்க்கும் சிலரும் சொல்வது உண்டு. எனக்கும், ரஜினிக்கும் உள்ள நட்பு, சினிமா அந்தஸ்தையும் மீறி நிற்பதாகும். அந்த உயரத்துக்கு வந்து, எங்களை - எங்கள் நட்பை - எதுவும் செய்துவிட முடியாது.

*(தொடரும்)*





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து- 92**

...நான் இங்கே இருக்கேன்னு தெருவுல போற ஆளுக்கெல்லாம் தகவல் சொல்லுது பாயாசம்.

ஒரு போணி ஓரணான்னு அவ விக்க ஆரம்பிச்சதும் கஞ்சிப்பொழுதுக்குள்ள காணாமப் போயிருச்சு பாயாசம்.

பத்தே நாள்ல கருவாச்சி பாயாசத்துக்குக் கிறுக்குப் புடிச்சுப் போயிருச்சு ஊரு.

விடிய்ய பல்லு வெளக்காமப் பாயாசம் குடிச்சுப் பழகிருச்சு சொக்கத்தேவன்பட்டி. செலவெல்லாம் போக அவ கையில நித்தம் நிக்கிது ஒண்ணேமுக்கா.

கட்டையன் பதறிப் போனான்.

ஏய்! இப்படியே விட்டா ஈரு பேனாகிப் போகும். பேனு பெருமாளாகிப் போகும்.

அவ பாயாசச் சட்டியில பல்லியடிச்சுப் போடுங்கடா.

நீ சும்மா இருண்ணே. அவ பொழப்புல ஆப்படிக்கிறதுக்கு இன்னொரு வழி வச்சிருக்கேன்.

மறுநாள் பாயாசப் பானையத் தலையில சொமந்து கோழி கூப்புடக் கருவாச்சி தெருவுல எறங்கி நடக்க அதுக்கு முன்ன பாயாசம் வாங்கிக் குடிச்சுக்கிட்டிருக்கு ஒரு கூட்டம்.

அதே மாதிரி ஈயக்குண்டா, அதே மாதிரி போணி, வச்சு ஓரணாவுக்கு ரெண்டு போணின்னு ஊருக்கே ஊத்திக்கிட்டிருக்கா கன்னியம்மா.

ஊர்ல ஒரு மாதிரியான பொம்பள அவ.

முப்பது முப்பத்தைஞ்சு வயசிருந்தாலும் சும்மா செவ்வாழத்தாரு மாதிரி



சிலுப்பி நிக்கிறவ.

அவளுக்கும் வேற பொம்பளைகளுக்கும் தெரு[illegible] பண்ணிப்புட்டா. "தெரியாதா [illegible] வச்சிருக்கன்னு கேட்டுட்டா.

ஒனக்குத் தெரிஞ்சு அவன் ஒருத் தன்தாண்டி... எனக்குத்தான தெரியும் என்னிய வச்சிருக்கிற நாலு பேர்ல ஒம் புருசனும் ஒரு ஆளுன்னு.." இப்படிப் பதில் சொல்ற ஏடாகூடமான பொம்பள.

அவளுக்குக் கட்டையன் ஆளுக துட்டக் குடுத்துத் தட்டேத்தி விடவும் ஓரணாவுக்கு ஒரு போணின்னு விக்கிற பாயாசத்த இவ ஓராணவுக்கு ரெண்டு போணின்னு வித்து கருவாச்சி [illegible] போச்சு.

கைக்காசு கொறஞ்சு போச்சு.

செனமாடு தீவனமில்லாமக் கெடக்கு

சதசதசதன்னு ஈரமிருந்தும் உழுகாமக் கெடக்கு காடு.

காய்ச்ச(ல்) தடுமன்னு பத்துப் போட் டுக் கெடக்கு பெத்தபுள்ள.

இந்த வருசச் சம்பளம் வேற குடுக்கல கொண்ணவாயனுக்கு.

கொட்டத்துல சாணியள்ளி தூக்குச் சட்டியில கூழ் ஊத்தி வச்சுக்கிட்டு மேய்ச்சலுக்கு ஓட்டிட்டுப் போடா மகனே பசுமாட்டன்னு கொண்ணவாயனக் கூப்பிட்டா.

அவன் சாட்டக்கம்பத் திண்ணையில போட்டுட்டு ஒடிஞ்ச ஒடம்பு வளைஞ்சு நின்னு சொல்றான்.

சி...சி... சின்னாத்தா.. நான் ஊர்ல போயிக் க..க..க.. கல்யாணம் பண்ணிக்கு... கு... குடும்பம் நடத்தப் போறேன். ச..ச..ச..சம்பளத்தக் குடுத்திட்டா நான் வே..வே வேலைய விட்டு நின்னுக்கிறேன்.

அவன்கிட்ட எதிர்பாக்கல அவ அந்த வார்த்தைய.

காதுக்குள்ள பாஞ்ச முள்ளு கண்ணுக்குள்ள எட்டிப் பாக்குற மாதிரி அவ கண்ண விட்டுத் தவ்விருச்சு கண்ணீர்த்துளி ரெண்டு.

செத்தவடம் நெஞ்சப் புடிச்சு ஒக்காந்து போனவ நொட்டாங் கையில ரெண்டு கண்ணையும் தொடச்சுக் கிட்டா....

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளையடிக்கப்பட்ட பணம் வெகுவிரைவில் மக்களிடமாம்

## ரணில் கூறுகிறார்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவராலும் அவரது சகோதரர்களாலும் மகன்மார்களாலும் கொள்ளையடிக்கப்பட்ட பணம் வெகு விரைவில் மக்களுக்கு வழங்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மக்கள்பணத்தைக்கொள்ளையிட்டவர்களுக்கு தண்டனை விதிக்கப்படவில்லை என சிலர் குற்றஞ் சுமத்தி வருகின்றனர்.

கொள்ளையடித்தவர்களை தண்டிப்பதனை விடவும் கொள்ளை யிடப்பட்ட பணத்தை மீளவும் மக்களிடம் கொண்டு சேர்ப்பது முதன்மையானது.

இதன்மூலம் பொதுமக்கள் பணத்தை கொள்ளையிட்டவர் கள் தண்டிக்கப்படமாட்டார்கள் என அர்த்தப்படாது.

அனைத்து கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடன் தேசிய அரசாங்க மொன்று அமைக்கப்படும்.

அதனை விரும்பாதவர்கள் இருந்தால் அவர்களை மறந்து விட்டு ஏனையவர் களை இணைத்துக் கொண்டு இந்தப் பய ணம் தொடரப்படும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து வழங்கிய மக்கள் ஆணை ஒரு போதும் துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாது.

அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத் தப்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

சில அபிவிருத்தித் திட்டங்கள் மீளாய்வு செய்வதற்காக தற்காலிக அடிப்படையில் நிறுத்தப்பட்டுள்ளது. விரைவில் இந்த திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும் என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். கொழும்பு தொட்டலங்க பிரதேசத்தில் ஐக் கிய தேசியக் கட்சிக்கு புதிய அங்கத் தினர்களை இணை த்துக் கொள்ளும் நிகழ்வில் நேற்று முன்தினம் பங் கேற்ற போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (இ-5)

## பேசும் படம்-55

இடம்: A9 வீதி.



றோட்டு, மதகு, கடை எனப் பல தடையைத் தாண்டி முடித்துவிட்டார் இந்தச் சாரதி

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

**மின்னஞ்சல் :** valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
**தபால் முகவரி:** ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்: தவசீலன், பனிக்கன்குளம்.

# இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கின்றது!

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு அண்மையில் மேற்கொண்ட விஜயம் தொடர்பாக தொடர்ந்தும் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இலங்கையின் உள்விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்ள இந்தியா கதவை திறந்துள்ளதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.**

அரசியலமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கும் அப்பால் சென்ற அதிகார பகிர்வை வழங்குவது குறித்து இலங்கை கவனம் செலுத்த வேண்டும் என நரேந்திர மோடி கூறியமை இதற்கு உதாரணமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள அதிகாரங்களுக்கு மேல் அதிகாரங்களை வழங்குமாறு கூறுவது மிகவும் கெடுதியான நிலைமையாகும்.

இதனை அரசியல் பலவந்தம் என்றே நாங்கள் கருதுகிறோம்.

எந்த நாட்டின் தலைவரும் வேறு நாடு ஒன்றின் நாடாளுமன்றத்தில் உரையாற்றி, அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றுமாறோ, அதற்கும் அப்பால் செல்ல வேண்டும் என்றோ கருத்தை முன்வைக்கமாட்டார்.

எனினும் இலங்கைக்கு வந்த மோடி அப்படியான கருத்தை முன்வைத்தார். இது கெடுதியான நிலைமை, அதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையில்லை.

இலங்கை அரசியலமைப்பு சம்பந்தமாக மட்டுமல்ல, இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பாகவும் இந்திய பிரதமர் தேவையற்ற அழுத்தங்களை கொடுத்து வருகிறார்.

பலாலி விமானப்படையின் விமான நிலையத்தை சிவில் விமான நிலையமாக மாற்ற வேண்டும் அந்த விமான நிலையத்திற்கு இந்தியாவில் இருந்து சிவில் விமானங்கள் தரையிறங்க வேண்டும் எனவும் மோடி அழுத்தம் கொடுக்கின்றார். இது முழுமையாக வடக்கின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். சிவில் விமான நிலையம் இயங்கினால், அந்த இடத்தில் விமானப்படை முகாமை கொண்டிருக்க முடியாது.

இதே போன்ற நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலான அழுத்தங்களை இந்தியா கொடுத்து வருகிறது எனவும் வசந்த பண்டார மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தென்னாபிரிக்க அமைச்சர் கார் விபத்தில் உயிரிழப்பு!

தென்னாபிரிக்க மக்களின் விடுதலைக்காக போராடிய நெல்சன் மண்டேலாவின் இறுதி ஊர்வலத்தை மிக சிறப்பாகவும், பிரமாண்டமாகவும் ஏற்பாடு செய்த அந்நாட்டின் பொதுச்சேவை மற்றும் நிர்வாகத்துறை அமைச்சர் காலின்ஸ் சபானே கார் விபத்தில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இங்குள்ள லிம்போபோ மாகாணத்தின் நெடுஞ்சாலை வழியாக அதிகாலை அவர் காரில் சென்ற போது, குறுகிய வளைவில் எதிரே வந்த லொறி காலின்ஸ் சபானேவின் கார் மீது மோதியது. இதில் அவரும் அவரது இரு மெய்க்காப் பாளர்களும்சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

காலின்ஸ் சபானேவின் மறைவு தென்னாபிரிக்க அரசுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என ஜனாதிபதி ஜேக்கப் ஜுமா வெளியிட்ட இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இதேபோல் எதிர்க்கட்சிகளும் அவரது இறப்புக்கு அஞ்சலி தெரிவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)



## ஆக்கங்கள் கோரல்

கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியின் அமுதவிழாவையொட்டி ஞானதீபன் மலர் வெளியீடு எதிர்வரும் மேமாதம் இடம்பெறவுள்ளது. இந்த மலரில் பாடசாலை தொடர்பான தகவல்களையும் முன்னாள் அதிபர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் புகைப் படங்களை பாடசாலையின் சமூகத்தினர் தந்துதவுமாறும் அத்துடன் மலரில் இடம்பெறக் கூடிய ஆக்கங்களையும் பாடசாலை சமூகத் தினரிடம் இருந்து எதிர்பார்ப்பதாகவும் கல்லூரி அதிபர் அறிவித் துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவியை மகன் தடுத்து வைத்திருக்கும் குற்றச்சாட்டில் உண்மையில்லை! - ராஜித

**(கொழும்பு)** மாணவி ஒருவரை பலவந்தமான முறையில் தமது மகன் தடுத்து வைத்திருப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

எனது மகனின் பெயரைப் பயன்படுத்தி சேறு பூசல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் இதனை விடவும் அதிகளவில் சேறு பூசல்கள் இடம்பெறக்கூடும்.

நல்ல பெற்றோர் இவ்வாறான விடய ங்களை ஊடக சந்திப்புக்களை கூட்டி மக்களுக்கு வெளிப்படுத்தமாட்டார்கள்.

சேறுபூசல் தொடர்பில் சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

குறித்த மாணவி பலவந்தமான அடிப்படையில் தடுத்து வைக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முறைப்பாடு தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த மாணவி தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப் பெறும் போதும் அவருக்கு 16 வயதும் 11 மாதங்களுமாகும்.

16 வயதைத் தாண்டிய பெண் ஒருவர் தனக்கு விரும்பிய தீர்மானத்தை எடுக்க சட்டத்தில் இடமுண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுகாதார அமைச்சரின் மகன் எச்சத் சேனாரட்ன தமது மகளான திலினி ஆலோகா என்ற சிறுமியை பலவந்தமாக கடத்திச் சென்று தடுத்து வைத்திருப்பதாக அவரது பெற்றோர்களான காமினி ரணசிங்க மற்றும் தமினி ரொட்ரிகோ ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தம்மை கொன்றாலும் நீதிக்காக போராடப் போவதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (இ-5)

## மத்திய வங்கியின் ஆளுநர் மகேந்திரன் பதவி விலகல்?

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் வங்கிச் செயற்பாடுகளிலிருந்து தற்காலிகமாக விலகியிருக்க தீர்மானித்திருப்பதாக மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மூவரடங்கிய விசாரணைக் குழுவின் இறுதி அறிக்கை கிடைக்கப் பெறும்வரை அவர் விலகி இருக்க தீர்மானித்துள்ளார்.

இதேவேளை விசாரணைகள் முற்றுப் பெறும் வரை மகேந்திரன் விடுமுறையில் செல்வதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் அவ்வதிகாரி சுட்டிக்காட்டினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு தனது விசாரணை அறிக்கையை ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் வெளியிடுமென கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

விசாரணைக் குழுவின் பணிகள் நேற்று ஆரம்பமாகியதுடன், தினமும் கூடி பிரச்சினையின் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் ஆராயவிருப்பதாகவும் நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

திறைசேரி முறிகள் விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக சட்டமா அதிபர் காமினி பிட்டிபான தலைமையில் மகேஷ் களுகம்பிட்டிய. சத்திமல் மெண்டிஸ் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜே. வி. பி. உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் மேற்படி விசாரணை அறிக்கை கிடைக்கப்பெறும் வரை மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை பதவி விலக்குமாறு கோரி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பாதுகாப்பு செயலரை பதவி நீக்க வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி கோரிக்கை



பாதுகாப்புச் செயலாளர் பீ.எம்.யூ.டி. பஸ்நாயக்கவை அந்த பதவியில் இருந்து நீக்க வேண்டும் எனவும் அது குறித்து தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடவிருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க தெரிவித்துள்ளார். கடந்த வாரம் நடைபெற்ற தேசிய நிறை வேற்றுச் சபைக் கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

தற்போதைய பாதுகாப்புச் செயலாளர், பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள அவன் கார்ட் நிறுவனத்தின் தலைவர் வெளிநாட்டுக்கு செல்ல உதவும் வகையில் கடிதத்தை வழங்கியமை, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை நடத்தி வரும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் தமயந்தி ஜயரத்னவுக்கு விடுமுறை வழங்கியுள்ளதாக குற்றஞ் சுமத்தப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளர் செய்துள்ள இந்த காரியங்கள் சரியானதல்ல எனவும் அவர் வழங்கிய கடிதத்தில் அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் வெளிநாடு செல்வது அத்தியாவசியமானது என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் சந்திரிகா சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் தமயந்திக்கு பஸ்நாயக்க 6 மாதங்களுக்கு விடுமுறை வழங்கியுள்ளதுடன் அவர் தற்போது வெளிநாட்டிலுள்ளார்.

இந்த விடயங்கள் காரணமாக கடந்த வாரம் கூடிய தேசிய நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் பெரும் பரப்பரப்பு நிலவியது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, பாதுகாப்புச் செயலாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கோபமாக பேசியுள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஷங்க சேனாதிபதி வெளிநாடு செல்ல உதவும் வகையில் கடிதம் ஒன்றை வழங்கியமை தொடர்பில் சந்திரிகா, பாதுகாப்புச் செயலாளரிடம் வினவியுள்ளார்.

அத்துடன் விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை அலுவலகத்திற்கு சென்று கடிதம் ஒன்றை தயார் செய்வது பாதுகாப்புச் செயலாளரின் பணியல்ல எனவும் சந்திரிகா பஸ்நாயக்கவிடம் கூறியுள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவரது சட்டத்தரணி கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மூன்று பக்கங்களை கொண்ட கடிதத்தை முன்னாள் ஜனாதிபதி கூட்டத்தில் சமர்ப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வீரவன்சவை கைது செய்யுமாறு கடுவலை முதல்வர் முறைப்பாடு

திருமதி சசி வீரவன்ச முறைகேடு செய்து கடவுச்சீட்டை பெற உதவி செய்யாதவர் போல், முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச நடந்து கொள்வதாகவும் குற்றமிழைக்க உதவி செய்த குற்றச்சாட்டில் அவரை கைது செய்ய வேண்டும் எனவும் கடுவலை மாநகர முதல்வர் ஜீ.எச். புத்ததாச தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவுக்கு எதிராக முறைப்பாடு ஒன்றை செய்வதற்காக நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வந்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

போலியான ஆவணங்களை வழங்கி கடவுச்சீட்டை பெறுவது குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் பாரதூரமான குற்றமாகும்.

எனினும் விமல் வீரவன்ச இதனை துச்சமாக கருதி நடந்து கொள்கிறார். இதனால், குறித்த சட்டத்தை செயற்படுத்துமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்ததாகவும் புத்ததாச மேலும் தெரிவித்தார். (இ-5)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 36 சூரிசெவ் 9இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: BSC/ நில அளவையாளர் ஓமான்
தொ.இ: B/401

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 27
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L தனியார் டுபாய்
தொ.இ: B/406

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 27
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: O/L டென்மார்க் PR
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/407

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 53 சூரிசெவ் 12இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/409

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 9
உயரம்: 5'
தகைமை/தொழில்: GAQ/அரச தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/654

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 14
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSC/MSC லண்டன் PR
தொ.இ: G/655

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 24 சூரிசெவ் 2இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/
தொ.இ: G/659

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 15
தகைமை/தொழில்: A/L அரச தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: G/664

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
([illegible] கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பண்டிகை முற்கொடுப்பனவு பத்தாயிரமாக அதிகரிக்கும்

### அமைச்சர் கரு உறுதி

அரச ஊழியர்களின் பண்டிகை முற்கொடுப்பனவு 10ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட உள்ளது என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கு தற்போது பண்டிகை முற்கொடுப்பனவாக 5ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்கள் மற்றும் ஆடைகளின் விலைகளை கருத்திற் கொண்டு பண்டிகை முற்பணத் தொகையை உயர்த்துமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தன.

இதுவரை வழங்கப்பட்ட 5ஆயிரம் ரூபாவினை பத்தாயிரம் ரூபா வரையில் உயர்த்துமாறு கோரப்பட்டதாகவும் அந்தக் கோரிக்கையை அமைச்சர் ஏற்றுக்கொண்டதாகவும் அரச தனியார் தொழிற்சங்க பேரவையின் அழைப்பாளர் சமன் ரத்னப்பிரிய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த முற்பணத் தொகை பத்து மாதங்களில் மீள அறவீடு செய்யப்படவுள்ளது. எதிர்வரும் சித்திரை புத்தாண்டு காலத்தில் இந்த பண்டிகை முற்கொடுப்பனவு வழங்கப்படும என எதிர்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மத்தள விமான நிலையத்தை தனியார்மயப்படுத்தக்கூடாது

### நாமல் எம்.பி.கோரிக்கை



(கொழும்பு)

மத்தள விமான நிலையத்தையும் அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் தனியார்மயப்படுத்தக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே அம்பாந்தோட்டை மக்களின் நோக்கமாகும்.

ஒரு புறத்தில் மத்தள விமான நிலையத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் எஞ்சிய அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர்.

விமான நிலையம் மற்றும் துறைமுகம் ஆகியனவற்றை தனியார்மயப்படுத்தக் கூடாது என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெபரவெள பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் போராட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# அதிகாரப் பகிர்வின் மூலமே தேசிய ஒற்றுமை பலப்படும்

## முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் முஸ் லிம் மக்களின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வினை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக செயற்படு த்த வேண்டும் .அதிகாரப் பகிர்வின் மூலமே தேசிய ஒற்றுமையினை பலப்படுத்த முடியும் என தெரிவிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 13 இற்கு அப்பால் சென்ற அதிகாரப் பகிர்வு வேண்டும் என்ற இந்தியப் பிரதமர் மோடியின் கருத்தினை வரவேற்பதாகவும் கூறியுள்ளது.**



13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அதற்கு அப்பாற்பட்ட அதிகாரப் பகிர்வு பிரச்சினைக்கு தீர்வாக அமையுமென இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்திருந்த நிலையில் அது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டினை வினவிய போதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்லின மக்கள்,பல மொழிகள், மதமக்கள் வாழ்கின்ற இந்தியாவில் ஜனநாயகம் வலுப்பெற்றுள்ளதெனின் நல்லாட்சி முன்னெடுக்கப்பட்டு செல்கின்றதெனின் அங்கு மாநிலங்களுக்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமையே பிரதான காரணம். இலங்கையில் இரு மொழிகளும் 4 மதங்களும் மட்டுமே உள்ளன. ஆனால் இங்கு இன்றும் இனவாதம் மற்றும் மத அடக்குமுறை செயற்பாடுகள் தலைதூக்கியுள்ளன.

உண்மையிலேயே இலங்கைக்குள் ஒற்றுமை ஏற்பட வேண்டும என்ற காரணத்தினால்தான் இலங்கைக்கு இந்தியாவினால் 13ஆவது திருத்தம் வழங்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளு க்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். ஆயுதப் போராட்டத்திற்கு முடிவு ஏற்பட வேண்டும் என்ற காரணத்திற்காக இந்தியா இலங்கைக்கு மாகாண அதிகாரங்களை வழங்கியது. ஆனால் இலங்கையில் மத்திய அரசாங்கம் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை பிரிவினைவாத செயற்பாடாகவும் நாட்டை பிளவுபடுத்தும் செயற்பாடாகவும் எடுத்துக் கொண்டமையே பிரச்சினைகள் பலமடைய பிரதான காரணமாகியது.

13 ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவதால் வெறுமனே வடக்கு கிழக்கு மாகாணங்கள் மட்டுமன்றி அனைத்து மாகாணங்களும் அதன் நன்மையினை அனுபவிக்கும் வாய்ப்பு கிடைக்கும். ஆனால் மத்திய அரசாங்கம் தமிழ் முஸ்லிம் மக்களையும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தமது அடிமையாக வைத்துக் கொள்ளவே தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் முஸ்லிம் மக்கள் எதிர்பார்க்கும் காணிப்பிரச்சினைக்கான தீர்வு பெறப்பட வேண்டுமாயின் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்த வேண் டும். தமிழ், முஸ்லிம் மக்களின் இழப்புக்களை ஈடு செய்யவும் தமக்கான அரசியல் தீர்வினை பெற்றுக்கொடுக்கவும் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை அமுல்படுத்துவதோ அல்லது அதற்கு அப்பால் சென்ற அதிகாரப் பகிர்வே சிறந்த வழிமுறையாகும். இதனாலே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இக் கருத்தினை நாம் முழுமையாக வரவேற்கின்றோம். அதேபோல் இலங்கை அரசாங்கம் இனிமேலாவது 13 ஆவது திருத்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் வலியுறுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அமைச்சர் சம்பிக்க அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தல் சீர்திருத்தங்களை உள்ளடக்காமல் அரசமைப்பு மாற்ற யோசனைகளை நாடாளுமன்றத்தில் அரசாங்கம் சமர்ப்பித்தால் அதற்கு எதிராக வாக்களிக்கப் போவதாக மின் மற்றும் எரிசக்தி துறையமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.



இதேபோன்று ஜனாதிபதி, பிரதமரின் கீழ் செயற்படும் வகையில் அரசமைப்பில் மாற்றங்களை கொண்டுவர முனைந்தால் அதனையும் எதிர்க்க போவதாக தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 23 ஆம் திகதிக்கு பின்னர் நாடாளுமன்றத்தை கலைக்கப் போவதாக ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளமைக்கும் அவர் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். (இ-5)

## இந்தியப் பிரதமர் மோடியுடன் தொழிலாளர் காங்கிரஸ் சந்திப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

முன்னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான், தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்து சிவலிங்கம் மற்றும் பலர் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற இந்தச் சந்திப்பின் போது மோடியிடம் 3 விடயங்கள் முன்வைக்கப்பட்டதாக முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

இச்சந்திப்பு நன்மையானதாக அமைந்ததாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.ம.சு. முன்னணியின் தலைவராக மைத்திரியை ஏற்கவே முடியாதாம்

## வாசுதேவ எதிர்ப்பு

**(கொழும்பு)**

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் கூட்டணியின் தலைவராக்குவோம் என தெரிவிக்கும் முன்னாள் அமைச்சர் வாசு தேவ நாணயக்கார எம்மால் சில தவறுகள் கடந்த காலத்தில் இழைக்கப்பட்டமையினை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் கலந்து கொள்ளாமைக்கான காரணம் என்னவென்பதை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருக்கின்றமை அக்கட்சியின் தீர்மானம். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவராக மைத்திரிபால சிறிசேனவை தெரிவு செய்துள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குழுக் கூட்டம் கூடியிருந்த போதிலும் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சிகள இக்கூட்டத்தில் பங்குபற்றவில்லை.



ஐக்கிய தேசிய கட்சியின் துணையுடன் தேசிய அரசாங்கம் அமைத்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் தேசிய அரசாங்கத்தை முன்னெடுத்து செல்லும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் பிடியில் சிக்கியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு காவு கொடுத்து அடிமைப்படுத்த நினைக்கின்றார். இக் கோட்பாட்டினை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டினை பற்றி எமக்கு கவலையில்லை. ஆனால் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் தலைவுராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுள்ளமையினை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அடுத்த பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிட வேண்டும்.

அவ்வாறு போட்டியிடுவதாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கீழேயே போட்டியிட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மகிந்தவுடன் வழிபாட்டில் முன்னாள் அமைச்சர்கள்!



கண்டி மேல் நாட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர்நீத்த வீரர்களுக்கு புண்ணியம் வேண்டி கதிர்காமம் கிரிவேஹர விகாரையில் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றன.

இதனையடுத்து போதி மரத்திற்கு அருகில் போதி பூஜை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர், முன்னாள் அமைச்சர்கள், விமல் வீரவன்ச, காமினி லொக்குகே, பந்துல குணவர்தன, தினேஷ் குணவர்தன, குமார வெல்கம, உதய கம்மன்பில, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, ஊவா முன்னாள் முதலமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இலங்கையின் மலை நாடான கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த இறுதி மன்னனான விக்ரமராஜசிங்கன் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்ட பின்னர், கண்டி பிரதானிகளுடன் ஆங்கிலேய அரசு உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டது.

இந்த உடன்படிக்கை மூலம் முழு இலங்கையும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தேவாலயம் மீதான தாக்குதல் குறித்து போப்பாண்டவர் பிரான்சிஸ் வருத்தம்

(லாகூர்)

பாகிஸ்தானில் உள்ள இரண்டு தேவாலயங்களில் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல்கள் குறித்து போப் பிரான்ஸில் வேதனை தெரிவித்திருக்கிறார். கிறிஸ்தவர்கள் அடக்குமுறைக்கு ஆளாவது முடிவுக்கு வரவேண்டும் என்றார் அவர்.

கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழும் யௌஹானாபாத் வட்டாரத்தில் அந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் 14 பேர் கொல்லப்பட்டனர். 80இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

தாக்குதல்களுக்குப் பின்னர் சீற்றமடைந்த குடியிருப்பாளர்கள் சந்தேகத்திற்குரிய இரண்டு நபர்களைச் சரமாரியாக அடித்ததில், அவர்கள் உயிரிழந்தனர்.

180 மில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட பாகிஸ்தானில் இரண்டு விழுக்காட்டிற்கும் வீதத்திற்கும் குறைவாகவே கிறிஸ்தவர்கள் உள்ளனர். தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தோரில் தேவாலயத்தில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸ்காரர்களும் அடங்குவர். இரண்டு நுழைவாயிலிலும் காவலுக்கு இருந்த பொலிஸ்காரர்கள், அவர்களைத் தடுக்க மேற்கொண்ட முயற்சி பலனில்லாமல் போனதாகப் பொலிஸ்- பேச்சாளர் நபிலா கசன்ஃபர் கூறினார்.

பாகிஸ்தானியப் பிரதமர் நவாஸ் ஷெரீப், தாக்குதல்களைக் கடுமையாகச் சாடினார். மாநில அரசாங்கங்கள் மக்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு




### திருமதி சட்டநாதன் ஜெயலட்சுமி

(இளைப்பாறிய ஆசிரியை)

வேலணையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சட்டநாதன் ஜெயலட்சுமி கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப 4 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி நடராசா புனிதவதி

நவாலி வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா புனிதவதி கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சின்னத்தம்பி அருமைநாயகம்

நயினாதீவு 8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருமைநாயகம்நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 5 மணியளவில் Ogden Funeral Home,4164 Sheppard Ave E,Scarborough,ON M1S 1T3, Canada என்னும் முகவரியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி பூதத்தம்பி தவமணி

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பூதத்தம்பி தவமணி கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் St.Marylebone Crematorium,East End Road,London,N2 ORZ,United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

## குருதிக்கு கோரிக்கை

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப்பிரிவில் ஏ பொசிட்டிவ்மற்றும் பி பொசிட்டிவ்குருதி வகைகளுக்கத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த வகைக் குருதிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் இவ்வகைக் குருதியுடைய நோயாளர்களுக்கு அதனை வழங்குவதில் நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி குருதிவகைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு குருதிக் கொடையாளர்களை முன்வந்து இரத்த தானம்வழங்குமாறு இன்று முதல் குருதிக்கொடையாளர்கள் குருதியை வழங்க முடியுமெனவும் இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கி ஆளுநர் விடயத்தில் ஐ.தே.க.என்ன செய்யப்போகிறது

## எதிர்க்கட்சித்தலைவர் கேள்வி

**(கொழும்பு) எமது அரசாங்கத்தினை ஊழல்கள் நிறைந்ததாக விமர்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி மத்திய வங்கி ஆளுநர் விடயத்தில் என்ன செய்யப் போகின்றது என்று எதிர்க் கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா கேள்வி எழுப்பியுள் ளார். அத்துடன் நூறு நாட்கள் முடிவடைய முன் னரே பிரதமர ரணிலின் ஆட்சியின் ஊழல் வெளி யாகி விட்டது என்றும் குற்றம் சுமத்தியுள்ளார்.**

எதிர்க்கட்சி தலைவரினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த அர்ஜுன் மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநராக்கியது எவ்வாறு?

கடந்த அரசாங்கத்தின் மேல் தொடர்ச்சியான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் ஐக்கிய தேசியக் கட்சி சுமத்தி வந்திருந்தது. ஆனால் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அரசாங்கத்தில் மத்திய வங்கி ஆளுநரின் ஊழல் மோசடிகள் அம்பலமாகியுள்ளன. மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மௌனம் காப்பது குற்றவாளியினை பாதுகாக்க எடுக்கும் நடவடிக்கையாகும்.

நல்லாட்சி தொடர்பில் பேசும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியின் ஆரம்பமே பாரிய நிதி மோசடியுடன் ஆரம்பமாகியுள்ளது.

மத்திய வங்கியின் நிதியில் தனிப்பட்ட நபர்களின் தலையீடுகள் ஆகவும் பில்லியன் தொகையினை பணத்தொகை கொள்ளையடிப்பு சம்பவங்கள் இடம்பெறுகின்றதெனின் ஏனைய அரச காரியாலங்களில் எவ்வாறான குற்றச்செயல்கள் இடம்பெறும் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். நல்லாட்சி ஜனநாயகம் மக்கள் நலன்கள் என வாய் திறந்து பேசும் தேசிய அரசாங்கத்தின் அதன் நூறு நாட்கள் முடிவடைவதற்குள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உண்மை முகம வெளிச்சத்திற்கு வந்து விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளும் நிதி மோசடியையும் மக்கள் இனிமேல் உணர்ந்து கொள்வார்கள்.

அதே போல் இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த ஜனாதிபதி விசேட குழுவொன்றினை நியமித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி சரியான தெரிவுகளை மேற்கொள்ளு மாயின் ஜனாதிபதிக்கு இவ்விடயத்தில் சந்தேகம் ஏற்படாது.

ஆனால் இக் குற்றச்சாட்டுக்களை ஆராய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளமை ஐக்கிய தேசியக் கட்சியின் மீதுள்ள சந தேகத்தினை அதிகரித்துள்ளது என வும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# துரத்தும் நோய்களால் இயற்கை உணவுகளின் தேவைகள் அதிகரிப்பு

**Health Care மருத்துவ உலகம்**
**உங்கள் நலம் உங்கள் கைகளில்**

நல்லா இருக்கீங்களா....? என்று ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் போது நலம் விசாரித்துக் கொள்வது மரபு. இப்போது அந்த வார்த்தையுடன் கூடவே. சுகர் கண்ட்ரோல்ல இருக்கா...? முதுகுவலி, மூட்டுவலின்னு அவஸ்தை பட்டீங்களே... இப்போ பரவாயில்லையா? என்று கேட்கும் அளவுக்கு பெரும்பாலானவர்கள் வலிகளோடும் வியாதிகளோடும் வாழ்கிறார்கள். மாத பட்ஜெட் போட்டு குடும்பம் நடத்துபவர்கள் பலரது பட்ஜெட்டில் மாதம் தோறும் மருந்து, மாத்திரைகளுக்கும் தனியாக பட்ஜெட் ஒதுக்கப்படுகிறது. காலம் எவ்வளவோ மாறி இருக்கிறது.

முன்பெல்லாம் வீடுகளில் பண்டிகை நாட்களில்தான் இட்லி அல்லது தோசையை பார்க்க முடியும். இன்று சிற்றுண்டி வகைகளில் நூற்றுக்கும் மேல் உள்ளன. பீசா, பர்கர் என்று நொறுக்குதீனிகள் நூற்றுக்கணக்கில் வந்து விட்டன. சாப்பாட்டு வகையிலும் புரோட்டா, பிரியாணி, பாஸ்ட் புட் என்று பல வகைகள் வந்து விட்டன.

உணவில் புகுத்தப்பட்ட புதுமைகள் அனைத்தும் உடலுக்கு கேடு விளைவிப்பதாகவே அமைந்துள்ளன. உடல் ஆரோக்கியத்துக்கு ஒத்துவராததாகவே உள்ளன. எந்த மருத்துவரிடம் போனாலும் கண்டதையும் சாப்பிட்டு உடலை கெடுக்காதீங்க. நிறைய பழங்கள் சாப்பிடுங்கள், காய்கறி சாப்பிடுங்கள். முடிந்தவரை இயற்கை உணவாகவே சாப்பிட்டால் உடலுக்கு நல்லது என்று ஆலோசனை வழங்குகிறார்கள்.

ஆதி மனிதன் பழங்களை சாப்பிட்டு வாழ்ந்தான் என்று அறிகிறோம். ஆனால் இன்றைய தலைமுறைக்கு பழங்கள் ஏளன பொருளாகிவிட்டன. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு வரை வீடுகளில் சோளம், கம்பு, பயறு வகைகள் அதிகமாக உணவாக சாப்பிடப் பட்டது. கால மாற்றத்தில் சோளம் தின்பவர்கள் ஏளனமாக, ஏழையாக பார்க்கப்பட்டார்கள்.

இதனால் சமூக அந்தஸ்துக்காகவே அவர்கள் தங்கள் உணவு பழக்கவழக்கங்களை மாற்ற தொடங்கினார்கள். அது பெரும் ஆபத்தையும் கூடவே அழைத்துவரபோகிறது என்பது அப்போது அவர்களுக்கு விளங்கவில்லை. இப்போது உடல் ஆரோக்கிய குறைவுக்கு காரணம் உண்ணும் உணவும், உணவு முறைகளும்தான் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு முதன் முதலில் இரசாயன உரமாக யூரியா கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பிறகு அமோனியாவில் இருந்து கிடைக்கப்பெற்ற மற்ற உரங்களும் வந்தன. இந்த உரங்கள் மலிவாக கிடைத்ததோடு பயிர்களின் மகசூலும் அதிகமாக இருந்ததால் விவசாயிகள் கொஞ்சம் கொஞ்சமாக செயற்கையான இரசாயன உரங்களுக்கு மாறினார்கள். பயிர்களுக்கு போடப்படும் உரங்களும், தெளிக்கப்படும் மருந்து வகைகளும் மனிதர்களின் உடலை பாதிக்க தொடங்கியது.

இப்போது மீண்டும் பழைய உணவு முறைகளுக்கு திரும்புகிறார்கள். உணவே மருந்து. மருந்தே உணவு என்று புரிந்து கொண்டதால் இயற்கை உணவுகளுக்கு நல்ல மவுசு ஏற்பட்டுள்ளது. இரசாயன கண்டுபிடிப்புகள் மற்றும் பயிர் உற்பத்தியில் முன்னிலை வகித்த அமெரிக்கா, கனடா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் மீண்டும் பழைய இயற்கை விவசாய முறைகளை கடைப்பிடிக்க தொடங்கி உள்ளன.

அங்கு தொடங்கிய இந்த மாற்றம் கொஞ்சம் கொஞ்சமாக நம்மூரிலும் வளர்ந்து வருகிறது. காடு, கழனிகள் மீண்டும் பழைமை அடையாளங்களை அணிய தொடங்கி உள்ளன. இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் தொடங்கிய இயக்கம் வலுப்பெற்றுள்ளது.

செயற்கை உரம் போட்டு தயாராகும் உணவுகளை விட இயற்கை உரத்தில் விளைவிக்கப்படும்



தானியங்கள், சிறு தானியங்கள் சாப்பிட்டால்தான் இனி வரும் காலங்களிலாவது நோய்களில் இருந்து தப்பிக்க முடியும் என்று டாக்டர்கள் எச்சரிக்கை மணி அடித்துள்ளனர். அதனால்தான் பொது மக்களும் இயற்கை உணவின் பக்கம் திரும்ப தொடங்கி இருக்கிறார்கள.

கடைகளில் 'டீ' குடிப்பதை கௌரவமாக கருதுவதும் தள்ளுவண்டியில் கூழ் குடிப்பதை கேவலமாக பார்ப்பதும் இருந்தது.

ஆனால் இப்போது சர்வ சாதாரணமாக தள்ளுவண்டியில் விற்கும் கூழை ரசித்து ருசிக்கிறார்கள். நட்சத்திர ஹோட்டல்களில் கேழ் வரகு தோசை, கோதுமை தோசை, ராகி புட்டு என்ற பழைய உணவுகள் பட்டியலில் இடம் பிடித்துள்ளன.

ஆரோக்கியம் கருதி இந்த வகை உணவுகளை சாப்பிடுபவர்கள் ஏராளம். இயற்கை உணவு கடைகள் நகரில் ஏராளம் முளைத்து விட்டன. இந்த கடைகளில் இயற்கை உரங்கள் போட்டு விளைவிக்கப்படும். அனைத்து வித தானியங்களும் கிடைக்கின்றன. வரகு, தினை, சோளம், சாமை, கம்பு, குதிரைவாலி, சிறுபயறு, பருப்பு வகைகள், காய்கறிகள், அரிசி என்று எல்லாமே கிடைக்கின்றன.

விலை அதிகமாக இருந்தாலும் இந்த கடைகளில் விற்பனை அதிகம் நடக்கிறது. இயற்கை உணவகங்களும் பெருமளவில் திறக்கப்பட்டுள்ளன.

இந்த உணவகங்களில் தூதுவளை சூப், ஆவாரம்பூ சூப், கொள்ளு ரசம், வேப்பம்பூ ரசம், முடக்கத்தான் தோசை, வல்லாரை தோசை, ஆவாரம்பூ சாம்பார், நொறுக்கு தீனி வகைகளில் தினை அல்வா, ராகி பிஸ்கட், எள்ளுருண்டை, வரகு பணியாரம் உள்ளிட்ட பலவிதமான மூலிகை உணவுகள் உள்ளன.

நம் நாட்டில் பரவிகிடக்கும் மூலிகைகள் பரவி வரும் எத்தகைய நோய்களையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் மிக்கது. ஆனால் அவைகளை நாம் கண்டு கொள்வதும் இல்லை. அவற்றின் சிறப்பும் தெரிவதில்லை. முடக்கத்தான் தோசை - மூட்டு வலிக்கு சிறந்தது என்றும், வல்லாரை தோசை நினைவாற்றலை வளர்க்கும் என்றும், வெந்தய தோசை உடலுக்கு குளிர்ச்சி என்றும் கூறப்படுகிறது.

நீண்ட ஆயுளையும், ஆரோக்கயத்தையும் தரும் மூலிகை பயிர்களை வளர்ப்போம். மூலிகை உணவுகளை சாப்பிடுவோம்.

### சோற்றுக்கற்றாழை 'குமரிப்பெண்' :

சோற்றுக்கற்றாழை உடலுக்கு மிகவும் நல்லது. இதை மோரில் கலந்தும் குடிக்கலாம். தோலை நீக்கி விட்டு வளவள என்று இருக்கும் ஜெலியை நன்றாக கழுவி சாப்பிட்டால் உடல் அழகு கூடி இளமையான தோற்றத்தை கொடுக்கும்.

எனவே இதற்கு 'குமரிபெண்' என்ற புனை பெயரும் உண்டு. இந்த சோற்றுகற்றாழை சூப் சென்னையில் பல இடங்களில் விற்பனை சூடு பிடித்துள்ளது.

### அடம் பிடிக்கும் குழந்தைகள்

என்ன தான் இயற்கை உணவுகளுக்கு மவுசு கூடினாலும் குழந்தைகளும், இளவட்டங்களும் அதில் நாட்டம் கொள்ளவில்லை. நாற்பது வயதை கடந்தவர்கள் தான் துரத்தும் நோய்களுக்கு பயந்து இயற்கை உணவை விரும்பி சாப்பிடுகிறார்கள். ஆனால் பல் முளைக்காத குழந்தை கூட குர்குரேவை நொறுக்குகிறது.

உளுந்தை வேக வைத்து பனை வெல்லம் போட்டு இடித்து கொடுத்தாலோ, சுக்குபால், முளை கட்டிய பயரை கொடுத்தாலோ வேணாம்மா...! என்று அடம் பிடிக்கும் குழந்தைகள் தான் அதிகம்.

இந்த குழந்தைகளிடம் இயற்கை உணவின் அவசிய த்தை எடுத்து சொல்லி மாற்ற வேண்டிய பொறுப்பு பெற்றோர்களிடம் உள்ளது.

அப்படியானால் தான் வருங் காலத்தில் நமது சந்ததிகள் நம்மை போல் 50 வயது ஆனதும் அப்பாடா.. அம்மாடா... என்று சொல்லாமல் நோஞ்சானாக இல்லாமல் ஆரோக்கியமாக வாழும்....!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒருபுறம் கைலாகு கொடுத்துவிட்டு மறுபுறம் முதுகில் குத்தும் இலங்கை

## கருணாநிதி கடும் குற்றச்சாட்டு

(சென்னை)

**பிரதமர் நரேந்திர மோடி இலங்கையில் இருக்கும் போதே தமிழக மீனவர்கள் மீது அந்நாட்டு கடற்படை தாக்குதல் நடத்தியிருப்பது, ஒருபுறம் கைலாகு கொடுத்து கொண்டே மறுபுறம் முதுகில் குத்துவது போல இருக்கிறது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, வரலாற்றில் முதல் முறையாக யாழ்ப்பாணம் வரை சென்று இலங்கைத் தமிழர்களைச் சந்தித்து, அவர்களுக்காக இந்திய அரசின் சார்பில் கட்டப்பட்ட வீடுகளையெல்லாம் வழங்கி, இலங்கைத் தமிழர்களின் வரவேற்பை நம்முடைய பிரதமர் நரேந்திர மோடி ஏற்றுக் கொண்டிருப்பது குறித்தும் தமிழர்களைச் சமமாக நடத்தி, அனைத்து உரிமைகளுடனும் கூடிய கண்ணியமான வாழ்வுக்கு வழி வகுத்திட வேண்டுமென மோடி இலங்கை நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தியது குறித்தும் நமக்கு ஏற்பட்டிருக்கும் மன மகிழ்ச்சி நீர்க்குமிழி போன்றதுதான் என நிரூபித்திடும் வண்ணம், கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி விரட்டியதாகவும், அந்தத் தாக்குதலில் நம்முடைய மீனவர்கள் இரண்டு பேர் காயமடைந்ததாகவும் வந்துள்ள செய்தி நமக்குப் பெரும் வருத்தத்தைத் தான் ஏற்படுத்துகிறது.

இந்தியப் பிரதமர் யாழ்ப்பாணம் சென்று இலங்கைத் தமிழர்களைச் சந்தித்து பேசிய அதே நாளில், நம்முடைய மீனவர்கள் நடுக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது 5 ரோந்து கப்பல்களில் முப்பதுக்கும் மேற்பட்ட இலங்கைக் கடற்படையினர் அங்கே வந்திருக்கிறார்கள்.

இலங்கைக் கடற்படையினரைக் கண்டதும் அங்கிருந்து அவசரமாகப் புறப்படத் தயாரான போது, தமிழக மீனவர்களின் படகிலே இலங்கைக் கடற்படையினர் இறங்கி, படகின் உரிமையாளர் மற்றும் ஆறு மீனவர்களை கயிற்றால் தாக்கியதோடு, மீனவர்களின் வலைகளை அறுத்து, மீன்பிடி சாதனங்களையெல்லாம் கடலில் வீசி எறிந்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் சுமுகமாகப் பேசி, பிரச்சினையிலே முடிவு காணும் முயற்சியில் ஈடுபட்டாலும், அதிகாரிகளின் இப்படிப்பட்ட வன்முறைகள் இருநாட்டிற்கும் இடையே பிரச்சினையை ஏற்படுத்தவே செய்யும்.

மேலும் ஒருபுறம் கைலாகு கொடுத்துக் கொண்டே, மறுபுறம் முதுகில் குத்துவதைப் போலவும் இருக்கிறது என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தி விடும். எனவே இலங்கைக் கடற்படை அதிகாரிகளுக்குத் தக்க அறிவுரையை வழங்கிட இந்திய அரசு இலங்கை ஜனாதிபதிக்கு வலியுறுத்துவதே இந்தக் குழப்பத்திற்குத் தீர்வு காண உதவிடும் என்று நம்புகிறேன். இவ்வாறு கருணாநிதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ராகுல் காந்தியை உளவு பார்க்க மத்திய அரசு உத்தரவிடவில்லை

## வெங்கையா நாயுடு விளக்கம்

(டில்லி)

ராகுல் காந்தியை உளவு பார்க்க மத்திய அரசு உத்தரவிடவில்லை என்று பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல்காந்தி வசிக்கும் டில்லி துக்ளக் லேன் வீட்டுக்கு சென்ற பொலிஸார் அங்கிருந்தவர்களிடம் அவருடைய அங்க அடையாளங்கள் குறித்து பல்வேறு கேள்விகளை கேட்டனர். பாதுகாப்பு தணிக்கைக்காகவே பொலிஸார் இதுபோல் விசாரணை நடத்தினர் என்று டில்லி பொலிஸ் ஆணையர் பாஸ்சி குறிப்பிட்டார்.

எனினும் ராகுல்காந்தி வீட்டுக்கு பொலிஸார் சென்று விசாரணை நடத்தியது பெரும் பரபரப்பையும், சர்ச்சையையும் ஏற்படுத்தி இருக்கிறது. ராகுல் காந்தியை மோடி அரசு உளவுப்பார்ப்பதாக காங்கிரஸ் குற்றஞ் சாட்டியுள்ளது.

ராகுல்காந்தியின் அங்க அடையாளங்கள் குறித்து டில்லி பொலிஸார் விசாரணை நடத்தியது பற்றி பாராளுமன்றத்தில் நாங்கள் பிரச்சினையை எழுப்புவோம் என்று காங்கிரஸ் கூறியது. அதன்படி நேற்று காங்கிரஸ் கட்சி இவ்விவகாரத்தை பாராளுமன்றத்தில் எழுப்பியுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பாக மத்திய பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் வெங்கையா நாயுடு பாராளுமன்றத்திற்கு வெளியே பேசுகையில், காங்கிரஸ் கட்சியினர் இது குறித்து ஏன் பேசுகிறார்கள்? அவர்கள் என்னை உளவு பார்த்தார்கள். பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் அத்வானி, அமித்ஷா மற்றும் மோடியை உளவு பார்த்தனர்.

இப்போது பொலிஸார் வழக்கமான சோதனையே மேற்கொண்டுள்ளனர். இதில் எந்தவொரு தவறும் கிடையாது.

இதில் மத்திய அரசின் பங்கு எதுவும் கிடையாது என்று கூறியுள்ளார். ஆனால் இவ்விவகாரம் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் விளக்கம் தெரிவிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான குலாம் நபி ஆசாத் பேசுகையில், எனக்கு கடந்த 19 ஆண்டுகளாக இசட் பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது, ஆனால் இதுவரையில் எந்தவொரு வழக்கமான பரிசோதனையும் மேற்கொள்ளப்படவே இல்லை என்று கூறியுள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பாக டில்லி பொலிஸ் ஆணையர் பாஸ்சி மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் பேசியுள்ளார். (இ)

# அனைத்து மாநிலங்களிலும் பசு வதை தடுப்புச்சட்டம்!

## பா.ஜ.க.தீவிர முயற்சி

அனைத்து மாநிலங்களிலும் குறிப்பாக பா.ஜ.க. ஆளும் மாநில்ங்களில் பசு வதை தடுப்புச் சட்டத்தை அமுல்படுத்த பா.ஜ.க. தீவிர முயற்சி மேற்கொள்ளும் என அக்கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது.

ஹரியானாவைத் தொடர்ந்து ராஜஸ்தான் மாநிலத்திலும் பசு வதை தடுப்புச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பா.ஜ.கவின் பசு மேம்பாட்டுப் பிரிவுத் தலைவர் மாயங்கேஸ்வர் சிங் த ஹிந்து நாளிதழுக்கு அளித்த பேட்டியில், பிஹார் தேர்தலின் போது, பசுவதை தடுப்புச் சட்டம் கொண்டு வருவது குறித்து அறிவிப்பு தேர்தல் அறிக்கையி லேயே இடம்பெறும் என்றார்.

இவர் கடந்த 2014 ஒகஸ்டில் பிரதமர் மோடியை சந்தித்து பசு வதையை தடுக்க மத்திய அரசு சட்டம் கொண்டு வர வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் கட்சியின் துணைத தலைவர் கூறும போது, பசு வதையை தடுக்க வேண்டும் என்பது கட்சியின் கொள்கையாக இருந்தாலும், மத்திய அரசு இது தொடர்பாக சட்டம் இயற்ற வலியுறுத்தப்போவதில்லை. இப்பிரச்சினை சற்று உணர்வு பூர்வமானது. இதில் ஒருமித்த கருத்து எட்டப்பட வேண்டும். அப்போதுதான் மத்திய அரசிடம் இவ்விவகாரத்தை எடுத்துச் செல்ல முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

பாரதச் செய்தி

# ரயிலிலிருந்து சிறுமியை தூக்கி எறிந்த கொடூரன்

ஓடும் ரயிலில் இருந்து 8 வயது சிறுமியை வெளியே தூக்கி எறிந்த கொடூரனை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மத்திய பிரதேசத்தில் உள்ள ரத்லாமுக்கும்-மண்டிசோரிற்கும் இடையே ரத்லாம்-ஆக்ரா போர்ட் ரயில் நேற்று முன்தினம் இரவு சென்று கொண்டிந்தது. அப்போது, அந்த ரயிலின் பொது வகுப்பு பெட்டியில் அமர்வதில் முகமத் தஸ்லின் (வயது-45) என்ற நபருக்கும் சக பயணிகளுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இதில், கோபமடைந்த முகமத் தஸ்லின், சண்டையின் இடையே 8 வயது சிறுமியை ஓடும் ரயிலில் இருந்து தூக்கி வெளியே வீசி உள்ளார். உடனே விரைந்து வந்த ரயில்வே பொலிஸார், முகமத் தஸ்லீம் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே, தஸ்லீமால் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்த சிறுமி, சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது உயிருக்காக போராடி வருகிறார்.

ஓடும் ரயிலில் நடந்த இந்த கொடூர சம்பவம் பயணிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. (இ)

# பாலிவுட் நடிகர் சயீப் அலிகானிடமிருந்து பத்மஸ்ரீ விருது திரும்பப் பெறப்படுமா?

பாலிவூட் நடிகர் சயீப் அலிகானுக்கு வழங்கப்பட்ட பத்மஸ்ரீ விருதைத திரும்ப பெற்றுக் கொள்வது குறித்து, மத்திய அரசு பரிசீலனை செய்து வருவதாக தகவல்கள் தெரிவிககின்றன.

இதுகுறித்து மத்திய உள்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாவது, மும்பையில் உள்ள உணவகத்தில் தகராறில் ஈடுபட்டதற்காக சயீத் அலிகான் மீது மும்பை நீதிமன்றில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் மீது மேலும் சில குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இதைக் கருத்தில் கொள்ளாமல், அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது. சயீப் போன்ற சர்ச்சைக்குரிய நபர்களுக்கு வழங்கப்பட்ட பத்மஸ்ரீ விருதைத் திரும்ப பெற வேண்டும் என சமூக ஆர்வலர் சுபாஷ் அகர்வால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் உள்துறை அமைச்சகத்திற்கு மனு அனுப்பியிருந்தார்.



சயீப் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு தொடர்பாக, அறிக்கை அளிக்குமாறு கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதியே மும்பை பொலிஸாருக்கு உள்துறை கடிதம் எழுதியது. ஆனால் இது வரை மும்பை பொலிஸார் பதிலளிககவில்லை. அகர்வாலின மனுவைத தொடர்ந்து விரைவல் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருககு மத்திய அரசு கேட்டு கொண்டதாக உள்துறை வட்டார தகவல் கள் தெரிவிக்கின்றன. இது தவிர மேலும் சர்ச்சைக்குரியவர்களிடம் இருந்து பத்மஸ்ரீ விருதுகளை திரும்பப் பெற வேண்டும் என சுபாஷ் அகர்வால் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அனுமதி பத்திரங்களை வழங்க ஆணையாளர் நடவடிக்கை

(மல்லாவி)

வடக்கு மாகாணத்திலுள்ள முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களில் காணி அனுமதி பத்திரங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 12 ஆயிரம் பேருக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க் கிழமையும் அந்தந்த மாவட்ட செயலகங்களில் வைத்து காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக காணி ஆணையாளர் நாயகம் கி.ஏ.ராஜபக்ஷவினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண காணி ஆணையாளர் எஸ்.தயானந்தன் தெரிவித்துள்ளார்.

மேற்படி மாவட்டங்களைச் சேர்ந்த காணி அனுமதிப்பத்திரங்கள் இல்லாதவர்களிடம் இருந்து தரவுகள் பெறப்பட்டு அவை பூர்த்தி செய்யப்பட்ட நிலையிலேயே 12 ஆயிரம் பேருக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் காணி அனுமதிப்பத்திரங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளி.மாவட்ட கரைச்சி பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

அதே தினத்தில் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு பிற்பகல் 2 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட மக்களுக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் அன்றைய தினம் மன்னார் மாவட்ட மக்களுக்கு பிற்பகல் 2 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலகத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து வவுனியா மாவட்ட மக்களுக்கு பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியா மாவட்டச் செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளவர்களின் பெயர் விபரப்பட்டியல் அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம சேவையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2-15)

# மோ.சைக்கிள் மோதி சிறுவன் படுகாயம்!

## பரமன்கிராய் சந்தியில் சம்பவம்

(கனகபுரம்)

வீதியோரத்தில் பேருந்திற்காக காத்துநின்ற சிறுவனை மோட்டார் சைக்கிள் மோதித்தள்ளியதில் கழுத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 9 மணியளவில் பூநகரி பிரதான வீதியிலுள்ள பரமன்கிராய் சந்தியில் நடைபெற்றுள்ளது.

இதில் பரமன்கிராயைச் சேர்ந்த வசந்தகுமார் சங்கீதன் (வயது-10) என்ற சிறுவனே படுகாயம் அடைந்தவராவார். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி பிரதான வீதியின் ஓரத்தில் சாவகச்சேரி செல்வதற்கு பேருந்திற்காகக் காத்து நின்ற சிறுவனை அவ்வழியாக வேகமாகப் பயணித்த மோட்டார்சைக்கிள் மோதித்தள்ளி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதன்போது மயக்கம் அடைந்த சிறுவனை வீதிவழியாக பயணித்தவர்கள் பூநகரி வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

பின்னர் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுமேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அன்றைய தினமே அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (அ-2-259)

# பூம்புகார் கிராமத்தின் தமிழர் காணிகளை சுவீகரிக்கும் வனஇலாகா அதிகாரிகள்!

(குருமன்காடு)



**காணிகளை வனஇலாகா திணைக்களத்துக்கு உரிய காணிகள் என்று அடையாளம் இட்டு அக்காணிகளை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை வனஇலாகா அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் அச்சமும் கவலையும் கிராம மக்கள் அடைந்துள்ளதாக கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா, பூம்புகார் கண்ணகி விளையாட்டுக்கழக விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட போதே ஆனந்தன் எம்.பியிடம் அக்கிராம மக்கள் இதனை தெரிவித்துள்ளனர். அம்மக்கள் கூறியவை வருமாறு,




1977 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு, அங்கிருந்து இடம்பெயர்ந்து வவுனியா பூம்புகார் கிராமத்தில் குடியேறி வசித்து வந்த நிலையில், தொடர் போர்ச்சூழல் காரணமாக நான்கு தடவைகள் (1990, 1994, 1996, 2003 ஆண்டுகள்) இடம்பெயர்ந்து, மடு, தட்சணாமருதமடு, முள்ளிக்குளம், கனகராயன்குளம், முள்ளிவாய்க்கால் ஆகிய இடங்கள் வரை சென்றோம்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் குடும்ப அங்கத்தவர்களை இழந்து, பெரும் சொத்தழிவுகளை சந்தித்து, எவ்வித வாழ்வாதார உதவிகளும் இன்றி மீளக்குடியேறியிருக்கும் நிலையில், தற்சமயம் நாம் குடியிருக்கும் காணிகளையும், மேட்டுக்காணிகளையும் சுவீகரிப்பதற்கு வனஇலாகாவினர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

இவற்றில் கடந்த கால அசாதாரண சூழல்கள் காரணமாக இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்று இன்றுவரை நாடு திரும்ப முடியாதுள்ள 22 குடும்பங்களுக்குரிய காணிகளும் உள்ளடங்குகின்றன.

மேலும் வவுனியா பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட எல்.டி.ஓ அனுமதி பத்திரங்கள், பற்றுச்சீட்டுகள் உள்ள காணிகளும் அடங்குகின்றன.

தமக்கு சொந்தமான காணிகளில் தாம் குடியிருப்பதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்தும் வனஇலாகா அதிகாரிகள், தமது பிரச்சினையை காது கொடுத்துக் கேட்பதாயில்லை என்று கவலை தெரிவித்த கிராம மக்கள், தமது கிராமத்துக்கு அண்மையாகவுள்ள பாழடைந்துள்ள குளத்தை புனரமைதது வழங்கினால் அக்குளநீர் தமது வாழ்வாதாரத்தொழிலான விவசாய செய்கைகளுக்கு பெரிதும் நன்மை பயக்கும் என்றும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அம்மக்களுக்கு ஆனந்தன் எம்.பி.கூறுகையில்,

வன்னிமாவட்டத்தில் பல ஆயிரம் ஏக்கர் கணக்கான காடுகளை அழித்து பெறுமதிமிக்க பயன்தரும் மரங்களை விறு இலாம்ாய்டி வருவோரை கைகட்டி வாய்பொத்தி நின்று வேடிக்கை பார்க்கும் வன இலாகாவினர், தினசரிக்கூலிக்கு தமது அன்றாட வாழ்க்கையை நடத்தும் மக்களின் காணிகளை சுவீகரிக்க முயல்வது அநீதியான செயலாகும்.

இனக்கலவரங்கள், போர்ச்சூழலகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை சுவீகரிக்கும் இத்தகைய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த புதிய அரசுக்கு அழுத்தம் கொடுத்து உரிய தீர்வை பெற்றுத்தருவோம் என்றும் தெரிவித்தார். (அ-2-250)






கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் பண்பாட்டு விழா கடந்த 10 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் இறுவெட்டு ஒலி நாடா கௌரவம், இசையமைப்பாளர்கள் கௌரவம், வாத்தியக் கலைஞர்கள் கௌரவம், பாடலாசிரியர்கள் கௌரவம், பாடகர்கள் கௌரவம் ஆகியவையும் நடைபெற்றன.

(படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் திருத்தங்களில் சூழ்ச்சிகள் வேண்டாம்!

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

அரசியல் சாசனத் திருத்தங்களின் ஊடாக மககள் கருத்துக்கள் மாத்திரமே நடைமுறைப் படுத தப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய சுட்டிக்காட்டியுள்ளது. அரசியல் சாசனத் திருத்தங்களின் ஊடாக சிலர் பல்வேறு சூழ்ச்சிகளை முன் னெடுக்க முயற்சிப்பதாக மின் வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளாா்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது நோக்கமாக இருக்கக் கூடாது. ஜனாதிபதி முறைமை ஜனநாயகப் படுத்தப்பட வேண்டும்.

இதேவேளை தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளிக கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அரசியல் சூழ்ச்சித் திட்டங்கள் சிலர் மனதில் இருக் கும ஆசைகளை நிறை வேற்றிக் கொள்ள அனுமதிக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளாா்.

19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்த கட்சித் தலைவர்கள் இணங்கினார்கள் என அவர் மேலும் தெரிவித்தாா். (இ-5)

# சு.கவினது பெரும்பான்மை உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மகந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவளிப்பதாக காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிசாந்த முத்து ஹெட்டிகம தெரிவித்துளளாா்.

காலியில் நேற்று முன் தினம் ஒன்றுகூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் வைத்து அவர் இந் தககருத்தை வெளியிட்டுள் ளாரா.

இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 4 நாடாளுமன்ற உறுப்பினர்களும் 40 பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இதன்போது மேலும் உரையாற்றிய முத்துஹெட்டிகம, மக்களால் நிராகரிக்கப்படுவதற்கு மகந்த ராஜபக்ஷ அரசியல்வாதியல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே மகந்த ராஜபக்ஷவை கொழும்புக்கு கொண்டு வந்து, தேர்தலில் போட்டியிட, வேட்பாளர் நிலையை பெற்றுக் கொடுக்க அனைவரையும் அழைப்பதாக அவர்இதன்போது மேலும் தெரிவித்தார். (இ-5)

# மகிந்தவே அடுத்த பிரதமர்; முயற்சிகள் கைவிடப்படாது

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் முயற்சிகள் கைவிடப்படமாட்டாது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி இரத்தினபுரியில் மகிந்தவை பிரதமராக்கும் திட்டத்திற்கு ஆதரவு திரட்டும் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு

## கம்மன்பில உறுதி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

அண்மையில் கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றதிலும் அமுனுகம நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படுவதனை எதிர்த்து பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரத்தினபுரி கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாக அவர் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்சியின் யாப்பிற்கு முரணான வகையில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக நிச்சயமாக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பின்ரும் அமைச்சருமான நத்திமித்ர ஏக்கநாயக்க தெரிவித்துள்ளர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 70 | 100 | 90-100 | 90 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 | 80 | 60-70 | 60 |
| தக்காளி | 50 | 60 | 40 | 40 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 50 | 30 | 110 | 60 | 40 | 40 |
| கரட் | 180 | 100 | 50 | 120 | 120 | 120 |
| பூசணி | 50 | 50 | 50 | 80 | 60-80 | 60 |
| புடோல் | 50 | 40 | 50 | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 90 | 100 | 40-80 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 | 90 | 90 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 100 | 80 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 | 80 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 60 | 70 | 50 | 70 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 | 120 | 70 | 80 |
| லீக்ஸ் | 200 | 120 | 160 | 200 | 160 | 150 |
| பீற்றூட் | 30 | 50 | — | 80 | 60 | 40 |
| கறிமிளகாய் | 200 | 130 | 80 | 120 | 120-140 | 100 |
| முருங்கைக்காய் | 180-250 | 250 | 320 | 300 | 300 | 400 |
| போஞ்சி | 200 | 140 | 120 | 160 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 50 | 80 | 90 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 40 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 60 | 50 | 60 | 60 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 40-50 | 60 | 60 |
| இராசவள்ளி | 140 | 80 | 100 | 100 | 100-120 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 140 | — | 160 | 90 | 100 |
| முள்ளங்கி | 40 | 20 | 20 | 60 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 30 | 20 | 10 | 20 |

## facebook ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 313

சத்தியா பிரகாஸ்

வேசம் இல்லாத உண்மையான அன்பு தான் இந்த உலகத்தில் எல்லா நோய்களுக்கும் மருந்து. அந்த அன்பே பொய்யானால் உலகில் அதை விட கொடிய நோய் வேறு எதுவும் கிடையாது.

கார்த்திக் குமார்




சுலக்சினி ரவீந்திரன்





லவன் லவலோயன்




ரஞ்சி ரஞ்சினி




யது யதுசன்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2015-13.04.2015



**வக்ர குருவால் வளர்ச்சி கூடும்! கவர்ச்சியாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் துலாம் இராசி நேயர்களே!**

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்திலேயே குடும்ப ஸ்தானத்தில் சனி உலா வருகிறார். எனவே, குடும்பத்தில் சுப விரயங்கள் அதிகரிக்கும். உடன் பிறப்புகளும், உடன் இருப்பவர்களும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த வழி பிறக்கும்.

3, 6இற்கு அதிபதியான குரு பகவான் உச்சம்பெற்று வக்ரமும் அடைந்திருக்கிறார். 6இற்கு அதிபதி உச்சம் பெற்றால் எதிர்ப்புகள் அதிகரிக்கும். ஆரோக்கியப் பாதிப்புகள் அடிக்கடி உருவாகும். கடன் சுமை கூடிக்கொண்டே போகும் என்று சொல்வார்கள். காரணம் எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் இடம் ஆறாமிடமாகும்.

ஆனால் தற்சமயம் அந்த ஸ்தானாதிபதி வலுவிழந்திருக்கிறார். எனவே, மறைமுக எதிர்ப்புகளை முறியடித்து மனக் கசப்புகளை மாற்றிக் கொள்வீர்கள். திறமை பளிச்சிடும். திடீரென உத்தியோக வாய்ப்புகள் ஒரு சிலருக்கு கைகூடும். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த புதிய வழிபிறக்கும். மாறுபட்ட பலன்களைக் கொடுக்கும் கிரகம் வக்ரம் பெற்றிருப்பதால் சீரான பலன்களை வழங்கி செயறபாடுகளில் வெற்றியைக் குவிக்க வைக்கும்.

எனவே, குரு வழிபாட்டை வியாழக்கிழமை தோறும் முறையாக மேற்கொள்ளுங்கள். குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி கூடுதல் நற்பலன்களை கொடுக்க கவசம் பாடி கைதொழுது வழிபட்டு வாருங்கள். பொதுவாக ஏழரைச் சனியில் 2 ஆவது சுற்று நடப்பவர்கள் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. முதல்சுற்று, மூன்றாவது சுற்று நடப்பவர்கள் முன்னேற்றத் தடைகளைச் சந்திக்காமலிருக்க முழுமனதோடு கவசம் பாடி சனிபகவானை வழிபடுவது நல்லது.

விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகுவின் பார்வை சனியின் மீது பதிவதால் திடீரென வரும் வரவும், திடீரெனச் செலவாகலாம். அதை சுபவிரயங்களாக மாற்றிக் கொள்ள முன்வருபவர்கள் வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்கி மகிழலாம். தனசப்தமாதிபதியான செவ்வாய்க்குரிய முருகப் பெருமானை உத்திர நட்சத்திரமன்று வழிபடுவதன் மூலம் உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக் கொள்ளலாம்.




## வக்ர குருவால் வளர்ச்சி கூடும்!

**மேட செவ்வாயின் சஞ்சாரம்!**

மார்ச் 21 ஆம் திகதி மேட ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன்விளைவாக திருமண முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அந்நிய தேச யோகம் எண்ணியபடி கைகூடும். சொத்துக்களால் ஏறபட்ட பிரச்சினைகள் அகலும். வாங்கிய சொத்துக்களை விற்பதன் மூலம் வருமானப் பெருக்கம் ஏற்படும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 21ஆம் திகதியிலும் புதன் நீச்சம் பெறுகிறார். விரயாதிபதி நீச்சம் பெறுவதுயோகம் தான். விரயத்திற்கேற்ற லாபம் வந்து கொண்டேயிருக்கும். எதை வாங்க வேண்டுமென்று சிந்தித்தீர்களோ அதற்குரிய தொகை முன்னதாகவே உங்களுக்கு வந்து சேரும். இக்காலத்தில் புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி காண்பீர்கள். கடல் தாண்டும் முயற்சி கைகூடும். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். வாழ்க்கைத் தேவைகள் ஒவ்வொன்றாக பூர்த்தியாவது கண்டு மகிழ்ச்சியடைவர்கள். ஏப்ரல் 6 ஆம் திகதி மேடத்தில் சஞ்சரிக்கும் புதனால் சில எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம். குறிப்பாக வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள்.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

ஏப்ரல் 7ஆம் திகதிக்கு மேல் அசுர குரு 8இல் மறைவதால் வெற்றிக்குரிய தகவல்கள் வீடு வந்து சேரும். இக்காலம் ஒரு பொற்காலமாகும். வெளிநாட்டிலிருந்து வரும் தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றத்தை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் மாதமாகும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். தங்கம், வெள்ளி போன்றவைகள் தாராளமாக வந்து சேரும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகளை நடத்தி மகிழ்வீர்கள். கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்க முன் வருவது கண்டு மகிழ்ச்சியடைவீர்கள். இம்மாதம் அம்பிகை வழிபாட்டில் கவனம் செலுத்துவதோடு உத்திரப் பெருநாளில் முருகப் பெருமானையும் வழிபாடு செய்தால் முன்னேற்றத்தின் முதல்படிக்கு செல்லலாம்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**வெற்றிக் கனியை எட்டிப்பிடிக்க வைப்பார் சனிபகவான்! உதவி செய்வதன் மூலம் பிறர் உள்ளத்தில் இடமபிடிக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் தனபஞ்சமாதிபதியான குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். சுற்றத்தார் போற்றுகிற அளவிற்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும். மேலும் 12இற்கு அதிபதியான சுக்ரன் தன்வீட்டைத் தானே பார்ப்பது யோகமாகும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். பயணங்களால் பலன் கிடைக்கும்.

தன ஸ்தானத்தில் சந்திரன் சஞ்சரிக்கின்றார். பஞ்சம ஸ்தானத்தில் ராசிநாதன் செவ்வாயுடன் தொழில் ஸ்தானாதிபதி சூரியனும் இணைந்து உலா வருவதால் பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பிரச்சினைக்குத் தீர்வு காண வி.ஐ.பிக்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

11 ஆம் இடத்தில் ராகு பலம் பெற்றிருப்பதால் புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டே இருக்கும். பொருளாதாரம் சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பானதாகவே அமையும். குருவின் பார்வை பஞ்சம ஸ்தானத்திலும் பதிகிறது. அங்குள்ள செவ்வாயை குரு பார்ப்பதால் குரு மங்கள யோகம் உருவாகிறது.

எனவே, இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடி வரும். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவோடு கொடுக்கல்-வாங்களை வகைப்படுத்திக் கொள்வீர்கள். ஜென்ம சனியின் ஆதிக்கத்தால் தொழில் பங்குதாரர்களுக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அவற்றை தீர்த்து வைத்து உங்கள் பணியைத் தொடர வாய்ப்பை உருவாக்கிக்கொள்வீர்கள்.

ஜென்மச் சனியால் ஆரோக்கியத் தொல்லைகள் அடிக்கடி உருவானாலும்கூட மாற்று மருத்துவத்தின் மூலம் அவற்றைக் குணமாக்கிக் கொள்வீர்கள். சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனீஸ்வரரையும், சர்வேஸ்வரரையும் வழிபட்டு வந்தால் பணியில் ஏற்பட்ட தொய்வு அகலும். வெற்றிகள் ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனி என்பதால் அவரை முறையாக வழிபடுவதன் மூலம் முன்னேற்றம் கூடும். அதோடு பங்குனி உத்திரத்தன்று சுப்ரமணியரை வழிபடுவதால் சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும்.

**மேட செவ்வாயின் சஞ்சாரம்!**

நேசபிக்க உங்களுக்கு மேட செவ்வாயின் ஆதிக்கம் மிகுந்த நற்பலன்களை வரவழைத்துக் கொடுக்கப் போகின்றது. 6இறகு அதிபதி சப்தமாதிபதியுடன் இணையும் இந்த நேரத்தில் வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்துசேரும். எதிரிகள் விலகுவர். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். குறிப்பாக பெண் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி சிறிய தொகையை செலவிடும் சூழ்நிலை உண்டு. இந்த நிகழ்வு மார்ச் 21 ஆம் திகதிக்கு மேல் நிகழவிருக்கிறது.

**மீன புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 21 ஆம் திகதி புதன் மீன ராசியில் நீச்சம் பெறப்போகிறார். அஷ்டமாதிபதி நீச்சம் பெறுவது ஒரு வழிக்கு யோகம்தான். சென்ற மாதத்தில் தொழிலில் கிடைக்க வேண்டிய லாபம் இந்த மாதத்தில் முழுமையாகக் கிடைக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். இடமாற்றம், இலாகா மாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். அதே நேரத்தில் ஏப்ரல் 6ஆம் திகதி மேடத்தில் புதன் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சிக்குரிய சம்பவம் நடைபெறும்.




## வெற்றிக்கனியை எட்டிப்பிடிக்க வைப்பார் சனிபகவான்!

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாகும். பொதுநல ஈடுபாடுஅதிகரிக்கும். புகழ்கூடும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். எதை விரும்புகிறீர்களோ, அதை உடனடியாக செய்து முடிக்கும் ஆற்றல் உருவாகும். ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபடுவதோடு, சண்முகநாதப் பெருமானையும், வழிபட்டு வந்தால் சந்தோஷங்களை நாளும் சந்திக்கலாம்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. குரு பார்க்க கோடி நன்மை என்பதால் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடி ஊதிய உயர்வு வந்து சேரும். குடும்பப் பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறும் வாய்ப்பு உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு வந்து சேரலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிரதோஷ காலத்தில் நந்தி வழிபாடும், செவ்வாய்க்கிழமை தோறும் முருகப் பெருமான் வழிபாடும் செய்து வந்தால் வருவாய் அதிகரிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை மேய்ப்பாளர்கள் கொலைவெறித் தாக்குதல்

## 80 விவசாயிகள் பலி

(மகுர்டி)

நைஜீரியாவில் விவசாயிகள் மீது பழங்குடி கால்நடை மேய்ப்பாளர்கள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 80இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஆண்டு இதேபோல் நடத்தப்பட்ட தாக்குதலில் 100இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இங்குள்ள பேணு மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்தில் விவசாயிகள் உறங்கிக்கொண்டிருந்த வேளை உள்ளூர் நேரப்படி அதிகாலை 5 மணிக்கு அந்த கிராமத்திற்குள் பழங்குடி கால்நடை மேய்ப்பாளர்கள் துப்பாக்கி மற்றும் கொடூர ஆயுதங்களுடன் தாக்குதல் நடத்தினர். இதில் அப்பாவி விவசாயிகள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 80 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தாக்குதலால் அக்கிராமங்களை விட்டு வெளியேறிய விவசாயிகள், திரும்பி வந்து விவசாய பணிகளை மேற்கொள்ள தொடங்கிய நிலையில் இந்த கொடூரத் தாக்குதல் நடந்துள்ளது. விவசாயம் செய்வதற்காக அதிக அளவு நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதால் கால்நடைகள் மேய்ப்பதற்கான இடம் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இதுதான் பழங்குடியினருக்கும், விவசாயிகளுக்கும் இடையே பிரச்சினைகள் ஏற்படுவதற்கான முக்கிய காரணம் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# இராணுவத் தாக்குதலில் 54 தீவிரவாதிகள் மரணம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் தொடர்ந்து அரசு படைகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகிறார்கள். அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் ஆப்கான் இராணுவமும், நேட்டோ படையினரும் ஈடுபட்டுள்ளனர்.


இந்த நிலையில் தீவிரவாதிகளின் ஆதிக்கத்தில் உள்ள ஹாஸ்னி, காந்தஹார், லக்மேன், பார்யாப் மற்றும் ஷாரி புல் மாகாணங்களில் கடந்த சனிக்கிழமை ஆப்கான் இராணுவத்தினர் அதிரடி தாக்குதல் நடத்தினர்.

தொடர்ந்து 24 மணி நேரம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 49 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்தனர். 18 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேபோல் ஹெல்மந்த் தெற்கு மாகாணப்பகுதியில் நடந்த தாக்குதலில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 6 பேர் காயம் அடைந்தனர். இந்தச் சம்பவங்களில் 2 இராணுவ வீரர்கள் உயிரிழந்ததாக ஆப்கான் இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-5)

# அணு ஆயுத போருக்கும் தயாராகவே இருந்தோம்

## புடின் அதிர்ச்சி



(மொஸ்கோ)

கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைப்பதில் சிக்கல் ஏற்பட்டால், அணு ஆயுதங்களை பயன்படுத்தவும் தயாராக இருந்ததாக புடின் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு உக்ரைனின் கிரிமியா பகுதியை ரஷ்யா தன்னுடன் இணைத்து கொண்டது. அந்த இணைப்பிற்கு அமெரிக்கா உட்பட பல உலக நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் நேரடியாக போர் மூளும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் புடின் பேசும் ஆவணப்படம் வெளியாகியுள்ளது. இதில் அவர், "கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைப்பதால் என்ன மாதிரி விளைவுகள் ஏற்படும் சரியாக சொல்ல முடியவில்லை. எனவே இராணுவத்தை போருக்கு தயாராக இருக்கும்படி உத்தரவிட்டிருந்தேன்" என்று கூறினார்.

அப்போது அணு ஆயுதங்களை பயன்படுத்தவும் தயாராக இருந்தீர்களா? என்று கேட்கப்பட்டதற்கு "ஆமாம். தேவை ஏற்பட்டால் அணு ஆயுதங்களை பயன்படுத்தவும் தயாராக இருக்கும்படி உத்தரவு போட்டிருந்தேன்" என்று பதில் அளித்துள்ளார். இது அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# எபோலாவினால் 10,000 பேர் பலி

**எபோலா நோய்க்கு பலியானோர் எண்ணிக்கை 10 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.**

இது தொடர்பாக, அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, மேற்கு ஆபிரிக்க நாடுகளான சியாரா லியோன், கினி, லைபீரியா ஆகிய இடங்களில் ஓராண்டுக்கு முன்னர் எபோலா நோய் தாக்கியது. இதுவரை 24 ஆயிரத்து 350 பேருக்கு நோய் பாதிப்பு இருப்பது தெரிய வந்துள்ளது. இதில் 10 ஆயிரத்து 4 பேர் உயிரிழந்தனர் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்தது.

சியாரா லியோனில் கடந்த மார்ச்10 ஆம் திகதி வரையிலான நிலையில், 11 ஆயிரத்து 677 பேருக்கு நோய் பாதிப்பு ஏற்பட்டது. இதில் 3 ஆயிரத்து 655 பேர் உயிரிழந்தனர்.

கினி நாட்டில் 3 ஆயிரத்து 330 பேர் எபோலாவால் பாதிக்கப்பட்ட நிலையில், 2 ஆயிரத்து 187 பேர் உயிரிழந்தனர். லைபீரியாவில் 9 ஆயிரத்து 343 பேர் பாதிக்கப்பட்டனர். 4 ஆயிரத்து 162 பேர் இந்நோய்க்கு பலியாகினர். எனினும் பெப்ரவரி 19 ஆம் திகதிக்குப் பின்னர், புதிதாக எபோலாவால் எவரும் பாதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. எபோலா பாதிப்புள்ளவரின் உடலிலிருந்து வெளியேறும் வியர்வை போன்ற திரவங்களிலுள்ள நோய்த் தொற்று ஏற்படுத்தும் நுண்ணுயிர்களின் மூலம் பிறருக்கு இந்நோய் பரவுகிறது.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மருந்து நிறுவனங்கள் எபோலா தடுப்பு மருந்துகளை உருவாக்கி, அதன் முதல் கட்ட சோதனையில் வெற்றி கண்டுள்ளன.

எபோலா நோய் பரவல் உள்ள கடந்த 40 ஆண்டு கால வரலாற்றில், தற்போதைய நிலையே மிகவும் கடுமையானதாகும். நோய் கிருமியைவிட, அந்த நோயைப் பற்றிய அச்சம் வேகமாகப் பரவி வருகிறது என்று உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டது.

உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் மார்கரெட் சான் கூறுகையில், ஆபிரிக்க கண்டத்தில் எபோலா பரவுவது இது கடைசி முறையாக இருக்காது. இப்போது இந்நோயைக் கட்டுப்படுத்தினாலும், சுற்றுச் சூழல், விலங்கினங்கள், மனிதர்கள் வேட்டையாடும் முறை ஆகியவற்றைக் கொண்டு நோக்கும் போது, 22 ஆபிரிக்க நாடுகளில் எபோலா மீண்டும் தாக்க வாய்ப்புள்ளது என்றார்.

எபோலா நோய் முதல் முதலாக, ஆபிரிக்க நாடான சூடானில் 1976 ஜூனில் கண்டறியப்பட்டது. இருநூறுக்கும் மேற்பட்டோர் அங்கு பாதிக்கப்பட்ட நிலையில், 151 பேர் இந்நோயால் உயிரிழந்தனர். அதே வருடம் ஓகஸ்டில், மற்றொரு ஆபிரிக்க நாடான ஹொங்கோவில் இந்நோய் கண்டறியப்பட்டது. அந்நாட்டிலுள்ள எபோலா ஆற்றுக்கு அருகே இந்நோய் அறிகுறி முதலில் தென்பட்ட காரணத்தால், நோய்க்கு காரணமான வைரஸுக்கு எபோலா வைரஸ் எனப் பெயரிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜனாதிபதியைப் பதவிவிலகக்கோரி எதிர்க்கட்சிகள் பெரும் போராட்டம்



(ரியோ டி ஜெனீரோ)

பிரேசில் நாட்டு ஜனாதிபதியை பதவி விலகக் கோரி எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் நடத்திய போராட்டத்தில் சுமார் 10 இலட்சம் பேர் கலந்து கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரேசில் நாட்டின் ஜனாதிபதியாக டில்மா ரூசோப் பதவி வகித்து வருகிறார். பெண் ஜனாதிபதியான இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு முதன் முறையாக பதவியேற்றார். அதை தொடர்ந்து சமீபத்தில் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் 2 ஆவது முறையாக பதவி வகித்து வருகிறார்.

தற்போது அவர் பதவியேற்று 5 மாதமே ஆன நிலையில் பிரேசில் நாட்டில் பொருளாதார நிலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் தலை விரித்தாடுவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. எனவே டில்மா ரூசோப் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக வலியுறுத்தி நேற்று முன்தினம் எதிர்க் கட்சிகள் போராட்டம் நடத்தின. அதில், ரூசோப்பின் ஆளுங்கட்சிக்கு ஆதரவு கொடுக்கும் கட்சிகளும் கலந்து கொண்டன.

பிரேசிலின் வர்த்தக நகரமான சாவ் பாலோவில் இப்போராட்டம் நடந்தது. அதில் பங்கேற்க பல்வேறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் இருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர்.

இந்த போராட்டத்தில் சுமார் 10 இலட்சம் பேர் கலந்து கொண்டனர். அவர்கள் டில்மா பதவி விலக வலியுறுத்தி கோஷமிட்டனர். தேசிய கொடியை ஏந்தி இருந்தனர். தேசிய கீதத்தை இசைத்த படியே சென்றனர். இதனால் பிரேசில் நாட்டின் நகரங்களில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவை கிலி கொள்ள வைத்த இலங்கை

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணமானது இரு நாடுகளுக்குமிடையிலான நெருக்கத்தை அதிகரித்திருக்கும் அதே வேளை, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான முன்னைய அரசாங்கத்தின் காலத்தில், சீனாவுடன் இலங்கை கொண்டிருந்த நெருக்கமான நட்புறவில் விரிசல்கள் விழத் தொடங்கியுள்ளன.

இந்தியாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ள இலங்கையின் புதிய அரசாங்கம், தன்னை ஓரம்கட்ட முனைகிறதா என்ற சந்தேகம் சீன அரசாங்கத்துக்கு தோன்றியிருக்கிறது. 1.4 பில்லியன் டொலர் முதலீட்டில், சீன நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவந்த கொழும்புத்துறைமுக நகரத்திட்டத்தை இடைநிறுத்துவதற்கு கடந்த 4 ஆம் திகதி இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள முடிவு, சீனாவை பெரிதும் கவலையும் அச்சமும் கொள்ளவைத்திருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் அமைச்சரவையின் முறைப்படியான அங்கீகாரம், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அனுமதிகள் போன்றவற்றை பெற்றுக்கொள்ளாமல் இந்தத் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டது. சுற்றாடல் பாதிப்புகள் குறித்த ஆய்வு மற்றும் அது பற்றிய அனுமதிகள் ஏதும் பெறப்படாமையை சுட்டிக்காட்டியே, இந்தத் திட்டத்தை இடைநிறுத்தியிருக்கிறது அமைச்சரவை.

புதிய அரசாங்கம் பதவிக்கு வர முன்னர் தாம் இந்தத் திட்டத்தை இடைநிறுத்துவோம் என்று தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியிருந்தார். எனினும், புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், கொழும்புத் துறைமுக நகரத்திட்ட விவகாரத்தை சற்று மென்போக்குடனேயே கையாளத் தொடங்கியிருந்தது. ஆனால், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த சூழலில், திடீரென இந்தப் பணிகளை இடைநிறுத்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையையொட்டி, இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் இராஜதந்திர நகர்வு என்றே கருதப்படுகிறது. அதைவிட, இலங்கையின் புதிய அரசாங்கம், சீனாவுக்கு எதிராக செயற்படுவதாகவும் அந்த நாடு சந்தேகம் கொள்கிறது.

அணிசேராக் கொள்கையை புதிய அரசாங்கம் கடைப்பிடிக்கும் என்றும் எந்த நாட்டையும் சார்ந்து செயற்படாது என்றும் புதிய அரசாங்கம், சீனாவையும் இந்தியாவையும் நம்பவைக்க முயற்சிக்கிறது. ஆனாலும், சீனா அதனை நம்பத் தயாராக இல்லை என்பதை அதன் அதிகாரபூர்வ கருத்துக்களிலிருந்து உணரமுடிகிறது.

இந்தியாவின் சார்பாக இலங்கை செயற்படுவதாகவே சீனா கருதுகிறது. அதனாலேயே, சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹு"வா சுங்யிங், அண்மையில் மற்றைய நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்கள குறித்தும் இலங்கை மீளாய்வு செய்கிறதா என்பதை சீனா உன்னிப்பாக கவனிக்கும் என்றும் தெரிவித்திருந்தார்.

சீனாவின் திட்டங்களை மட்டுமன்றி, 400 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கொழும்பில் வீடமைப்புத்தொகுதியை நிர்மாணிக்கும் இந்தியாவினுடைய டாடா நிறுவனத்தின் உடன்பாட்டையும் மீளாய்வு செய்யப்போவதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருக்கிறார். கொழும்புத் துறைமுக நகரத்திட்டத்தை இடைநிறுத்தியது சீனாவுக்கு எதிரான செயல் அல்ல என்றும் இது ஊழல் மோசடிக்கு எதிரான நடவடிக்கையே என்றும அவர் கூறியிருக்கிறார்.

சீன. ஜனாதிபதி ஜி ஜிங்பிங் பதவிக்கு வந்த பின்னர், ஊழலுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கை போலவே நாங்களும் முன்னெடுக்கிறோம் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறியுள்ளமை, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இடைவெளியை நன்றாகவே வெளிப்படுத்துகிறது.



ஜி ஜிங்பிங்கினால் சீனாவில் ஊழலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை போலவே, இலங்கையின் புதிய அரசாங்கமும் மேற்கொள்வதாக கூறப்படும் நியாயத்தை சீனா ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஏனென்றால், இலங்கையில் நடைபெற்ற ஆட்சி மாற்றத்தை இயல்பானதொன்றாக சீனா கருதவில்லை.

முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் சீனா கொண்டிருந்த நெருக்கமான உறவுகளும் இலங்கையில் அதிகரித்துவந்த சீனாவின் தலையீடுகளுமே இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படக் காரணம் என்ற கருத்து வலுவாகவுள்ளது. அமெரிக்காவும் இந்தியாவும் இந்த ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் இருந்ததாக உறுதியாக நம்பப்படுகிறது. இத்தகைய நிலையில், இலங்கை அரசாங்கம் தமக்கு சார்பாகச் செயற்படும் என்று சீனாவினால் எந்த வகையிலும் நம்பமுடியவில்லை.

சீனாவை பொறுத்தவரையில், கொழும்புத் துறைமுக நகரத்திட்டம் இடைநிறுத்தப்படுவதால், ஏற்படக்கூடிய பொருளாதார நஷ்டங்ளை அது பெரிதாக எடுத்துக்கொள்கிறது என்று எவரேனும் கருதினால் அது தவறானது.

சீனாவுக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர என்பது ஒரு பெரிய தொகையல்ல. உலகின் மிகப்பெரிய பொருளாதாரத்தை கொண்ட நாடு என்ற இலக்கை மிக விரைவில் அடையும் நிலையிலிருக்கும் சீனாவை பொறுத்தவரையில், இந்த பொருளாதாரப் பாதிப்பு அதனை ஆட்டம் காணச் செய்துவிடாது. ஆனால், இந்தத திட்டம் இடைநிறுத்தப்படுவதால், ஏற்படக்கூடிய மூலோபாய நலன் இழப்புகள் குறித்தே அது கவலைப்படுகிறது.

ஹம்பாந்தோட்டையில் சீனா துறைமுகத்தை அமைக்கத் தொடங்கியபோது கூட, இந்தியாவுக்கு அச்சம் இருந்தது. அது தனக்கு எதிராக பயன்படுத்தப்படக்கூடும் என்று இந்தயா வெளிப்படையாகவே கூறியது. அது வெறும் வர்த்தகத்திட்டமே என்றும் அதனால், இந்தியாவின் பாதுகாப்புக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றும் இலங்கை அரசாங்கம் புது டெல்லியை நம்பவைக்க முயன்றது. இந்தியா அந்த விடயத்தில் சற்று கவனமாக இருந்தாலும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இடைநிறுத்த முனையவில்லை.

அதுபோலவே, கொழும்புத் துறைமுகத்தின் தெற்குப் பகுதியில் கொள்கலன் முனையத்தை சீனா 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அமைத்தபோது கூட இந்தியா அவ்வளவாக அச்சம் கொள்ளவில்லை. அந்த கொள்கலன் முனையத்தில் சீனாவுக்கு என்று தனியானதொரு பகுதி ஒதுக்கப்பட்டதையும் அங்கு சீன நீர்மூழ்கிகள் தரித்து நின்ற விவகாரத்தையும் விட, கொழும்புத் துறைமுக நகரத்திட்ட விவகாரத்தில இந்தியாவின் கரிசனை அதிகமாக உள்ளது.

கொழும்புத் துறைமுக நகரத்திட்டத்தின் மூலம் கடலை நிரவி உருவாக்கப் படவுள்ள 238 ஹெக்டேயர் நிலப்பரப்பில், 20 ஹெக்டேயர் சீனாவுக்கே உரிமையானதாக இருக்கப்போகிறது. அதைவிட, மேலும் 88 ஹெக்டேயர் நிலப்பரப்பு 99 வருட குத்தகைக்கு சீனாவே வைத்திருக்கப்போகிறது. இதனை இந்தியாவினால் சகித்துக் கொள்ள முடியாதிருக்கிறது.

சீனா தனக்கு சொந்தமாக வைத்திருக்கக் கூடிய நிலப்பகுதியிலிருந்து, பெரும்பாலும் கொழும்புத் துறைமுகத்தையே பயன்படுத்தும் தமது கப்பல்களை சீனா இலகுவாக கண்காணிக்கும் என்பது இந்தியாவின் முக்கியமான கவலை. அதைவிட, சீன நீர்மூழ்கிகள் போன்றவை இந்தியாவுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பாதுகாப்புக் காரணிகளின் நடமாட்டங்களையும் இது ஊக்குவிக்கக்கூடும் என்று இந்தியா கவலை கொள்கிறது. இதனால், எப்படியாவது இந்தத் திட்டத்தை இடைநிறுத்தவேண்டும் என்று இந்தியா முயற்சிக்கிறது. அதேவேளை, இந்தத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்பதில் சீனா குறியாக இருக்கிறது.

இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான அதிகாரப் போட்டிக்குள் இலங்கையை சிக்க வைத்திருக்கிறது கொழும்புத்துறைமுக நகரத் திட்டம். "ஏறச் சொன்னால் எருதுக்கு கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம்" எனற பழமொழி போலவே இலங்கையினநிலை. தான் யாருக்கும் எதிரியல்ல, எல்லோருக்கும் நண்பன் என்று காண்பித்து இரண்டு நாடுகளையும் மடக்கப் பார்க்கிறது இலங்கையின் புதிய அரசாங்கம். இருந்தாலும், கொழும்புத்துறைமுக நகரத்திட்டத்தை இடைநிறுத்தியதன்மூலம் இலங்கையின் மீதான சீனாவின் நம்பிக்கை கணிசமாகவே தளர்ந்துபோயுள்ளது.

சீனாவிடம் கிட்டத்தட்ட 5 பில்லியன் அமெரக்க டொலரை கடனாக பெற்றிருந்தாலும், இலங்கை அரசாங்கம் இந்த விவகாரத்தில் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்த நிலையில், இலங்கை அரசாங்கம் கொழும்புத் துறைமுக நகரத்திட்டத்தை என்ன செய்யப்போகிறது என்ற கேள்வி எழுந்திருக்கிறது. அதாவது, இப்படியே இந்தத் திட்டம் இடைநிறுத்தப்படுமா அல்லது தொடர அனுமதிக்கப்படுமா என்பதே முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

சீனாவின் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் இநதத் திட்டத்தில் மூன்று முக்கியமான குற்றசசாட்டுக்களை அரசாங்கம் முன்வைத்திருந்தது. முதலாவது, இந்தப் பாரிய திட்ட உடன்பாட்டு விவகாரத்தில் முன்னைய அரசாங்கத்தினால் ஊழல் செய்யப்பட்டிருக்கிறது என்பது. இரண்டாவது, இந்த உடன்பாட்டு விதிகள், இலங்கையின் இறைமைக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது என்பது. மூன்றாவது, தேவையான முன் அனுமதிகள் ஏதும் பெறப்படாமல், இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால், சுற்றுச்சூழலுக்கு ஆபத்து ஏற்படும் என்பது. இவ்வாறு மூன்று விதமான குற்றச்சாட்டுகளின் மூலம் கொழும்புத்துறைமுக நகர கட்டுமானத்தை இடைநிறுத்த அரசாங்கம் திட்டமிட்டிருந்தாலும், கடைசியான காரணத்தையே இப்போது கையில் எடுத்திருக்கிறது.

சுற்றுச்சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது என்றும் தேவையான முன் அனுமதிகளின்றி இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியே, இந்தத் திட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின், முதலிரண்டு காரணங்களையும் அரசாங்கம் முன்னிலைப்படுத்தாதது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

அரசாங்கத்தை பொறுத்தவரையில், இந்தத் திட்டத்தில் எந்த ஊழலும் இடம்பெறவில்லை என்பது உறுதிசெய்யப்பட்டால், இதனால், இலங்கையின் இறைமைக்கோ, இந்தியாவின் பாதுகாப்புக்கோ ஆபத்து ஏற்படாது என்று உத்தரவாதப்படுத்தப்பட்டால், சுற்றுச்சூழலுக்கும் ஆபத்தில்லை என்று உறுதியானால், நிச்சயம் திட்டத்தை தொடர அனுமதிக்கும். மூன்று விவகாரங்களில் இரண்டில், சாதகமாக இருந்தால் கூட அரசாங்கம் அதற்கு சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தும்.

பெரியதொரு முதலீடு, சீனாவை பகைக்கக் கூடாது என்பன போன்ற காரணங்களினால் இந்தத் திட்டத்தை மாற்று உடன்பாட்டின் கீழ தொடர்வதற்கு அனுமதிக்க அரசாங்கம் தயாராகவே உள்ளதாகத் தெரிகிறது. ஆனால், அதற்கு சீனா உடன்பட வேண்டியது முக்கிய மானது.

ஏற்கனவே செய்யப்பட்ட உடன்பாடுகள் இரு நாடுகளுக்கும் நலன்களை தரக்கூடியது என்று சீனா கூறியிருக்கிறது. அதில், இலங்கை மட்டுமே அந்த உடன்பாட்டில் திருத்தம செயதுகொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதை சீனா ஏற்றுக்கொள்ளும் போலத் தெரியவில்லை. அவ்வாறு சீனா இறங்கிப்போகும் நிலை ஒன்று ஏற்பட்டால், அது சீனாவுக்கு தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும்.

உலகின் பல நாடுகளில் சீனா முதலீடுகளை கொட்டத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, ஆபிரிக்க நாடுகளை அது வளைத்துப்போட்டு வருகிறது. இந்த நிலையில், இந்தத் திட்டத்தில் விட்டுக்கொடுத்து உடன்பாட்டை மாற்றியமைக்க இணங்கினால், ஏனைய நாடுகளும் அதே வழிமுறையை கடைப்பிடிக்க காரணமாகிவடும் என்று சீனா கருதுகிறது. அதனால, இந்த உடன்பாட்டை மாற்றியமைப்பதற்கு சீனா அவ்வளவாக இடம்கொடுக்காது. ஏற்கனவே சீனா இது பற்றிக் கூறியிருக்கிறது.

முன்னைய அரசாங்கத்தினால்செய்துகொள்ளப்பட்ட இரு தரப்பு உடன்பாடுகள், வர்த்தக உடன்பாடுகளை மதிக்கவேண்டியது புதிய அரசாங்கத்தின் கடமை. இது சர்வதேச நெறிமுறையும்கூட. இதனை இலங்கையின் புதிய அரசாங்கம் மீறாது என்று சீனா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடியை கொடுக்க சீனா தயாராகிறது என்பதையே உணர்த்தியிருக்கிறது.

இந்தப் பிடியை சீனா இறுக்கத் தொடங்கினால், கொழும்புத் துறைமுக நகரத்திட்டத்துக்காக தான் செலவிட்ட நிதிக்காக சீனா நீதிமன்றப் படிக்கட்டுகளிலும் ஏறலாம். இலங்கை இந்த விடயத்தை சுமுகமாகவே தீர்க்க முனைந்தாலும், சீனா அதற்கு இடமளிக்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டியுள்ளது. இந்தியப் பிரதமர், இலங்கையுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டாலும், சீனாவின் திட்டங்கள் விடயத்தில் இலங்கை அரசாங்கம் தீர்க்கமான முடிவை அறிவிக்காதிருப்பது, இந்தியாவுக்கும் கவலை தரும் விடயமாகவே இருக்கும்.

பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழனாக இலங்கை எவ்வளவு காலத்துக்குத் தான் நடிக்கமுடியும்?

**-கே. சஞ்சயன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் தேவைக்கு இலங்கையில் அதிகாரத்தைப் பரவலாக்க முடியாது!

## திஸ்ஸ விதாரண கடுமையாக சாடல்



(கொழும்பு)

**இந்தியாவின் தேவைக்கு இலங்கையில் அதிகாரத்தைப் பரவலாக்கவும் முடியாது, அந் நாட்டுக்கு எமது நாட்டின் இறையாண்மையை தாரைவார்க்கவும் முடியாது என கடுமையாக இந்தியாவைச் சாடும் முன்னாள் அமைச்சரும் சமசமாஜக் கட்சித் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, திருகோணமலையை இந் தியாவுக்கு வழங்கியமை எதிர்காலத்தில் பயங் கரமான விளைவுகளை ஏற்படுத்த வழிவகுக்கு மென்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தம் இந்தியாவின் தேவைக்காக எம் மீது பலாத்காரமாக திணிக்கப்பட்டது. அந்த நாட்டைப் போன்று இங்கு அதிகாரத்தை பரவலாக்க முடியாது.எமது நாட்டுக்கென ஒரு அரசியல் வரையறையுள்ளது. அதற்கமையவே அதிகார பரவலாக்கல் இடம்பெற வேண்டும்.

எனவே பிரதமர் மோடி எமக்கு யோசனைகளை முன்வைக்கலாம். ஆனால் 13 ஐ தான் அமுல்படுத்த வேண்டுமென அழுத்தம் கொடுக்கும அதிகாரம் அவருக்கு கிடையாது.

நாம் இந்தியாவுக்கு அடிமைப்பட வேண்டிய அவசியம் இல்லை. உலகில் இன்று பொருளாதாரத்தில் சீனா இரண்டாம் இடத்தை பிடித்துளளது.

எனவே கடந்த ஆட்சியில் சீனாவிடம் உதவி பெற்று பல அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. இதில தவறேதும் இல்லை. இதனை பொறுத்துக்கொள்ள முடியாததன் காரணமாகவே இந்தியா அமெரிக்காவுடன் இணைந்து கடந்த ஆட்சியை கவிழ்த்து ஐ.தே. கட்சி ஆட்சிக்கு வித்திட்டது.

தெற்காசியாவில் அமெரிக்காவின் பலத்தை அதிகரிக்க செய்து சீனாவை ஓரம் கட்டும் முயற்சியை மோடி மேற்கொண்டு வருகிறார். அதற்காகவே இங்கு விஜயம் செய்தார். ஒரு நாட்டின் எரிபொருள் தொடர்பான ஆதிக்கம் அந்நாட்டு அரசிடமே இருக்க வேண்டும். ஆனால் இன்று திருகோணமலை இந்தியாவிடம் தாரை வார்க்கப்பட்டு எரிபொருள் ஆதிக்கமும் அந்நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது எதிர்காலத்தில் எமது நாட்டில் பாரிய பயங்கரமான சூழ்நிலைகளை ஏற்படுத்தும்.

இலங்கையின தேசிய பாது காப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையும். இந்தியாவுக்கு நாம் அடிமைப்படும் நிலைமை தோன்றும் என்றும் பேராசிரியர் திஸ்ஸ விதரண எம்.பி. மேலும் தெரிவிததுள்ளார். (இ-5)

## 5 மாணவர்கள் கடத்தல் விவகாரம்

# கடற்படை அதிகாரி ஒருவர் புலனாய்வுப்பிரிவால் கைது

(கொழும்பு)

தெஹிவளைப் பிரதேசத்தில் வைத்து மூன்று தமிழ் மாணவர்கள், அவர்களது நண்பர்களான இரு முஸ்லிம் மாணவர்கள் உள்ளிட்ட ஐவரை கடத்தியமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கடற்படையின் முக்கிய அதிகாரி ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கடத்தல்களுக்கும் அப்போது கடற்படையில் இருந்த சில முக்கிய அதிகாரிகளுக்கும் இடையே தொடர்புகள் உள்ளதாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் கீழ் இது தொடர்பில் விசேட விசாரணை ஒன்று இடம்பெற்று வரும் நிலையிலேயே லெப்ரினன்ட் கொமாண்டர் தர கடற்படை அதிகாரியை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர உறுதிப்படுத்தினார்.

குறித்த கடற்படை அதிகாரியை புலனாய்வுப் பிரிவினர் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அதற்கமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர மேலும் குறிப்பிட்டார்.(இ-5)

# புதிய அரசாங்கத்தின் பட்ஜெட் பயனில்லை

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

புதிய அரசாங்கம் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் பிரேரித்த சலுகைகள் பொதுமக்களுக்கு முழுமையாக கிடைக்கவில்லை என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை வத்தளை மாபாகே பிரதேசத்தில் ஜே.வி.பியின் கட்சிக் காரியாலயம் ஒன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தை தெரிவித்தார்.

குறிப்பாக திருமண பதிவிற்கான கட்டணமும் இதுவரை அறிவிக்கப்பட்ட வகையில் குறைக்கப்பட வில்லை என அவர் தெரிவித்தார்.

இதுதவிர, அத்தியாவசியப் பண்டங்கள் சிலவற்றின் விலைகளும், போக்குவரத்து கட்டணங்களும் மாத்திரமே ஓரளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக விஜித ஹேரத் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் வேதனமாக 800 ரூபாவை வழங்க வேண்டும் என முதலாளித்துவ சம்மேளனத்தை வலியுறுத்தும் வகையில் மக்களை தெளிவூட்டும் துண்டு பிரசுர விநியோகம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் அட்டன், பொகவந்தலாவ, மஸ்கெலியா, தலவாக்கலை, நானுஓயா, நுவரெலியா, ராகலை போன்ற தலைநகரங்களில் நேற்று முன்தினம் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இதனிடையே, ஐக்கிய தேசிய கட்சிக்கு உறுப்பினர்களை சேர்க்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் அந்த கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் கே.கே.பியதாஸ தலைமையில் அட்டனில் இடம்பெற்றது.

இதன்போது, ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் வியாபார ஸ்தாபனங்களுக்கும், பொது மக்களுககும் விண்ணப்பப்படி [illegible] குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## முடிவெடுக்கும் தன்மை

வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் வெற்றியடைவது என்பது முக்கியம். அவர்கள் எந்தத் துறையைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்களோ அதில் வெற்றி நிலையைத் தொடுவது என்பது முக்கியமல்லவா? அந்த வெற்றியின் எல்லையைத் தொடுவதற்குப் பல படிக்கட்டுக்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தப் படிக்கட்டுகளில் மிக முக்கியமான படிக்கட்டாகச் சொல்வது முடிவெடுக்கும் திறன்.

எதை எப்படித் தொடங்குவது, எப்படி நடத்துவது, எப்படி முடிப்பது, முடிவெடுப்பதென்பதில் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். இதுவா? அதுவா? இதை ஆரம்பிக்கலாமா? அல்லது அதை ஆரம்பிக்கலாமா? என்ற குழப்பத்தில் இருந்தோமேயென்றால் அந்தக் குழப்பம் கடைசியில் எங்களை வெற்றி நிலையைத் தொட முடியாதபடி செய்து விடும். அதை விளக்குவதற்காக அருமையான கதை ஒன்று சொல்வார்கள்.

அதாவது ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு என்ன பழக்கமென்றால், யாருக்காவது, தவறு செய்தவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமென்றால் அதை ஒரே தண்டனையாகக் கொடுக்க மாட்டாராம். குற்றவாளிக்கு மூன்று வகையான சொய்ஸ் கொடுப்பார். அதில் அவர்கள் எதை தேர்ந்தெடுக்கின்றார்களோ அந்தத் தண்டனையை அவர்களுக்குக் கொடுத்துவிடுவார். அதேமாதிரி ஒருத்தர் தவறு செய்துவிட்டாரென்று ராஜா முன்னால் கொண்டு வந்து விட்டார்கள். விசாரித்துப் பார்த்தால் தவறு செய்துவிட்டாரென்பது நிரூபணமாகிவிட்டது. உடனே ராஜா அவருக்கு மூன்று விதமான தண்டனையை கொடுத்தாராம். அதில் ஒரு தண்டனை என்னவென்றால் ஆயிரம் ரூபாய் அபராதம் கட்டவேண்டும். அப்ப டியில்லையென்றால் நூறு கசையடிகள் கொடுப்பார்கள். அதை வாங்கிக்கொள்ள வேண்டும். அதையும் தாண்டி 3 ஆவது வாய்ப்பு என்னவென்றால் ஒரு மூட்டை வெங்காயத்தை ஒரே நேரத்தில் சாப்பிட்டு முடிக்க வேண்டும். இந்த மூன்று தண்டனையையும் ராஜா சொல்லிவிட்டார். இப்போது அந்த குற்றவாளி நினைத்துப் பார்க்கின்றார் எந்தத் தண்டனையை ஏற்றுக்கொள்ளலாமென்று. ஆயிரம் ரூபா அபராதம் கட்டி எதற்குப் பொருளை இழக்க வேண்டும். கசையடியை என்னால் தாங்க மடியாது. அதனால் இந்த வெங்காயத்தை சாப்பிட்டு விடுவோம் என்று வெங்காயத்தை சாப்பிடுகின்றேன் என்றாராம். ராஜா சரியென்று சொன்னதும் அதை அவர் சாப்பிட ஆரம்பித்தார். சாப்பிட்டுக்கொண்டே இருந்தார். ஒரு கால்பங்கு சாப்பிட்டவுடனே அதற்கு மேல் சாப்பிட முடியாது போல் இருக்கின்றது என்று அதை பாதியிலே நிறுத்திவிட்டார்.

ராஜாவைப் பார்த்து அவர் சொன்னார், ராஜா என்னால் முடியவில்லை. வேண்டுமென்றால் ஒன்று செய்யலாம். நீங்கள் சொன்ன மாதிரி நூறு கசையடிகள் வாங்குகிறேன் என்றாராம். சரியென்று நூறு கசையடிகளை கொடுக்க ஆரம்பித்தார்களாம். அடி விழவிழ அதை இவரால் தாங்க முடியவில்லை. அவ்வளவு பலமாக அடிவிழும் என்று இவர் நினைக்கவேயில்லை. அதையும் தாங்க முடியாமல் பாதியிலே ஐயையோ நிறுத்துங்கள். என்னால் தாங்க முடியவில்லையென்றார். அதையும் நிறுத்தியவுடன் சொன்னாராம் முதலில் நீங்கள் சொன்ன மாதிரி ஆயிரம் ரூபா அபராதத்தை கட்டுகிறேன். உடனே கட்டிவிடுங்கள் என்றாராம் ராஜா. இப்போது என்ன பிரச்சினையென்றால், ஆயிரம் ரூபா கட்டுகிறேனென்று முதலிலேயே இந்த முடிவை எடுத்திருந்தாரென்றால் அப்போதே இந்தப் பிரச்சினை முடிந்திருக்கும். ஆனால் இவர் தெளிவாக இல்லாமல் வெங்காயத்தை சாப்பிடுகிறேனென்று ஒரு முடிவை எடுத்தார். சரி அதையாவது முடித்தாரா? இல்லை பாதியிலே நிறுத்திவிட்டார். அடுத்து கசையடியை வாங்கிக் கொள்கிறேன் என்று சொன்னார். அதையும் முழுதாக வாங்கினாரா? கடைசியில் அபராதத்தையும் கட்டிவிட்டார். இப்போது என்ன ஆகிவிட்டதென்றால் கிட்டத்தட்ட மூன்று தண்டனைகளையும் அவர் அனுபவித்து விட்டார். இதற்கு முதலிலேயே ஆயிரம் ரூபா அபராதம் தானே அதைக் கட்டிவிடுவோம் என்று தெளிவான முடிவெடுத்திருந்தால் ஒரே தண்டனையாகப் போயிருக்கும். முடிவெடுக்கும் போது குழப்பமாக இருந்தால் இப்படித்தான் சிக்கல் வரும் என்பதற்காகச் சொல்கின்ற கதை இது.

இதேமாதிரி இன்னொன்று பாருங்கள். ஒரு இடத்தில் வேகமாக இட்லி சாப்பிடுகின்ற போட்டி நடந்தது. நூறு இட்லியை யார் முதலில் வேகமாகச் சாப்பிடுகின்றதென்று. ஓர் ஆள் வேகவேகமாக சாப்பிடுகின்றார். விரைவில் அது முடிகின்ற மாதிரி இருக்கின்றது. போட்டி நடத்துகின்றவர்கள் ஒரு சின்ன சதி செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். அவருக்குத் தெரியாமல் அருகில் இட்லியை வைத்துக் கொண்டே இருந்தார்களாம். அதை அவர் கவனித்துவிட்டார். நீங்கள் நான் சாப்பிடும்போது கூடுதலாக இட்லியை வைத்துக்கொண்டே இருக்கின்றீர்கள். என்னை தோற்கடிக்க வைக்க வேண்டும் என்று நினைக்கின்றீர்கள். இதெல்லாம் நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். போட்டியை முதலில் இருந்து தொடங்குங்கள் என்றாராம்.

கலைமாமணி முனைவர் கோசை சுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைசெய்யப்பட்ட வலைகளை கொண்டு நந்திக் கடலில் தொடர்கின்றது மீன்பிடி

**(முல்லைத்தீவு)**

**தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி, நந்திக்கடலில் தொடர்ந்தும் மீன்பிடித் தொழில் மேற்கொள்ளப்படுவதாகவும் இதனால் தமது தொழில் பாதிக்கப்படுவதாகவும் மீனவத் தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

குறித்த கடலில் தற்போது இறால்பிடி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந் நிலையில், வீச்சு வலைகளைப் பயன்படுத்தி, இந்த இறால்பிடி மேற்கொள்ளப்படுகிறது.

எனினும், முல்லைத்தீவிலுள்ள மூன்று மீன்பிடிச் சங்கங்களின் அங்கத்தவர்களான ஒருசில மீனவத் தொழிலாளர் இவ்வாறு நந்திக்கடலில் மீன்பிடிப்பதற்கு தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி இறால் பிடிப்பதாகவும் இதனால் தமது தொழில் பாதிக்கப்படுவதாகவும் நந்திக்கடல் மீன்பிடித் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு நந்திக்கடலில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி பகல் மற்றும் இரவு நேரங்களில் தொழில் செய்யும் பல மீனவத் தொழிலாளர்களையும் அவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் தடைசெய்யப்பட்ட வலைகள் என்பவற்றை கடற்றொழில் திணைக்களம், பொலிஸார் மற்றும் மீனவர்களின் ஒத்துழைப்புக்களுடன் கைப்பற்றி வருகின்ற போதிலும் இந்த நடவடிக்கை தொடர்ந்துகொண்டே செல்வதாகவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், மாவட்ட கடற்றொழில் திணைக்களம் உள்ளிட்ட அதிகாரிகள் மீனவ சங்கங்களை ஒன்றுகூட்டி இவ்வாறு நந்திக்கடலில் தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி தொழில் செய்யக்கூடாது எனவும், மீறி தொழில் செய்பவர்களின் அங்கத்துவம் நீக்கப்படும் என கட்டளையிட்டால் இந்த பபிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும் என நந்திக்கடல் மீனவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, நந்திக்கடலில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்பவர்களை பிடிப்பதற்காக கடற்றொழில் திணைக்களத்தின் உதவியுடன் பயன்படுத்தப்பட்ட முல்லைத்தீவு ஹிஜ்ராபுரம் மற்றும் நீராவிப்பிட்டி மேற்கு ஆகிய மீனவ சங்கங்களுக்கு சொந்தமான இரு குல்லாக்கள் கடந்த வாரம் முதலப்பிட்டி எனும் இடத்தில் இனந்தெரியாதவர்களினால் தீவைத்து எரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



**வடக்கு மாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 8 பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டதை படத்தில் காணலாம்.**
**(படம்: பனிக்கன்குளம் செய்தியாளர்)**

## அடப்பங்குளம் கிராம மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம்

வவுனியா, அடப்பங்குளம் கிராமத்துக்கான அடிப்படை வசதிகளை பெற்றுத் தருமாறு கோரி நேற்று முன்தினம் அடப்பங்குளம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தமது கிராமத்துக்கான அடிப்படை வசதிகளை பெற்றுத்தர வேண்டும், பிரதேச பொது கட்டடத்திலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும், சமுர்த்தி முத்திரை வழங்கலில் பாரபட்சம் காட்டக்கூடாது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷம் எழுப்பினர்.

நேரியகுளத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் அடப்பங்குளம் வரை சென்று அங்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர். சுமார் இரண்டு மணி நேரமாக இவ்வார்ப்பாட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




## வவுனியா-சேமமடுவுக்கு புதிய பேருந்து சேவை

(குருமன்காடு)

இலங்கை போக்குவரத்து சபையினரால் வவுனியாவில் இருந்து சேமமடு கிராமத்திற்கான புதிய பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ரோகண கமகேயின் ஏற்பாட்டில் வவுனியா பேருந்து நிலையத்தில் நேற்று இந் நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த சனிக்கிழமை போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்துவ பண்டாரவினால் வவுனியா இலங்கை போக்குவரத்து சபை டிப்போவிற்கு 8 பேருந்துகள் வழங்கப்பட்டன.

அதில் ஒரு பேருந்தினை நீண்டகாலமாக பேருந்து சேவை இடம்பெறாத வவுனியாவில் இருந்து 25 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சேமமடு பிரதேசத்திற்கு சேவையில் ஈடுபடுத்தும் நோக்கில் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஊடாக இளமருதங்குளம், அலைகல்லுப் போட்டகுளம், சேமமடு உள்ளிட்ட 15க்கு மேற்பட்ட கிராம மக்கள் பயன்பெறக் கூடியதாக அமைந்துள்ளதுடன் மாணவர்கள் மற்றும் தோட்ட செய்கையாளர்களும் பயன் பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் ஆரம்ப நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ரோகண கமகே, வடமாகாணசபை உறுப்பினர் ஜெயதிலக, கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீனின் இணைப்பாளர் முத்து முகமது, வவுனியா நகர கிராம அலுவர் ஜெகசோதிநாதன், இலங்கை போக்குவரத்து சபை வவுனியா சாலை முகாமையாளர் சந்திரன் மற்றும் மதகுருமார் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-2-250)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(மல்லாவி)

கிளிநொச்சி தருமபுரம் மேற்கு வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் ஆசிரியை திருமதி சுகந்தி சுதாகரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கண்டாவளை பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் சுப்பிரமணியம் ஜெயானந்தராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்விற்கு பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு முன்பள்ளி விளையாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (அ-2-15)

## பாரதிநகர்-நெட்டாங்கண்டல் வீதி புனரமைக்கப்படவில்லை

(மல்லாவி)

த.தே. கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட துணுக்காய் பிரதேச சபைக்குரிய மல்லாவி நகரப்பகுதியிலிருந்து பாரதிநகர் கிராமம் ஊடாக பாண்டியன் குளம் மற்றும் நெட் டாங் கண்டல் கிராமங்களுக்குச் செல்லும் வீதியில் சுமார் 2 கிலோமீற்றர் வீதியானது மக்கள் பாவனைக்கு பயன்படுத்த முடியாது குன்றும் குழியுமாக இருப்பதால் நெட்டாங் கண்டால் வைத்தியசாலையில் இருந்து நோயாளர் காவு வண்டி மூலம் நோயாளர் களை மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு அவ்வீதியால் கொண்டு செல்ல முடியாத அவலநிலை காணப்படுவதாக மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் குற் றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மல்லாவி நகரப் பகுதியில் இருந்து பாரதிநகர் கிராமம் ஊடாக நெட்டாங்கண்டல் வரை செல்லும் பிரதான வீதியில் துணுக்காய் பிரதேசசபைக்குரிய 2 கிலோ மீற்றர் தூரத்திற்கான வீதியால் மக்கள் நடந்தேனும் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு பாரதிநகர் கிராம மக்களும் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்த நிலையில் துணுக்காய் பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் சுமார் 4 இலட்சம் ரூபா செலவில் கடந்த 15 ஆம் திகதிக்கு முன்னர் வேலைகளை நிறைவு செய்யுமாறு சபை ஒப்புதல்வழங்கிய நிலையிலும் இதுவரை வீதி புனரமைப்புப் பணி ஆரம்பிக்கப்படவில்லையென பொதுமக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் த.தே. கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபைகளில் மக்களின் வரிப்பணத்தையும் மற்றும் அரசாங்கம் அபிவிருத்தி பணிகளுக்காக துணுக்காய் பிரதேச சபைக்கு ஒதுக்கீடு செய்த 2 கோடியே 61 இலட்சம் ரூபா பணத்தில் மக்களுக்கான அடிப் படை தேவைகளுக்கு பயன்படுத்தாது வங்கியில் நிரந்தர வைப்பில் வைத்துள்ள பிரதேச சபை என்ற பெருமையை துணு க்காய் பிரதேச சபை பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்டுள்ள இப்பிரதேச மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-2-15)

## பிற்போடப்பட்டுள்ளது

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதிய சங்கத்தினால் இம்மாவட்டத்திற்குட்பட்ட இரு பிரதேச செயலகப்பிரிவுகளுக்கான பொது கூட்டங்களும் புதிய நிர்வாகத் தெரிவுகளும் பிற்போடப்பட்டுள்ளதாக இச்சங்கத் தலைவர் அ. கனகரத்தினம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய பளை பிரதேச செயலக பிரிவில் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கும் கண்டாவளை பிரதேச செயலகப்பிரிவில் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கும் நடைபெறவுள்ளது. குறித்த பிரதேச செயலக பிரிவுகளுக்கான பொதுக் கூட்டங்களும் புதிய நிர்வாகத் தெரிவுகளும் முறையே எதிர்வரும் 21, 23 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியும் வாய்ப்பும் சந்திக்கும் போது அந்த இரண்டையும் அதிர்ஷ்டம் இணைத்து வைக்கிறது. – ஓர் அறிஞன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சீதையின் காத்திருப்பும் கும்பகர்ணனின் உறக்கமும்

இந்தியாவின் விருப்பம் போல பொறுமையுடன் காத்திருப்போம் என்று வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்த போது, பொறுமையுடன் இருங்கள் என்று கூறியிருந்தார். பிரதமர் மோடியின் அறிவுரைக்கு அமைவாகவே பொறுமையுடன் காத்திருப்போம் என்று முதல்வர் விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

பொறுமையுடன் இருங்கள் என்ற பிரதமர் மோடியின் கருத்தும் பொறுமையுடன் காத்திருப்போம் என்ற முதல்வர் விக்னேஸ்வரனின் கருத்தும் வேறுபட்டவை என்றே பொருள் கொள்ளத்தோன்றும்.

அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதை, இராமனின் வருகைக்காக காத்திருந்தாள். அந்தக் காத்திருப்பு இராமர் வந்து தன்னை மீட்கவேண்டும் என்ற நினைப்போடு சார்ந்தது.

எனினும் சீதையின் பொறுமைக்கான நோக்கத்தை இராவணன் அறிந்திலன். எதுவும் செய்ய முடியாத நிலையிலேயே சீதை பேசாதிருக்கிறாள் என்பது இராவனேஸ்வரனின் நினைப்பு.

ஆனால் அனுமனுக்கும் சீதைக்கும் மட்டுமே அந்த இரகசியம் தெரிந்திருந்தது. இராமன் தன்னை அழைத்துச் செல்வதே அவனுக்குப் பெருமை தருவதாகுமென்று வாயுபுத்திரனிடம் கற்பின் செல்வி கூறிய செய்தியை யாரும் அறிந்திலர்.

அதேநேரம் இலங்கை வேந்தனுடன் இராமர் யுத்தம் புரிய வந்துள்ளார். போர் தொடங்கிவிட்டது. கும்பகர்ணன் நீள் உறக்கம் கொள்கின்றான். அவனின் உறக்கத்தைக் கலைக்க ஒரு பெரும் சேனை களத்தில் இறங்க வேண்டியதாயிற்று. கும்பகர்ணனின் உறக்கம் பொறுமையின் பாற்பட்டதோ அல்லது காத்திருப்புக்கானதோ அல்ல. அது உறக்கம் என்னும் இருளுக்குள் அகப்பட்டதன் வினைப்பயனாகும்.

கும்பகர்ணன் உறங்காமல் இருந்திருந்தால், இராமர் சேனை இலங்கையின் எல்லையில் வைத்தே விரட்டப்பட்டிருக்கலாம் என்று எண்ணுவதில் தப்பில்லை.

ஆக, கும்பகர்ணனின் உறக்கம் சோம்பலின் பாலானது. அந்த உறக்கம் அவனின் இனம் அழிவதற்கே உதவியது. ஆனால் சீதையின் காத்திருப்பு இலட்சியத்தை அடைவதற்கு வழிவகுத்தது.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் பிரதமர் மோடி கூறிய பொறுமை என்பது சீதையின் பொறுமையை ஒத்தது.

எங்கள் முதல்வர் கூறுகின்ற, பொறுமையுடன் காத்திருப்பு என்பது கும்பகர்ணனின் உறக்கம் போன்றது. பொறுமையாக இருங்கள் என்று பிரதமர் மோடி கூறிவிட்டார் என்பதற்காக; பேசாதிருப்பது அல்லது ஓய்வெடுப்பதென்று யாரும் பொருள்கொள்ளக் கூடாது.

அவ்வாறு பொருள்கொண்டால் தமிழினத்தின் இலட்சியம் தடைப்பட்டுப் போகும். எனவே, பொறுமையாக இருத்தல் என்பது; தீர்மானங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்பவற்றை ஒத்திவைத்தல் என்றே பொருள்படும்.

அதற்காக ஜெனிவாவிற்குச் சென்று சர்வதேச விசாரணையை துரிதப்படுத்துங்கள்; உள்ளக விசாரணையில் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை என்றெல்லாம் எடுத்துரைப்பதை ஒரு போதும் ஒத்திவைக்கக் கூடாது.

அது எங்களின் உரிமையைப் பெற்றுத்தரக் கூடிய முக்கிய விடயம். இந்தியாவை எந்தளவு தூரம் நாம் நம்புகிறோமோ அதற்கு ஈடாக அல்லது ஒரு படி மேலாக இலங்கை மீதான சர்வதேச விசாரணையை தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

சர்வதேச விசாரணையை வலியுறுத்துவது மைத்திரிக்கோ மோடிக்கோ எதிரானதல்ல. அது போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் இனம் தனக்கு ஏற்பட்ட இழப்பிற்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நியாயமான எதிர்பார்ப்போடு சம்பந்தப்பட்டது.

ஆகையால், பொறுமையுடன் காத்திருப்போம் என்று முதல்வர் விக்னேஸ்வரன் கூறியதன் கருத்து உரிமையை பெறுவதற்கான முயற்சியில் எந்தத் தாமதத்தையும் தடையையும் ஏற்படுத்தாது என்பதாக இருக்க வேண்டும் என்பதே நம் விருப்பம்.

# றோவுக்காக உளவு பார்த்தோரை இறுதியாகவே கண்டுகொண்டேன்

## முன்னாள் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் பணியாற்றிய றோ உளவு பிரிவின் முன்னாள் அதிகாரியை உளவு பார்க்க, கோத்தபாய ராஜபக்ஷ சில குழுக்களை நியமித்திருந்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த குழுக்கள் றோ உளவு பிரிவிற்காக தமது தரப்பின் உளவு தகவல்களை திரட்டியதாகவும் இறுதியிலேயே இதனை தாம் அறிந்து கொண்டதாக முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இந்தியப் பிரதமர் மோடியுடன் நடைபெற்ற சந்திப்பு குறித்து பேசுவதற்காக மிரிஹானையில் வீடொன்றில் தங்கியிருந்த மகிந்த ராஜபக்ஷவை சிலர் சென்று சந்தித்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மோடி நல்லவர். எனினும் றோவிடம் இருந்துதான் தப்பிக்க முடியாது. இலங்கையில் இருந்த றோ அமைப்பின் பிரதானி இளங்கோவன்தான் என்னை இந்த நிலைக்கு ஆளாக்கினான்.

அவனை உளவு பார்க்க கோத்தபாய சில குழுக்களை நியமித்திருந்தார். ஆனால், இவர்கள் றோவுக்காக எங்களை உளவு பார்த்துள்ளனர்.

இறுதியில் தான் இது புரிந்தது. அறிந்தபோது ஊர்வலம் சென்று சேர்ந்துவிட்டது. தாஜ் ஹோட்டலுக்கு என்னை அழைப்பித்து மோடியை சந்திக்க வைக்க வேண்டும் என்ற தேவையே இந்தியர்களுக்கு இருந்தது. நான் அதற்கு இணங்கவில்லை.

மோடியுடன் 10 நிமிடம் தனியாக பேச வேண்டியே தேவை எனக்கு இருந்தது. இதன் காரணமாகவே நான் இந்திய தூதுவரின் இல்லத்தில் அவரை சந்தித்தேன்.

அவர்கள் எனக்கு தேவையான வகையில் வேலை செய்ய வேண்டுமேயன்றி, நான் அவர்களுக்கு தேவையான வகையில் வேலை செய்ய மாட்டேன்.

அவர்களின் தாளத்திற்கு ஆடும் ஆள் நானில்லை என இந்திய பிரதமருடனான சந்திப்பு குறித்து மகிந்த விளக்கியுள்ளார். (எ-11)

# அமைச்சரவைப் பேச்சாளர் தான் விரும்பியதை பேசுகிறார்

## ஊவா முதலமைச்சர் குற்றச்சாட்டு

(பதுளை)

அமைச்சர் ராஜித சேனாரத்ன அமைச்சரவை பேச்சாளர் என்பதற்காக தனக்கு எண்ணத் தோன்றுவதை எல்லாம் அறிவிக்க முடியாது எனவும் அவ்வாறு பேச அனுமதிக்கவும் முடியாது என்றும் ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றி பெறுவதற்காக நாங்களே கஷ்டப்பட்டோம். தேர்தல் பிரசாரங்களின் போது ஒரு கொடியை அசைப்பதற்கு கூட யாரும் இருக்கவில்லை.

நாங்களே தொண்டையில் இரத்தம் வரும் அளவு கத்தி தேர்தல் பிரசாரம் செய்தோம். அவ்வாறு இருக்கும் போது அமைச்சரவை பேச்சாளர் தான் விரும்பியவாறு அரசாங்கத்தை பற்றி பேசுகின்றார்.

அப்படி பேசுவதற்கு அனுமதிக்க முடியும் பரவாயில்லை. நாங்கள் கஷ்டப்பட்டு ஜனாதிபதியை வெற்றிபெற செய்தோம். ஆனால் அரசாங்கத்தில் இருந்து கொண்டு அவர்களுக்கு விரும்பியது போன்று பேச ஆரம்பித்தால் பிரச்சினைகளே ஆரம்பிக்கும்.

எங்கள் கட்சிக்காரர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நாங்களே பதில் சொல்ல வேண்டி உள்ளது. நாங்கள் கஷ்டப்பட்டு விட்டு மற்றவர்கள் முடிவுகளை வழங்க அனுமதிக்க முடியாது எனவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (எ-11)

# முன்னாள் ஜனாதிபதியின் பணம் பஹாமஸ் வங்கிக்கு மாற்றம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சட்டவிரோதமான முறையில் ஈட்டப்பட்ட 1935 மில்லியன் டொலர் பணத்தை நான்கு இலங்கையர்கள் டுபாய் வங்கியிலிருந்து பஹாமஸ் வங்கிக்கு மாற்றியுள்ளார்கள் என தகவல்கள் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சட்டவிரோதமான முறையில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக அரசாங்கம் ஏற்கெனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ் விடயம் குறித்து மக்கள் விடுதலை முன்னணியினர் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

குறித்த விசாரணைகள் தொடர்பாக நான்கு இலங்கையர்களுக்கு அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் இரகசியமாக தகவல்களை வழங்கியுள்ளதாகவும், விசாரணைகளை நடத்த நியமிக்கப்பட்ட அதிகாரிகளே இவ்வாறு இரகசியமாக தகவல்களை வழங்கியுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த விபரங்களின் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொண்டு நாட்டு மக்களுக்கு இது பற்றிய தகவல்களை அம்பலப்படுத்துமாறு மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதியிடம்கோரியுள்ளது.

விசாரணை தொடர்பாக தகவல் வழங்கிய காரணத்தினால் அவர்கள் கணக்குகளை டுபாய் வங்கியில் இருந்து பஹாமஸிற்கு மாற்றியுள்ளதாகவும் மக்கள்விடுதலை முன்னணி தெரிவிக்கின்றது. (எ-11)

# மூன்று கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருட்டு

(கரணவாய்)

நெடுங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லைத்தீவு வீதியில் 3 கடைகள் உடைக்கப்பட்டு பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு முல்லைத்தீவு வீதியில் உள்ள இரும்புக்கடை, சலூன், பலசரக்குக் கடை ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளது.

3 கடைகளிலும் இருந்து தலா 3 இலட்சம் ரூபாயிற்கு மேற்பட்ட பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக கடைகளின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடை உரிமையாளர்கள் சம்பவம் நடைபெற்ற அன்று இரவு கடையை மூடிவிட்டு சென்று மறுநாள் காலை திறந்தபோது பின்கதவுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் அனைத்தும் திருடப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து நெடுங்கேணி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக் விசாரணைகளை மேற்கொண்டதுடன் கைரேகைப் பதிவையும் மேற்கொண்டனர்.

இதேவேளை கடைகளில் இருந்த பொருட்கள் அனைத்தும் வாகனம் மூலம் பின்வாசல் வழியாக எடுத்துச் சென்றமைக்கான அடையாளம் இருப்பதாக கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ-2,60)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



முன்னேறிச்செல்லுங்கள், முன்னேறிச் செல்லுங்கள் வீரர்களே! கட்டுண்டவர்களின் தளைகளை வெட்டியெறியவும் எளியவர்களின் துயரச் சுமையைக் குறைக்கவும் பாமரர்களின் இருண்ட உள்ளங்களை ஒளிபெறச் செய்யவும் முன்னேறிச் செல்லுங்கள்.

'அஞ்சாதே அஞ்சாதே' என்று முழங்குகிறது வேதாந்த முரசு. பூமியில் வசிக்கின்ற மனிதர்கள் அனைவருடைய இதய முடிச்சுக்களையும் அது அவிழ்த்தெறியட்டும்.

நம் மாணவர்கள் பெறும் கல்வி எதிர்மறையானதாக உள்ளது. மாணவன் புதிதாக ஒன்றையும் கற்பதில்லை; அதேவேளையில் தன்னிடம் உள்ளவற்றையும் இழக்கிறான்.

கல்வியால் நம்பிக்கை வருகிறது. தன்னம்பிக்கையில் வலிமையால் உள்ளிருக்கும் ஆன்மா விழித்தெழுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் விக்கெட் கீப்பர் சப்ராஸ் சாதனை



உலகக்கிண்ணத்தில் சதம் அடித்த முதல் பாகிஸ்தான் விக்கெட் கீப்பர் என்ற பெருமையை சர்ப்ராஸ் அகமது பெற்றுள்ளார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுத்தொடரின் லீக் போட்டியில் அயர்லாந்து அணிக்கு எதிராக பாகிஸ்தான் விக்கெட் கீப்பர் சர்ப்ராஸ் அகமது 101 ஓட்டங்கள் விளாசினார்.

உலகக்கிண்ண போட்டி வரலாற்றில் பாகிஸ்தான் விக்கெட் கீப்பர் ஒருவர் சதம் விளாசியமை இதுவே முதல் முறையாகும்.

இதற்கு முன்பு 1999 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக மொயின்கான் 63 ஓட்டங்கள் எடுத்ததே உலகக்கிண்ணத்தில் பாகிஸ்தான் விக்கெட் கீப்பர் ஒருவரின் சிறந்த ஓட்டங்களாக இருந்தது.

இந்த உலகக்கிண்ணத்தில் கலந்து கொண்ட 14 அணிகளில் ஆப்கானிஸ்தானை தவிர்த்து மற்ற அனைத்து அணிகளும் இப்போது சதத்தை பதிவு செய்து விட்டன.

இந்த உலகக்கிண்ணத்தில் விக்கெட் கீப்பர் அடித்த 7 ஆவது ச்தம் இதுவாகும். ஒட்டுமொத்த உலகக்கிண்ண போட்டிகளில் விக்கெட் கீப்பர் மூலம் இதுவரை 15 சதங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் இலங்கை விக்கெட் கீப்பர் சங்கக்கராவின் பங்களிப்பு மட்டும் 5 சதமாகும்.

அயர்லாந்து அணித்தலைவர் போர்ட்டர்பீல்டு 107 ஓட்டங்கள் எடுத்தார். உலகக்கிண்ணத்தில், டெஸ்ட் அந்தஸ்து பெறாத ஒரு அணியின் தலைவர் சதத்தை எட்டுவது இதுவே முதல் முறையாகும்.

பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா-உல்-ஹக் காலால் ஸ்டம்பை மிதித்து 'ஹிட் விக்கெட்' முறையில் ஆட்டம் இழந்தார். உலகக்கிண்ண போட்டிகளில் ஒரு வீரர் ஹிட் விக்கெட் ஆவது இது 9 ஆவது முறையாகும். இந்த உலகக் கிண்ணத்தில் இது 2 ஆவது நிகழ் வாகும். ஏற்கனவே சிம்பாவேயின் சகப்வா, ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு எதிராக இவ்வாறு ஆட்டமிழந்தனர். (க)




## முதலாவது காலிறுதிப்போட்டி (நாளை)




முதல் காலிறுதிப் போட்டி

முதலாவது காலிறுதி போட்டி குழு A இல் மூன்றாமிடத்தைப் பெற்ற இலங்கை அணிக்கும் குழு B இல் இரண்டாமிடத்தைப் பெற்ற தென்னாபிரிக்கா அணிக்குமிடையில் அவுஸ்திரேலியாவின் சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் 18 ஆம் திகதி புதின்கிழமை இலங்கை நேரப்படி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

# கோலியுடனான காதல் பற்றி பதிலளிக்க மாட்டேன்

## கோபத்தில் அனுஷ்கா



கோலியுடனான காதல் பற்றிய கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அனுஷ்கா சர்மா பத்திரிக்கையாளர்கள் மீது கோபம் அடைந்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் கோலியும், பாலிவுட் நடிகை அனுஷ்கா சர்மாவும் காதலித்து வருவது அனைவருக்கும் தெரியும்.

சமீபத்தில் கோலியுடனான காதல் பற்றி இத்தனை காலமாக வாய் திறக்காத அனுஷ்கா, ஆமாம் கோலியை காதலிக்கிறேன் என்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்திருந்தார்.


இந்நிலையில் ஒரு பட நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த அனுஷ்காவிடம், கோலி பற்றி பத்திரிக்கையாளர்கள் கேள்வி கேட்டவுடன் கோபத்தில் பொங்கி எழுந்து விட்டார்.

இந்த இடத்தில் எனது காதல் பற்றி பேச வேண்டியது இல்லை என்றும், இனி நான் என் தனிப்பட்ட வாழ்க்கை பற்றி பேசப் போவது இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் உங்களுக்கு பிடித்த விளையாட்டு எது என்று கேட்டதற்கு, டென்னிஸ் என பதில் அளித்து பத்திரிக்கையாளர்களை வியக்க வைத்துள்ளார். (க)

# சங்கக்காரவும் மலிங்கவும் அச்சுறுத்தலாக இருப்பர்

## ஹசிம் அம்லா



இலங்கையுடன் நாளை 18 ஆம் திகதி மோதும் கால் இறுதி ஆட்டம் குறித்து தென்னாபிரிக்க அணியின் முன்னணி பட்ஸமேன் ஹசிம் அம்லா கூறியதாவது,

இலங்கை அணி மிகவும் அபாயகரமான அணியாகும். அந்த அணி வீரர்கள் சிறப்பான கிரிக்கெட் ஆட்டத்திறனை வெளிப்படுத்தி வருகிறார்கள். துடுப்பாட்டத்தில் சங்கக்காரவும், பந்துவீச்சில் மலிங்காவும் எங்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பார்கள்.

சங்கக்காரவை முன்கூட்டியே ஆட்டம் இழக்க வைப்பது முக்கியமானது. எங்களது பந்துவிச்சாளர்கள் அவரை தொடக்கத்திலேயே அவுட் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இதேபோல மலிங்கா நேர்த்தியுடன் பந்து வீசக் கூடியவர். டெத் பவுலிங்கில் மிகவும் அபாரமாக வீசக்கூடிய உலகின் தலைசிறந்த பவுலர் ஆவார். அவரது பந்துவீச்சில் விளையாடிய அனுபவம் எங்களுக்கு அதிகமாக இருப்பது அதிர்ஷ்டமே.

சிட்னி மைதானத்தில் கால் இறுதியில் விளையாடுவது மகிழ்ச்சி அளிக்கிறது. இங்கு விளையாடுவதை ஒவ்வொரு வீரரும் விரும்புவார்கள். இவ்வாறு ஹசிம் அம்லா கூறியுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சமியுடன் கருத்து வேறுபாடு இல்லை

## மே.தீவுகளின் கப்டன் ஹோல்டர்

மேற்கிந்திய தீவுகள் அணியின் கப்டன் ஹோல்டருக்கும், முன்னாள் கப்டன் டாரன் சமிக்கும் இடையே நேற்று முன்தினம் போட்டியின்போது கருத்து வேறுபாடு ஏற்பட்டது.


ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் கால் இறுதிக்கு அந்த அணி நுழைந்தது.

ஆட்டத்தின் 30 ஆவது ஓவரில் முன்னாள் கப்டன் டாரன் சமி பந்து வீசினார். 4 ஓட்டங்களை அவர் விட்டுக் கொடுத்தார். ஆனால் அவருகக்கு கப்டன் ஹோல்டர் மேலும் பந்து வீச வாய்ப்பு கொடுக்கவில்லை.

இதனால் அவருடன் டாரன் சமி வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பதிலுக்கு ஹோல்டரும் வாக்குவாதம் செய்தார். இருவருக்கும் கடுமையாக வாக்குவாதம் நிலவியது.

இதுகுறித்து ஆட்டம் முடிந்த பிறகு ஹோல்டர் கூறியதாவது,

ஆடுகளத்தில் எனக்கும், டாரன் சமிக்கும் இடையே சிறிது கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இது ஆட்டத் தின் ஒரு பகுதியாகும். இதனால் மேற்கிந்திய தீவுகள் வீரர்கள் இடையே எந்த பிளவும் இல்லை. போட்டி முடிந்த பிறகு நாங்கள் இருவரும் கைகுலுக்கி கொண்டு சிரித்துக் கொண்டோம் இவ்வாறு ஹோல்டர் கூறியுள்ளார். (க)



# இங்கிலாந்து அணியில் மஹேல ஒப்பந்தமானார்

இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தன இங்கிலாந்தின் சசெக்ஷ் அணிக்காக ஒப்பந்தமாகினார். கவுண்டி அணிகளுக்கு இடையிலான இருபது- 20 போட்டியிலேயே இவர் சசெக்ஷ் அணிக்காக ஒப்பந்தமானார். முன்னதாக இலங்கை அணியின் நட்சத்திர வீரரும் இவரது நண்பருமான குமார் சங்கக்கார சர்ரே அணிக்காக ஒப்பந்தமா னார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுத்தங்களை சமாளித்து வெற்றியை பெற முடியும்

## அத்தபத்து நம்பிக்கை



இலங்கை அணியின் வீரர்களுக்கு வாழ்வா சாவா போட்டிகளில் அழுத்தங்களை சந்திப்பது எவ்வாறு என நன்றாக தெரியும் என இலங்கை கிரிக்கட் அணியின் பயிற்றுவிப்பாளர் மார்வன் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் உலகக் கிண்ண குழுவில் உள்ள வீரர்கள் மற்றைய அணியில் உள்ள வீரர்கள் விளையாடிய போட்டிகளிலும் பார்க்க கூடுதலான போட்டிகளில் விளையாடியவர்கள்.

குறிப்பாக 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் அடங்கலாக அதிகமான அவ்வாறான போட்டிகளில் விளையாடியுள்ளனர்.

வேறு எந்த அணியும் விளையாடாதளவு கடந்த 7 வருடங்களில் இலங்கை வீரர்கள் வாழ்வா சாவா போட்டிகளில் விளையாடியுள்ளனர்.

உலகக் கிண்ண தொடரில் 5 போட்டிகளில் கடந்த இரண்டு உலகக கிண்ணங்களிலும் விளையாடியுள்ளனர். இரண்டு இறுதிப் போட்டிகளிலும் மாத்திரமே அவர்கள் தோல்விகளை சந்தித்தனர்.

அதேவேளை கடந்த உலக இருபது - 20 தொடரில் வெற்றி பெற்றுள்ளனர். அதற்கு முதல் நடைபெற்ற உலக 20-20 தொடரில் இறுதிப் போட்டியில் தோல்வியை சந்தித்தனர்.

லசித் மலிங்கவே இவ்வாறான முக்கிய போட்டிகளை வெற்றி பெற்று தருபவர் என மார்வன் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

முதல் போட்டியில் மோசமான பந்துவீச்சை காட்டி இருந்தாலும் பின்னர் நடைபெற்ற போட்டிகளில் சிறப்பாக பந்துவீசியுள்ளார்.

சிறந்த வீரர்கள் இவ்வாறே செயற்படுவார்கள். இனிவரும் போட்டிகளிலும் இவ்வாறு சிறப்பாக பந்துவீசி இலங்கை அணிக்கு வெற்றிகளை பெற்று தருவார் என மார்வன் அத்தபத்து நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்களே கூடுதலான ஓட்டங்களை பெற்றவர்கள் வரிசையில் இருக்கின்றனர். எனவே, துடுப்பாட்டமும் நல்ல முறையில் உள்ளது.

எனவே, முக்கிய போட்டிகளில் சரியாக விளையாடி அந்த நேரத்தில் ஓட்டங்களை பெற்று வெற்றியைப் பெறுவதே மிச்சம் உள்ளது. எங்களால் அழுத்தங்களை சரியாக சமாளித்து வெற்றிகளைப் பெற முடியும் என மார்வன் அத்தபத்து மேலும் தெரிவித்துள்ளார். (க)

# டிறிபேக் தாரகை வெற்றி

கந்தர்மடம் நியூஸ்ரார் அணிக்கு எதிரான மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ போட்டியில் சாவகச்சேரி டிறிபேக் தாரகை 3 இலக்கு களால் வெற்றி பெற்றுள்ளது.

30 பந்து பரிமாற்றங்களில் முதலில் துடுப்படுத்தாடிய நியூஸ்ரார் 28.3 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 104 ஓட்டங்களை பெற்றது. பந்து வீச்சில் றதஸ் 4, நிலான் 3, இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டிறிபேக் தாரகை 24.3 பந்து பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் சாந்தன், மற்றும் கோபிநாத் ஆகியோரின் 51 ஓட்ட இணைப்பாட்டத்தின் மூலம் வெற்றியை பெற்று கொடுத்தார்கள்.

துடுப்பாட்டத்தில் சாந்தன் 23, கோபிநாத் 28, பிரவீன் 14, தர்ஷன் 12 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்கள். (க)

# அமரர் சச்சிதானந்தம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி

## இணுவில் கலைஒளி சம்பியன்



முன்னாள் மானிப்பாய் இலங்கை வங்கியின் முகாமையாளர் அமரர் சச்சிதானந்தம் ஞாபகார்த்தமாக இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் கொக்குவில் ஐக்கிய விளையாட்டு கழகத்தால் நடத்தப்பட்ட 6 பேர் அடங்கிய 5 பந்து பரிமாற்றங்களை கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்று போட்டியில,

கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதி போட்டியில் மோதிய இணுவில் கலைஒளி மற்றும் கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டு கழகங்களுக்கிடையிலான மோதலில் இணுவில் கலைஒளி வெற்றிபெற்று வெற்றி கிண்ணத்தை தன்வசமாக்கியது

இதில் முதலில் துடுப்பெடுத்து ஆடிய இணுவில் கலைஒளி 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களை குவித்தது.

இதில் அணி சார்பாக மோகன்ராஜ் 48 ஓட்டங்களையும், கோகுல்ராஜ் 32 ஓட்டங்களையும்பெற்று அணியை உறுதியான வலுவுக்கு இட்டு சென்றனர்.

102 என்ற வெற்றி இலக்கை கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டு கழகம் 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 78 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இவ்வணிக்கு தீபன் 42 ஓட்டங்களையும் நவயுகன் 25 ஓட்டங்களையும் பெற்று அணிக்காக போராடிய போதும் இறுதியல் இணுவில் கலை ஒளி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (க)

# விளையாடுவதில் அர்த்தமில்லை அயர்லாந்து தலைவர் வில்லியம்



உலகக் கிண்ண தொடரில் பங்குபற்றும் அணிகள் 10 ஆக குறைக்கப்பட்டால் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடுவதில் அர்த்தமில்லை என அயர்லாந்து அணித் தலைவர் வில்லியம் போட்டர் பீல்ட் தெரிவித்துள்ளார்.

இந்த உலகக்கிண்ண தொடரில் அவர்கள் சிறப்பாக விளையாடி வெளியேறினர். பலமான அணிகளுக்கு சவாலாக விளங்கினர்.

பாகிஸ்தான் அணியுடன் தோல்வியடைந்து வெளியேறியது கவலை என்றாலும் திறமையான அணி உலகக்கிண்ணத்தில் இருந்து வெளியேற்றப்படுகின்றது என்பது கவலையே.

துணை அங்கத்துவ நாடுகள் உலகக்கிண்ணத்தில் விளையாடும் வாய்ப்புகளை தொடர்ந்து இழக்கவிருக்கின்றன.

பலமான அணியாக அயர்லாந்து வளர்ந்து வருகின்ற போதும் இங்கிலாந்து பிராந்திய அணிகளின் ஆதிக்கம் பல வீரர்களை இங்கிலாந்து அணி நோக்கியும், இங்கிலாந்தின் பிராந்திய அணிகள் நோக்கியும் நகர்த்தியுள்ளன.

இங்கிலாந்து அணியின் தற்போதைய தலைவர் ஒய்ன் மோர்கன் அயர்லாந்து அணி வீரர் என்பது குறிபிடத்தக்கது.

எங்கள் கருத்துகள் கோரிக்கைகள் எல்லாவற்றையும் சர்வதேசக் கிரிக்கெட் பேரவை இன்னும் இரு வாரங்களில் மறந்துவிடும்.

இந்த பேச்சு இல்லாமல் போய்விடும். கிரிக்கெட்டை வளர்க்க விரும்பினால் அதிக அணிகளுக்கு வாய்ப்புகள் வழங்க வேண்டும்.

போட்டிகள் அதிக நாட்கள் எடுக்கின்றன என்ற காரணம் இருந்தாலும் அடுத்த உலகக் கிண்ண தொடர் இந்த தொடரைவிட இரண்டு மூன்று நாட்கள் அதிகமாக நடைபெறவுள்ளன.

அப்படியானால் ஏன் 10 அணிகள் விளையாடவேண்டும்? அதே வேளை 10 அணிகள் மாத்திரம் என்றால் மற்றைய அணிகள் கணக்கெடுக்கப்பட கூடாதா? என்ற கேள்விகளை வில்லியம் போர்ட்ஸ்பீல்ட் எழுப்பியுள்ளார்.

விளையாட்டை வளர்க்க வேணடும் என்றால் ஏதாவது இருக்க வேண்டும். நோக்கம், திட்டம் என்பன சரியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

10 அணிகளுக்கு மட்டும் தான் கிரிக்கெட் என்றால் விளையாடும் மற்ற மற்றைய அணிகள் என்ன செய்வது என்ற கேள்விகளை எழுப்பி தன மன ஆதங்கத்தை பாகிஸ்தான் அணியுடனான தோல்விக்கு பின்னர் வெளியிட்டார். பாகிஸ்தான் அணியுடனான போட்டியில் இவர் சதம் அடித்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III - 2015

## யாழ்.சென்றல் 2 ஆவது சுற்றுக்கு தெரிவு





சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III சுற்றுப் போட்டியில் இருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

இத்தொடரில் முதலாவது சுற்றில் 2 ஆவது போட்டியில் யாழ். சென்றல் அணி, அரியாலை சென்றல் அணியை 87 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 47 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 206 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சுதர்ஸன் 69, சலிஸ்ரன் 31, மில்லர் 21, சுபாதீஸ் 29 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜனன் 3, நிலோஜன், அரவிந்தன் ஆகியோர் தலா 2 இலக்குளைக் கைப்பற்றினர்.

207 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய அரியாலை சென்றல் அணி 32.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களையே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் துவாரகன் 35, கிருபாகரன் 17 நிலோஜன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் யசின்தன் 4, திருக்குமரன், சலிஸ்ரன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.சென்றல் அணி 2ஆவது சுற்றில் பற்றீசியன்ஸ் அணியை எதிர்கொள்வர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் அணி நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு யாழ்.சென்றல் அணி 8.93 புள்ளிகளையும், அரியாலை சென்றல் அணி 2.19 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டுள்ளன.

இப்போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிக்கு ஞானதயாளன், ஜெயதீபன் ஆகியோர் மத்தியஸ்தர் களாக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

21.03.15 அன்று ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து ஸ்ரான்லி அணியும், 22.03.2015 அன்று யாழ்.ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து திருநெல்வேலி சீ.சீ அணியும் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகசிய முகாம் தொடர்பான சாட்சியங்கள் உள்ளன!

## சுரேஷ் எம்.பி தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**இரகசிய முகாம்கள் தொடர்பான சாட்சியங்கள் தன்னிடம் உள்ளதாகவும் சாட்சியங்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால் அவற்றை வெளிப்படுத்த தான் தயார் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுத் தெரிவித்தார்.**



வளலாய் பகுதியில் சுரேஷ் எம்.பி

காணாமல் போனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரகசிய முகாம்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்படாமல் அவ்வாறான முகாம் இல்லை என பிரதமரும் நீதியரசரும் கூறுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதியின் ஊழல்கள் தொடர்பாகவும் அமைச்சர்களின் ஊழல்கள் தொடர்பாகவும் விசாரிக்க குழு அமைத்துள்ளார்கள். ஆனால், இரகசிய முகாம்கள் தொடர்பான விசாரணைகளை உரிய முறையில் நடத்தாது இராணுவ தளபதியும் கடற்படை தளபதியும் அவ்வாறான முகாம் இல்லை என கூறினர். எனவே, அவ்வாறான இரகசிய முகாம்கள் இல்லை என பிரதமரும் நீதியரசரும் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

திருகோணமலையில் கோத்தபாய எனும் பெயர் கொண்ட இரகசிய தடுப்பு முகாம் இருந்தது. அதில் 700 பேர் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது அவ்வாறான முகாம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் முன்னர் இருந்தது. இதற்கான சாட்சியங்கள் என்னிடம் உண்டு. முழுமையான விசாரணைகள் நடத்தப்பட்டு சாட்சியங்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால் சாட்சியங்களை முற்படுத்துவேன். அந்த முகாம் தொடர்பிலும் அந்த முகாமில் இருந்தவர்கள் யார்? அவர்கள் இப்பொழுது எங்கே? எதற்காக தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்கள்? போன்ற கேள்விகளுக்கு விடையையே நாங்கள் கோருகிறோம்.

இறுதி யுத்தத்தின் போது பேருந்துகளில் 20 ஆயிரம் பேர் ஏற்றி செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்கள். அவர்களை ஏற்றி சென்றதை அவர்களுடைய உறவினர்கள் நேரில் கண்டுள்ளார்கள். எனவே, இந்த விடயங்களை முன்னைய அரசாங்கம் போல் மூடி மறைக்க முயலாமல் அது தொடர்பான பூரண விசாரணையை புதிய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

அதனை விடுத்து கடற்படையிடம் கேட்டோம், இராணுவத்தினரிடம் கேட்டோம் அவர்கள் அவ்வாறான முகாம்கள் இல்லை என்கிறார்கள். எனவே அவ்வாறான முகாம் இல்லை என்ற பதிலை நாங்கள் எதிர்பார்க்கவில்லை என சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார். (எ-4)

### மண்ணெண்ணெய்...

மணியளவில் தனது வீட்டின் முன்பக்கத்தில் குறித்த குழந்தையின் தாய் மண்ணெண்ணெய் விளக்கு ஒன்றினை ஏற்றிக்கொண்டிருந்துள்ளார்.

இந்நிலையில் மண்ணெண்ணெய் போத்தலை பூட்டிவைக்காது வீட்டின் அறைக்குள் சென்று பிறிதொருவிளக்கினை எடுத்துவரச் சென்றுள்ளார்.

இந்தச் சமயம் பார்த்து குறித்த குழந்தை போத்தலை எடுத்து மண்ணெண்ணெயை அருந்தியுள்ளது. இதனையடுத்து சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பாலகி பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் குறித்த பாலகி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பாலகியின் மரணம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

### விருப்பு...

களை செய்வது தொடர்பாக நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அரசியல் கட்சித் தலைவர்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்றுக்கொள்ளும் கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

100 நாள் வேலைத்திட்டத்திற்குள் வழங்கிய வாக்குறுதியின்படி தேர்தல் முறையில் மாற்றங்களை செய்யும் அடிப்படை பணிகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

விருப்பு வாக்கு முறைக்கு மாறான, நாட்டுக்கு பொருத்தமான மற்றும் தகுதியான தேர்தல் முறை தொடர்பாக இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அனைத்து கட்சிகளும் கருத்துக்களையும் யோசனைகளையும் முன்வைத்ததாகவும் தினேஷ் குணவர்தன குழுவின் அறிக்கை தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

புதிய தேர்தல் முறையை உருவாக்க தேவையெனில் துணைக்குழு ஒன்றை நியமிக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

பண பலத்தில் அரசியலுக்குள் பிரவேசித்து விருப்பு வாக்கு முறையை பிரயோசனப்படுத்துவதனால், அரசியல்வாதிகளுக்கு இருந்த கௌரவமும் குணாதிசயமும் சீர்கெட்டு போயுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் ஷமல் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்களும் செயலாளர்களும் கலந்து கொண்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு கூறியுள்ளது. (எ-11)

### காணாமல் போன...

பவர் தனது உறவினர் வீட்டில் இருந்தபோது இனந்தெரியாத நபர்களால் அழைத்து செல்லப்பட்டார் என்றும், அவர் வீடு திரும்பாத நிலையில் குறித்த இளைஞரின் தாயார் பல இடங்களிலும் முறைப்பாடு செய்து மகனைக் கண்டுபிடித்து தருமாறு கோரி வந்திருந்தார்.

இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் 14-ம் திகதி பொங்கல் தினத்தன்று வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் குறித்த இளைஞனும் கலந்து கொண்ட படம் இணையதளத்தில் வெளியாகியது. இதைப் பார்த்த தாயார் தனது மகனை அடையாளம் கண்டு கொண்டுள்ளார்.

இதனையடுத்து அந்தத் தாய் நேற்று திங்கட்கிழமை சட்டத்தரணி கே.எஸ்.ரெட்ணவேல் ஊடாக மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்ட மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிவான் அலெக்ஸ்ராஜா ஆசீர்வாதம் கிறேசியன், விசாரணையை மேற்கொண்டதுடன், காணாமற்போன இளைஞன் வெலிக்கடை சிறைச்சாலையில் இருப்பாரானால் அவர் எதற்காக கைதுசெய்யப்பட்டார்? தடுத்துவைக்கப் பட்டிருப்பதின் காரணம் என்ன? போன்ற விவரங்களை பெற்று மன்றில் சமர்ப்பிக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் இவ்வழக்கை மீண்டும் ஏப்ரல் 27ஆம் திகதிக்கு விசாரணைக்காக ஒத்தி வைத்தார். (எ-11)

### மகிந்தவின்...

டுள்ளார். மகிந்தவிற்கு அரசாங்கம் எவ்வாறான சலுகைகளை வழங்குகின்றன என்பது குறித்தும் ஆராய்ந்துள்ளார்.

இதன்போது பெரும் எண்ணிக்கையிலான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மகிந்தவின் பாதுகாப்பிற்காக கடமையில் அமர்த்தப்பட்டுள்ளதனை தெரிந்து கொண்டார்.

ஜனாதிபதி செயலகத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி எனக்கு அவ்வளவு பாதுகாப்பு வழங்கப்படவில்லை, மகிந்தவிற்கு இவ்வளவு பாதுகாப்பு வழங்கக் கூடாது என சந்திரிகா கூறியுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை மகிந்தவின் பாதுகாப்பு வாகனங்களும் அகற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாதுகாப்பு நோக்கில் வழங்கப்பட்டிருந்த விசேட வாகனங்கள் பல அகற்றப்பட உள்ளன. பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய இந்த வாகனங்கள் மீளப் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன. (எ-11)

### இடைக்கால...

நிறைவடைந்துள்ளது என ஆணைக்குழுவின் செயலாளர் குணதாச ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

கடந்த அமர்வினை திருகோணமலையில் நடத்தியிருந்த ஆணைக்குழு அடுத்த அமர்வினை அம்பாறையில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

### மன்னார்...

லான சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை அகழ்வு பணிகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருப்பதாக நீதிமன்றத்தில் தோன்றி வாதிட்ட சட்டத்தரணிகளில் ஒருவராகிய விவேகானந்தன் புவிதரன் தெரிவித்தார்.

அதேவேளை, முன்னர் அகழ்வு வேலைகள் இடம்பெற்ற பகுதியில் காணப்பட்ட பாழடைந்த கிணறு ஒன்று முழுமையாக மூடப்பட்டுள்ளதாகவும், அந்தக் கிணற்றின் உள்ளேயும் மனித எலும்புக் கூடுகள் இருக்கலாம் என்ற சந்தேகம் தெரிவிக்கப்பட்டு, அந்தக் கிணறு இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து, அதனையும் தோண்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காணாமல் போயுள்ளவர்களின் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர்.

இதனையடுத்து அந்தக் கிணறு இருந்த இடத்தைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது. அத்துடன் இந்தக் கிணறு சம்பந்தமாக கோரிக்கை விடுத்திருந்த சட்டத்தரணிகளும் அந்த இடத்தைச் சென்று பார்வையிடுவதற்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இதனையடுத்து, அந்தப் பகுதிக்குச் சென்ற சட்டத்தரணிகளினால் அந்தக் கிணறு இருக்குமிடத்தைக் கண்டறிய முடியாதிருந்ததாகவும் அங்கு மழை வெள்ளம் தேங்கியிருந்ததனால், கோடை காலத்தில் அதனைக் கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரன் தெரிவித்தார். இந்த வழக்கில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் உள்ளிட்ட சட்டத்தரணிகளும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். (எ-11)

### அனைத்துக் கட்சிக்...

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், செயலாளர் நாயகமும் ராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹசன் அலி மற்றும் பிரதிச் செயலாளர் நாயகமும் கல்முனை மாநகர முதல்வருமான சட்டமுதுமாணி எம்.நிஸாம் காரியப்பர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இக்கூட்டத்தில் தேர்தல்கள் ஆணையாளர், சட்டமா அதிபர், நில அளவைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆகியோர் விசேடமாக கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் கட்சிகளின் பிரதிநிதிகளிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

நீண்ட நேரம் எதிரும் புதிருமான கருத்துகள் விவாதிக்கப்பட்ட போதிலும் தீர்மானங்கள் எதுவும் எட்டப்படாமல் அக்கூட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநிதிகள் மீண்டும் இன்று கூடி புதிய தேர்தல் முறை குறித்து ஆராய்வது என தீர்மானிக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org